தொகுதி I



# வெலிகம நகர அபிவிருத்தி திட்டம்
# [2019 - 2030]



# வெலிகம நகர அபிவிருத்தி திட்டம்

# 2019 – 2030

## தொகுதி I

நகர அபிவிருத்தி அதிகாரசபை
செத்சிறிபாய
பத்தரமுல்ல
2019

## ஆவணங்கள் தொடர்பான தகவல்கள்

அறிக்கையின் தலைப்பு : வெலிகம நகர அபிவிருத்தி திட்டம்

திட்டவமைப்பு வலையத்தின் எல்லைகள் (பிரகடனப்படுத்தப்பட்ட) : வெலிகம நகர அபிவிருத்திப் ஆளுகைப் பிரதேசம்

வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் : ……………….

பங்கீடுபாட்டளர்கள் : வெலிகம நகர அபிவிருத்தி ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், வெலிகம நகரை நோக்கி வரும் மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்

சமர்ப்பிக்கப்பட்ட திகதி : 2017-12-19

ஆவணத்தின் தன்மை : இறுதி ஆவணம்

**சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பான தகவல்கள்**

| பிரதி இலக்கம் | விபரம் | சமர்ப்பிக்கப்பட்ட திகதி | வழங்குவதற்கான அங்கீகாரம் |
|---|---|---|---|
| 1 | வரைவு | 2018.09.25 | |
| 2 | இறுதியானது | 2019.03.30 | |

இந்த அறிக்கை அதிகாரம் பெற்ற தரப்பினரால் வெளியிடப்படுவதோடு, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும். இந்த அறிக்கையில் காணப்படும் தகவல்களை வேறு தரப்பினரால் அல்லது வேறு நோக்கம் ஒன்றுக்காக பயன்படுத்துதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல்களை வேறு தரப்பினரால் அல்லது வேறு நோக்கம் ஒன்றுக்காக பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய பிரதிகூலங்களுக்கு அதிகாரசபை பொறுப்புக்கூறாது. மேலும், இந்த அறிக்கையிலுள்ள தரவுகள் அல்லது தகவல்களை ஒரு தரப்புக்கு வழங்குதல் அல்லது வேறு நோக்கம் ஒன்றுக்காக பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளுக்கு அதிகாரசபை பொறுப்பேற்காது. இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இரகசியத் தகவல்கள் புலமைச் சொத்துக்கள் ஆகும். அதிகாரம் பெற்ற தரப்பின் அங்கீகாரமின்ன்றி குறித்த தகவல்களை வழங்குதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

## முன்னுரை

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) - முதலாம் தொகுதி

நகர அபிவிருத்தி அதிகார சபை - இலங்கை (2019)

முழுப் பதிப்புரிமை உடையது. இது நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு வெளியீடாகும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றி இந்த வெளியீட்டை முழுமையாக அல்லது ஒரு பகுதியை மறு வெளியீடு செய்தல், விற்பனை செய்தல், வினியோகித்தல், எழுத்திலான அனுமதியின்றி பிரதி எடுத்தல் அல்லது நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக இறுவட்டுகளில் பதிதல் அல்லது வினியோகித்தல் அல்லது வியாபார நோக்கம் ஒன்றுக்காக பயன்படுத்துதல் கூடாது.

### வெளியீடு

நகர அபிவிருத்தி அதிகார சபை, 06,07 மற்றும் 09ஆம் மாடி 'செத்சிறிபாய', பத்தரமுல்ல

இலங்கை

இணையதளம் - www.uda.gov.lk

மின்னஞ்சல் - info@uda.gov.lk

தொலைபேசி இலக்கம் - +94112873637/ 0412230413

வெளியீடு – 2019

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் பிரதானமாக இரண்டு பகுதிகளை கொண்டுள்ளதோடு அது தொகுதி 01 மற்றும் தொகுதி 02 என வெளியிடப்படுகின்றது. இதன் முதல் தொகுதி இரண்டு பகுதிகளை கொண்டிருப்பதுடன் முதல் தொகுதியின் முதல் பகுதி அபிவிருத்தி திட்டத்தின் அறிமுகம், பின்னணி ஆய்வு, அபிவிருத்தி திட்டமொன்றின் தேவைப்பாடு தொடர்பான தகவல்களையும், அதன் இரண்டாம் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கு, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள், என்னக்கருசார் திட்டவமைப்பு, அபிவிருத்தி மூலோபாயங்கள் போன்றவற்றையும் கொண்டுள்ளது.


அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாவது தொகுதி தனியான ஒரு வெளியீடாகத் தயாரிக்கப்பட்டுள்ளது, அதில் 2019-2030 காலப்பகுதிக்காக பயனுறும் பிராந்தியமயமாக்கல் ஒழுங்கு விதிகள், காணி மற்றும் கட்டட அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் எனபன உள்ளடக்கப்பட்டுள்ளன.

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாத்தறை மாவட்டக் காரியாலயத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது, அதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு பிரிவுகள் மற்றும் வளவாளர்களின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஆதாரமாக அமைந்துள்ளன.
மேற்பார்வை

### மேற்பார்வை நடவடிக்கைகள்

கலாநிதி ஜகத் முனசிங்க தவிசாளர் - நகர அபிவிருத்தி அதிகார சபை, பொறியியலாளர் எஸ்.எஸ்.பீ ரத்நாயக்க, பணிப்பாளர் தலைமை அதிபதி - நகர அபிவிருத்தி அதிகார சபை, திட்டவமைப்பாளர் கே ஏ. டி. சந்திரதாச மேலதிகப் பணிப்பாளர் தலைமை அதிபதி - நகர அபிவிருத்தி அதிகார சபை, திட்டவமைப்பாளர் டி.எம்.பி ரணதுங்க பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி - நகர அபிவிருத்தி அதிகார சபை, திட்டவமைப்பாளர் கே. எச். எம். டப்ளியு. கே அபேரத்ன பணிப்பாளர் (தென் மாகாணம்) - நகர அபிவிருத்தி அதிகார சபை, திட்டவமைப்பாளர் லலித் விஜயரத்ன பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு) நகர அபிவிருத்தி அதிகார சபை

## கௌரவ அமைச்சரின் செய்தி



1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை கடந்த நான்கு தசாப்தங்களாக திட்டமிட்ட நகர அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்து வருகிறது. இன்றளவில் நகர அபிவிருத்தி அதிகாரசபை தனது பயணத்தில் மற்றுமொரு மைல்கல்லைக் கடந்து தெற்குப் பிராந்தியத்தின் சகல நகர அபிவிருத்திப் பிரதேசங்களும் அடங்கும் வகையில் விரிவான அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டம் ஒரு பாரிய நோக்கின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அந்தந்த பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்காக அன்றி, ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் பயனுள்ள வகையில் காணப்படுகின்ற மூலவளங்களை பல்வேறு மூலோபாயங்கள் ஊடாக பௌதீக, பொருளாதார, சமூக, மற்றும் சுற்றாடல் ரீதியான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பயன்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

என்னுடைய புரிதலின்படி இந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக தொழில்வாண்மையாளர்கள், நிபுணர்கள், பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் மக்களின் பங்களிப்புடன் நவீன முறைகளைப் பின்பற்றி சிறந்த தொழினுட்ப வழிமுறைகளும் புத்தாக்க அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், பணிப்பாளர் தலைமையதிபதி, திட்டவமைப்புக் குழுவினர் அத்துடன் இப்பணி வெற்றியடைவதற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலர்களின் அர்ப்பணிப்பை பாராட்டுகின்றேன். மேலும், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் குறைவின்றிக் கிடைத்ததால் லெவிகம நகர அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

**பாட்டளி சம்பிக்க ரணவக்க**
**மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி**
**அமைச்சர்.**

"சுஹுரூபாய"

பத்தரமுல்ல.

2019………………ஆம் திகதி

# கௌரவ தலைவரின் செய்தி



நகர அபிவிருத்தி அதிகாரசபை இன்றளவில் இலங்கையில் நகரத் திட்டவமைப்புக்களை தயாரிப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமான முதன்மை நிறுவனமாக காணப்படுவதோடு அதற்கு நகரச் சுற்றாடலை தரம் வாய்ந்ததாக முகாமைத்துவம் செய்யும் பொறுப்பும் அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நகரப் பிரதேசங்கள் மற்றும் அங்கு வாழும் மக்களின் இருப்பினை மேம்படுத்தி ஒழுங்குபடுத்தும் நோக்கத்திற்காக இந்த நிறுவனம் 1978இல் தாபிக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க திருத்தச்சட்டத்தின் 8அ (I))ஆம் பிரிவுக்கு அமைய அமைச்சரினால் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. வெலிகம நகர சபைக்கான அபிவிருத்தித் திட்டத்தின் தயாரிப்பும் பயனுறுத்தலும் அந்த ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தை நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனம் செய்ததன் விளைவாக நகர அபிவிருத்தி அதிகாரசபை வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் பௌதீக, பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் சார்ந்த விடயங்களை கவனத்தில் கொண்டு வெலிகம நகர அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் பணிகளை பூர்த்தி செய்துள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது நாம் கரடுமுரடான ஒரு பாதையில் பயணப்பட நேரிடும் என்பதுடன், சவால்கள், நம்பிக்கை இழப்புக்கள் மற்றும் எதிர்பார்த்த வகையில் அந்த பயணப்பாதை அமையாது என்பதையும் நாம் மறந்து விடவில்லை. நகர அபிவிருத்தி அதிகார சபையானது சமகாலத்தில் தேவையான முறைமைகள், சாதனங்கள் மற்றும் மூலோபாயங்களால் பலம்பெற்று சவால்களை எதிர்கொள்வதற்கு நம்பிக்கை இழப்புக்களுடன் எதிர் நீச்சலிட்டு வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தை "தென்னிலங்கையில் மலரும் சுற்றுலாவின் சொர்க்கபுரி"யாக மாற்றி அமைப்பதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ளது.

பரந்தளவிலான இந்த பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்பை வழங்கி அயராது உழைக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டவமைப்புக் குழுவுக்கும், பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் இத்தருணத்தில் என்னுடைய உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்திலும் குறைவின்றி ஒத்துழைப்பு கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

**கலாநிதி ஜகத் முனசிங்ஹ**
**தலைவர் - நகர அபிவிருத்தி அதிகார சபை**

2019..............ஆம் திகதி

## வெலிகம நகர சபைத் தலைவரின் செய்தி



நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெலிகம நகர அபிவிருத்தி பிரதேசத்திற்காக அபிவிருத்தி திட்டமொன்றைத் தயாரித்துள்ளமை தொடர்பில் என்னுடைய உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் வெலிகம அபிவிருத்தி பிரதேசத்திற்கே தனித்துவமான பண்புகள் பாதுகாக்கப்படும் வகையில் குறிப்பாக, சுற்றாடலிலுள்ள வளங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சி மற்றும் அதனால் பிரதேசத்துவாழ் மக்களுக்கு உச்ச அளவில் நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடியவாறு செயலாற்றியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

இந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும்போது, நாம் பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்தி முன்வைத்த யோசனைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமையை பாராட்டுவதோடு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 2030ஆம் ஆண்டளவில் வெலிகம நகரம் தென் மாகாணத்தில் சுற்றுலாவின் சொர்க்கப்புரியாக மிளிர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**ரோஹான் விஜேரத்ன ஜயவிக்கிரம**
**தலைவர்**
**நகர சபை**
**வெலிகம**

2019.03.30.

# நன்றி

மாத்தறை மாவட்டக் காரியாலயத்தினால் நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு மைல்கல்லாக இந்த அபிவிருத்தி திட்டத்தை அறிமுகம் செய்யலாம். இத்திட்டத்தை தயாரிப்பதற்கு உயரிய பங்களிப்பை வழங்கிய மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளர் உட்பட சகல பதவியினருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெலிகம நகரசபையின் தலைவர் கௌரவ றொஹான் ஜயவிக்கிரம உட்பட நகர சபையின் பதவியினர், வெலிகம பிரதேச செயலாளர் உட்பட்ட பதவியினர் மற்றும் அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் சகல பணியாளர்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக தமது நேரத்தையும் நிபுணத்துவ அறிவையும் பகிர்ந்து உதவிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கௌரவ கலாநிதி ஜகத் முனசிங்க, பொறியியலாளர் எஸ்.எஸ்.பீ ரத்நாயக்க, பணிப்பாளர் தலைமை அதிபதி, திட்டவமைப்பாளர் கே ஏ. டி. சந்திரதாச மேலதிகப் பணிப்பாளர் தலைமை அதிபதி, திட்டவமைப்பாளர் டி.எம்.பி ரணதுங்க பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (தென் மாகாணம்) நகரத் திட்டவமைப்பாளர் கே. எச். எம். டப்ளியு. கே அபேரத்ன பணிப்பாளர் (பூவியியற் தகவல் முறைமை) சேனானி சோமசேகர, பணிப்பாளர் (நிலக்காட்சி, முகாமைத்துவம்) சாந்தனா களுபஹன, பணிப்பாளர் (அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு) நகரத் திட்டவமைப்பாளர் லலித் விஜயரத்ன உள்ளிட்டோர் வழங்கிய அயறாத ஒத்துழைப்புக்கு எனது நன்றி.

மேலும், இத்திட்டத்தை தயாரிக்கும் பணிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு அவசியமான ஒத்துழைப்பினை வழங்கிய அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு, பூவியியற் தகவல் முறைமைப் பிரிவு, நிலக்காட்சி மற்றும் முகாமைத்துவ பிரிவின் சகல பணியாளர்கள் அத்துடன், பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மாத்தறை மாவட்ட காரியாலயத்தின் சகல பதவியினருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே. ஜீ. கல்யாணி இந்திகா**
பிரதிப் பணிப்பாளர் (திட்டவமைப்பு)
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
மாத்தறை மாவட்ட காரியாலம்.

## சமர்ப்பணம்

சமகால மற்றும் எதிர்கால பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் மறறும் முறையான நிர்மாணச் சூழலை உருவாக்குவதற்காக பல வழிகளிலும் பங்களித்த உங்கள் அனைவருக்கும்.

# பொருளடக்கம்
## பின்னிணைப்புக்கள்


| | |
|---|---|
| ஆவணம் தொடர்பான தகவல்கள் | ii |
| மாண்புமிகு அமைச்சரின் செய்தி | iv |
| கௌரவ தலைவரின் செய்தி | v |
| வெலிகம நகர சபைத் தலைவரின் செய்தி | vi |
| நன்றி | vii |
| சமர்ப்பணம் | viii |
| தேசப்படங்கள் | xi |
| நிழற்படங்கள் | xii |
| உருவக் குறிப்புக்கள் | xiii |
| வரைபுகள் | xiii |
| அட்டவணைகள் | xiii |
| 1 அறிமுகம் | 1 |
| 1.1 அபிவிருத்தி திட்டத்தின் பின்னணி | 1 |
| 1.2 திட்டவமைப்புக் குழு | 2 |
| 1.3 நோக்கெல்லை | 3 |
| 1.4 திட்டவமைப்புச் செயன்முறை | 5 |
| 2 ஆரம்ப ஆய்வு | 8 |
| 2.1 ஆய்வு வலையம் | 8 |
| 2.2 திட்டவமைப்புச் சூழ்நிலைமைமையும் தற்போதைய நிலையும் | 8 |
| 2.3 திட்டவமைப்பு பிரதேத்தை நிர்ணயித்தல் | 24 |
| 3 அபிவிருத்தி திட்டவமைப்பொன்றின் தேவைப்பாடு | 27 |
| இரண்டாம் பகுதி | |
| அமைச்சரின் அங்கீகாரம் | 36 |
| அரசாங்கத்தின் அறிவித்தல் | 37 |
| 4 அபிவிருத்தி திட்டவமைப்புச் சட்டகம் | 38 |
| 4.1 நோக்கு | 38 |
| 4.2 நோக்கின் வெளிப்பாடு | 38 |
| 4.3 நோக்கங்கள் | 40 |
| 4.4 குறிக்கோள்கள் | 40 |
| 5 பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான பகுப்பாய்வு | 41 |
| 6 அபிவிருத்தி திட்டம் | 74 |
| 6.1 எண்ணக்கருசார் திட்டவமைப்பு | 74 |
| 6.2 உத்தேச காணிப் பயன்பாட்டுத் திட்டம் | 78 |
| 6.3 பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டவமைப்பு | 83 |
| 6.3.1 உத்தேச சேவைத் திட்டம் | 83 |

6.3.2 சுகாதார வசதிகள் திட்டம் 86
6.3.3 கல்வி வசதிகள் திட்டம் 86
6.3.4 உத்தேச போக்குவரத்துத் திட்டம் 89
6.3.5 உத்தேச நீர் வழங்கல் திட்டம் 96
6.3.6 உத்தேச மின்சாரம் மற்றும் தரவு வடத் திட்டம் 98
6.3.7 சாக்கடை மற்றும் வடிகாமைப்புத் திட்டம் 100
6.3.8 கழிவுப்பொருள் முகாமைத்துவ திட்டம் 103
6.4 பொருளாதார அபிவிருத்தி மூலோபாயம் 104
6.4.1 பொருளாதாரத் திட்டம் 106
6.4.2 கைத்தொழில் திட்டம் 110
6.5 நிலைபேறான சுற்றாடல் அபிவிருத்தி மூலோபாயங்கள் 112
6.5.1 ஒதக்கப் பிரசேத் திட்டம் - ஈரநிலங்கள் 112
6.5.1.1 வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் ஈரநில வகைப்படுத்தல் 112
6.5.1.2 ஈரநில வலயமாக்கல் 112
6.5.1.3 ஈரநில வலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடுகள் 113
6.5.2 நிலக்காட்சி முகாமைத்துவ திட்டம் 2019-2030 116
6.5.3 அனர்த்தக் குறைப்புத் திட்டம் 2019-2030 116
6.5.4 பொது திறந்தவெளி பொழுதுபோக்கு நடவடிக்கை திட்டம் 2019-2030 119
6.6 கலாசார மரபுரிமை முகாமைத்துவ மூலோபாயங்கள் 124
6.7 நடைமுறைப்படுத்தல் மூலோபாயங்கள் 124
6.7.1 மூலோபாயக் கருத்திட்டங்கள் 127
6.7.2 தாபனச் சட்டகம் 165
இணைப்புகள்
இணைப்பு 1 168
இணைப்பு 2 170
இணைப்பு 3 174
இணைப்பு 4 177
இணைப்பு 5 178

## தேசப்படங்கள்


| | | | |
|---|---|---|---|
| தேசப்பட இலக்கம் 01 | : | வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் | 04 |
| தேசப்பட இலக்கம் 02 | : | தென் பிராந்திய பௌதீகத் திட்டம்: உத்தேச குடியிருப்பு கட்டமைப்புத் திட்டம் மாத்தறை மாவட்டம் | 10 |
| தேசப்பட இலக்கம் 03 | : | தென் பிராந்திய பௌதீகத் திட்டம்: தற்போதுள்ள நகரங்களின் அடுக்கமைவு – தென் பிராந்தியம் | 11 |
| தேசப்பட இலக்கம் 04 | : | வெலிகம நகர சபை ஆளுகையின் சுற்றாடல் கூருணர்வு கொண்ட பிரதேசங்கள் 2018 | 23 |
| தேசப்பட இலக்கம் 05 | : | நிருவாக எல்லைகள் | 26 |
| தேசப்பட இலக்கம் 06 | : | வெலிகம நகரத்தின் இயற்கை அமைப்பும் | 42 |
| தேசப்பட இலக்கம் 07 | : | சுற்றுலா விதிகள் | 44 |
| தேசப்பட இலக்கம் 08 | : | சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக்கூடிய அரசக் காணிகளின் அமைவு | 47 |
| தேசப்பட இலக்கம் 09 | : | தேசிய பௌதீக கட்டமைப்புத் திட்டம் 2050 | 52 |
| தேசப்பட இலக்கம் 10 | : | தங்குமிட வசதிகயின் அமைவு 2017 | 53 |
| தேசப்பட இலக்கம் 11 | : | தற்போது காணப்படுகின்ற வீதிக் கட்டமைப்பு | 66 |
| தேசப்பட இலக்கம் 12 | : | வெள்ள அனர்த்தத்தைச் சந்திக்கும் பிரதேசங்கள் | 67 |
| தேசப்பட இலக்கம் 13 | : | கப்பரதொட்ட திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் | 71 |
| தேசப்பட இலக்கம் 14 | : | கைத்தொழில் பேட்டைகளின் அமைவு | 73 |
| தேசப்பட இலக்கம் 15 | : | எண்ணக்கருசார் திட்டவமைப்பு | 77 |
| தேசப்பட இலக்கம் 16 | : | உத்தேச காணிப் பயன்பாட்டு கோலம் | 80 |
| தேசப்பட இலக்கம் 17 | : | எதிர்பார்க்கப்படும் குடியிருப்பு அடர்த்தி | 85 |
| தேசப்பட இலக்கம் 18 | : | கல்விச் சேவை வசதிகள் | 88 |
| தேசப்பட இலக்கம் 19 | : | உத்தேச வீதிகள் மற்றும் போக்குவரத்து திட்டம் | 90 |
| தேசப்பட இலக்கம் 20 | : | உத்தேச நீர் வழங்கல் | 97 |
| தேசப்பட இலக்கம் 21 | : | மின்சாரக் கட்டமைப்பு உப நிலையங்களின் அமைவு | 99 |
| தேசப்பட இலக்கம் 22 | : | உத்தேச வடிகாலமைப்பு முறைமை | 101 |
| தேசப்பட இலக்கம் 23 | : | ஈரநில வலயமயமாக்கல் திட்டம் 2030 | 115 |
| தேசப்பட இலக்கம் 24 | : | அனர்த்தங்களை கட்டுப்படுத்தும் திட்டம் 2030 | 118 |
| தேசப்பட இலக்கம் 25 | : | நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்கான திட்டம் 2030 | 122 |
| தேசப்பட இலக்கம் 26 | : | முகாமைத்துவம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் கட்டடங்கள் | 125 |
| தேசப்பட இலக்கம் 27 | : | வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டம் | 126 |

## நிழற படங்கள்


| | | | |
|---|---|---|---|
| நிழற் படம் 01 | : | அக்ரபோதி விகாரை | 12 |
| நிழற் படம் 02 | : | குட்டராசக் கல் - குஷ்டராஜகலை | 12 |
| நிழற் படம் 03 | : | மெதடிஸ் தேவாலயம் | 13 |
| நிழற் படம் 04 | : | திருவலம் கோவில் | 13 |
| நிழற் படம் 05 | : | யாங்ஓயா கால்வாய் | 28 |
| நிழற் படம் 06 | : | அக்ரபோதி கால்வாய் | 28 |
| நிழற் படம் 07 | : | கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி | 29 |
| நிழற் படம் 08 | : | புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி | 29 |
| நிழற் படம் 09 | : | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணி | 30 |
| நிழற் படம் 10 | : | வீதி அபிவிருத்தி சொந்தமான காணி | 30 |
| நிழற் படம் 11 | : | கப்பரதொட்ட கடனீரேரி | 31 |
| நிழற் படம் 12 | : | திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ள பிரதேசம் | 32 |
| நிழற் படம் 13 | : | ஹெட்டி வீதி | 32 |
| நிழற் படம் 14 | : | பெலேன கடற் பிராந்தியம் | 43 |
| நிழற் படம் 15 | : | பிரதான சுற்றுலா ஹோட்டல்கள் | 46 |
| நிழற் படம் 16 | : | வெலிகம் கடற்கரை பரப்பு | 49 |
| நிழற் படம் 17 | : | பெலேன கடற்கரை பரப்பு | 50 |
| நிழற் படம் 18 | : | இயற்கை ஈர்ப்பும் உயிர் பல்வகைமையும் கொண்ட இடங்கள் | 54 |
| நிழற் படம் 19 | : | நீலத் திமிங்கிலத்தைக் கண்டு ரசித்தல் | 55 |
| நிழற் படம் 20 | : | வெலிகம நகரத்தை அண்டிய கடற்கரை பரப்பு | 56 |
| நிழற் படம் 21 | : | மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம் | 58 |
| நிழற் படம் 22 | : | கப்பரதொட்ட மீன்பிடி இறங்குதுறை | 59 |
| நிழற் படம் 23 | : | வெலிகம கடற்கரை பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தை | 60 |
| நிழற் படம் 24 | : | மிதித்தேறி நின்று மீன்பிடித்தல் | 61 |
| நிழற் படம் 25 | : | மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம் | 63 |
| நிழற் படம் 26 | : | நீர் வழிந்தோடாமை | 68 |
| நிழற் படம் 27 | : | வாகன நெரிசல் | 69 |
| நிழற் படம் 28 | : | யான்ஓயா கால்வாய் | 72 |
| நிழற் படம் 29 | : | சாக்கடைத் தொகுதிக்கான உத்தேச காணி | 102 |
| நிழற் படம் 30 | : | உத்தேச காணி நிரப்பல் கருத்திட்ட வளாகம் | 104 |
| நிழற் படம் 31 | : | கரையோர அபிவிருத்தி கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தை | 107 |

## உருவக் குறிப்புக்கள்


| | | | |
|---|---|---|---|
| உருவக் குறிப்பு இல 01 | : | வெலிகம குடா மற்றும் நீர்நிலைகளின் அமைவு | 39 |
| உருவக் குறிப்பு இல 02 | : | கடற்கரைப் பரப்பிலிருந்து பொல்அத்துமோதரகங்கை வரையான பிரதேசம்- - அ ஆ குறுக்குவெட்டு | 81 |
| உருவக் குறிப்பு இல 03 | : | கப்பரறதொட்ட தொடக்கம் பெலேன வரையான பிரதேசம் - இ ஈ நெடுக்கு வெட்டு | 81 |
| உருவக் குறிப்பு இல 04 | : | எண்ணக்கரு திட்டவமைப்பு | 82 |
| உருவக் குறிப்பு இல 05 | : | வீதி குறுக்கு வெட்டு - இரண்டு ஒழுங்கைகள் | 91 |
| உருவக் குறிப்பு இல 06 | : | வீதி குறுக்கு வெட்டு - நான்கு ஒழுங்கைகள் | 92 |
| உருவக் குறிப்பு இல 07 | : | ஏழு மீற்றர் அகலமான வீதி குறுக்கு வெட்டு | 93 |
| உருவக் குறிப்பு இல 08 | : | ஒன்பது மீற்றர் அகலமான வீதி - குறுக்கு வெட்டு | 93 |
| உருவக் குறிப்பு இல 09 | : | வெலிகம நகரத்தின் மையப் பிரதேசம் - உத்தேச திட்டவமைப்பு | 95 |
| உருவக் குறிப்பு இல 10 | : | வெலிகம கடற்கரைப் பூங்கா அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உணவகங்களின் முகப்பு தோற்றம் | 108 |
| உருவக் குறிப்பு இல 11 | : | வெலிகம கடற்கரைப் பூங்கா | 109 |
| உருவக் குறிப்பு இல 12 | : | கப்பரதொட்ட கடனீரேரி அபிவிருத்தி கருத்திட்டம் | 110 |
| உருவக் குறிப்பு இல 13 | : | கப்பரதொட்ட நாரா நிறுவனத்திற்குச் சொந்தமான காணி எண்ணக்கருசார் திட்டவமைப்பு | 111 |


## வரைபுகள்


| | | | |
|---|---|---|---|
| வரைபு இல 01 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - இனங்கள் வாரியான புள்ளிவிபரக் கட்டமைப்பு (2011) | 16 |
| வரைபு இல 02 | : | சுற்றுலாத் துறையின் வளர்ச்சி 2012 - 2017 | 45 |
| வரைபு இல 03 | : | இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (2010 – 2017) | 51 |
| வரைபு இல 04 | : | மீன் உற்பத்தி | 58 |
| வரைபு இல 05 | : | வெலிகம நகரை அண்டிய பிரதேசங்களில் மீன் விற்பனை | 63 |


## அட்டவணைகள்


| | | | |
|---|---|---|---|
| அட்டவணை இல 01 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - நிலப் பயன்பாட்டுக் கோலம் (2004 – 2017) | 17 |
| அட்டவணை இல 02 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - வீதிக் கட்டமைப்பு – 2017 | 18 |
| அட்டவணை இல 03 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் விபரங்கள் - 2017 | 19 |
| அட்டவணை இல 04 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - திண்மக் கழிவுப்பொருள் கட்டமைப்பு – 2016 | 21 |
| அட்டவணை இல 05 | : | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சனத்தொகை - 2030 | 83 |
| அட்டவணை இல 06 | : | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்புக்களின தேவை - 2030 | 83 |
| அட்டவணை இல 07 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - உத்தேச வீதி மற்றும் போக்குவரத்து திட்டம் - 2030 | 91 |
| அட்டவணை இல 08 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - நாளாந்த நீர்த் தேவை | 96 |
| அட்டவணை இல 09 | : | திண்மக் கழிவுப்பொருள் கட்டமைப்பு - 2017 | 103 |
| அட்டவணை இல 10 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள சுற்றுலா நிறுவனங்களின் வேலைவாய்ப்பு | 105 |
| அட்டவணை இல 11 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - நேரடியான பொழுதுபோக்கு வசதிகளுக்கான பூங்கா வகைகள் | 119 |
| அட்டவணை இல 12 | : | வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - உத்தேச நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்கான திட்டம் (2018 – 2030) | 120 |
| அட்டவணை இல 13 | : | மூலோபாய கருத்திட்டங்களும் ஏனைய கருத்திட்டங்களும் | 127 |

# பகுதி ஒன்று

# 1.0 அறிமுகம்

## 1.1 அபிவிருத்தி திட்டத்தின் பின்னணி

நகரமொன்றின் அபிவிருத்திக்காக தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டத்தில் குறித்த பிரதேசத்தின் பௌதீக, பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் அரசியல் காலங்களின் போக்குகள் அடிப்படையாக கொள்ளப்படுகின்றன. அத்தகைய காரணிகளின் பலம், பலவீனங்கள் கூடிக்குறைந்த அளவிலும் நேரிடை மற்றும் எதிரிடை தொடர்புகளும் அபிவிருத்தித் திட்டத்தில் தாக்கம் செலுத்துகின்றன. இலங்கையில் நகர அபிவிருத்திக்கான பிரதான நிறுவனமாக நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்படுகின்றது. இதில் 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச்சட்டம் முக்கிய பங்கினை வகிப்பதுடன் அச்சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட 1982ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் உரிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த சட்டப் பின்னணியின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் நகர அபிவிருத்தி ஆளுகைப் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் முக்கிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட பிரதேசத்திலுள்ள குடியிருப்பாளர்களின் நல்லிருப்பு, புதிய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல் மற்றும் அதன் ஊடாக நகர அபிவிருத்தி அனுகூலங்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பன நோக்கமாக கொள்ளப்படுகின்றது.

அதன்படி, வெலிகம நகரசபை ஆளகைப் பிரதேசத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் அபிவிருத்தி திட்டமொன்றைத் தயாரித்தல் இதன் நோக்கமாகும். இந்த பிரதேசம் 1933இல் மாவட்ட சபையாகவும், 1940இல் நகர சபையாகவும் இருந்துள்ளது. 1980.08.04ஆம் திகதிய 100/4ஆம் அதிவிசேட வர்த்தமான பத்திரிக்கையின் மூலம் இந்த நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஓர் அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதோடு, மீண்டும் 2005.09.07ஆம் திகதி வெளியிடப்பட்ட 1409/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின்படி வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் பாரிய மாத்தறை அபிவிருத்தி பிரதேசத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆகவே, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெலிகம நகரசபை ஆளுகை பிரதேசத்திற்காக 2017ஆம் ஆண்டிலிருந்து பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ாரணிகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டமொன்றைத் தயாரித்துள்ளது.

இந்த நகர அபிவிருத்தி திட்டத்தை 2017ஆம் ஆண்டில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு, குறுகிய ஒரு காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யவும் எதிர்பார்க்கப்பட்டது.

## 1.2 திட்டவமைப்புக் குழு

**பிரதான பங்கீடுபாட்டு நிறுவனம்**

1. வெலிகம நகர சபை

**பிரதான பங்கீடுபாட்டாளர்கள்**

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை.
2. இலங்கை மின்சாரசபை - வெலிகம
3. கரையோர பாதுகாப்பு திணைக்களம் - தெவுந்தர
4. இலங்கை முதலீட்டுச்சபை
5. மத்திய சுற்றாடல் அதிகாரசபை - மாத்தறை
6. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் - மாத்தறை
7. கரையோர சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
8. பிரதேச செயலகம் - வெலிகம
9. வலயக் கல்வி காரியாலயம் - வெலிகம
10. வணிகச் சபை - வெலிகம
11. தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை
12. மீன்பிடித்தொழில் கண்காணிப்பு காரியாலயம்
13. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்
14. சுகாதார வைத்திய உத்தியோகத்தர் காரியாலயம் - வெலிகம
15. வணிகச் சபை – வெலிகம
16. மீனவச் சங்கங்கள்
17. அலைச்சறுக்கு விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களின் சங்கம்
18. ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம்

**ஏனைய பங்கீடுபாட்டாளர்கள்**

**திட்டவமைப்புக் குழு - நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைமை அலுவலகம்**

1. அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு
2. கடல் மற்றும் நிலக்காட்சி பிரிவு
3. பூகோளத் தகவல் முறைமை பிரிவு
4. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

**நகர அபிவிருத்தி அதிகாரசபை மாத்தறை மாவட்டக் காரியாலயம்**

| | |
|---|---|
| கே எச் எம் டபிள்யூ கே அபேரத்ன | - பணிப்பாளர் (தென் மாகாணம்) |
| திருமதி கே ஜி கல்யாணி இந்திகா | - பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| திருமதி ஜி எல் சுமணசேகர | - நகர திட்டவமைப்பாளர் |
| திரு கே எஸ் றெஜி | - திட்டவமைப்பாளர் |
| திருமதி ஓ ஜீ நில்மினி | - திட்டவமைப்பாளர் |
| செல்வி எச் சி டபிள்யூ அனோமா பிரியந்தி | - திட்டவமைப்பாளர் |
| செல்வி கே எச் சீ நிசாந்தி | - திட்டவமைப்பாளர் |
| திருமதி ஏ பீ எம் சமரசிங்க | - திட்டவமைப்பாளர் |
| திருமதி நிலத்தி ஆரியரத்ன | - திட்டவமைப்பாளர் |
| திருமதி நிமாலி தம்மிகா | - திட்டவமைப்பாளர் |

## 1.3 நோக்கெல்லை

வெலிகம நகரம், வெலிகம குடாவில் காணப்படும் வளைவினை கொண்ட அமைப்பு மற்றும் ஆழமற்ற கடல் சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் மீன்பிடி கைத்தொழிலுக்கும் சிறந்த அணுக்கதைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இந்த பிரதேசத்தில் சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் மீன்பிடி கைத்தொழிலுக்கும் பயன்படுத்தக்கூடிய சிறந்த அபிவிருத்தி மூலவளங்களைக் கொண்ட பல பகுதிகள் காணப்படுகின்றன. இதுவரையிலும் இந்த பிரதேசம் நேர்த்தியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே அதியுச்ச அபிவிருத்தி மூலவளங்களைக் கொண்ட வெலிகம நகரசபை ஆளுகை பிரதேசத்திற்காக தயாரிக்கப்படும் இந்த அபிவிருத்தித் திட்டமானது பிரதேச மட்டத்திற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது.

வெலிகம நகரத்தை 2030ஆம் ஆண்டளவில் சுற்றுலாத் துறையின் சொர்க்கபுரியாக அபிவிருத்தி செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாம். அதற்கென பௌதீக, சமூக மற்றும் சுற்றாடல் சார்ந்த விடயங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தியை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. வெலிகம நகர ஆளுகை பிரதேசம் தேசப்பட இல 01இல் காட்டப்பட்டுள்ளது

**தேசப்பட இலக்கம் 01: வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம்**




**தொடர்பு**

| | |
|---|---|
| ஏ தர வீதிகள் | புகையிரத வீதி |
| பி தர வீதிகள் | வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம் |

N W E S

1:16,000

**தேசப்பட இல: 01**

நகர அபிவிருத்தி அதிகார சபை

**வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் -2018**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர அபிவிருத்தி அதிகாரசபை

## 1.4 திட்டவமைப்புச் செயன்முறை

| | | |
|---|---|---|
| 1.4.1 | **பின்னணி பற்றிய ஆய்வு** | அரச நிறுவனங்களில் பொருளாதார சமூக மற்றும் பௌதீக தரவுகள் தொடர்பான இரண்டாம் நிலை தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>நிலப் பயன்பாட்டுக் கோலம் தொடர்பான கள ஆய்வினை மேற்கொள்ளல்.<br>தரவு சேகரிப்பு (கள ஆய்வு, நிறுவனங்கள், இணையம் மற்றும் புவியியல் தேசப்படங்கள் மூலம் முதனிலை, இரண்டாம் நிலை தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்) |
| 1.4.2 | **நோக்கெல்லை** | தற்போதைய நிலையை பகுப்பாய்வு செய்தல் (EXCEL, GIS, Drone, Google தேசப்படங்கள் மூலம் ஆரம்ப பகுப்பாய்வு) |
| 1.4.3 | **பிரச்சினைகள் மற்றும் மூலவளங்களை இனங்காணல்** | ஆய்வுக்குரிய பிரதேசத்தில் சமூக, பொருளாதார, பௌதீக சுற்றாடல் சார்ந்த துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. இதற்கென நகரத்திலுள்ள நிறுவனம் ஒவ்வொன்றினதும் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக 207.12.19ஆம் திகதி பங்கீடுபாட்டாளர்களுடனான சந்திப்பொன்று வெலிகமயில் நடாத்தப்பட்டது. |
| 1.4.4 | **நோக்கு, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை இனங்காணல்** | அபிவிருத்திப் பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்தி மூலவளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும், பிரதேசத்தில் அபிவிருத்திக்கான தடைகளை நீக்கி சுற்றாடல், பொருளாதார, சமூக மற்றும் பௌதீகத் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தியின் மூலம் எதிர்பார்ப்பா்டும் முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான நோக்கு கட்டியெழுப்பட்டு அதனை வெற்றியாக்கிக் கொள்வதற்கான நோக்கங்களும் குறிக்கோள்களும் வகுக்கப்பட்டன. |
| 1.4.5 | **விவரமான பகுப்பாய்வு** | பலம், பலவீனம், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் தொடர்பான பகுப்பாய்வு, கூருணர்வு பகுப்பாய்வு, தொடர்பு பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்திப் போக்கினை அடிப்படையாகக் கொண்ட விரிவான பகுப்பாய்வை மேற்கொள்ளல். அதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கு மற்றும் நோக்கினை வெற்றியாக்கிக் கொள்வதற்கான நோக்கங்களும் குறிக்கோள்களும் வகுக்கப்பட்டன. |
| 1.4.6 | **அபிவிருத்தி திட்டத்தின் மூலோபாயங்களை வகுத்தல்** | சேகரிக்கப்பட்ட பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ரீதியான தரவுகளையும் தகவல்களையும் விரிவாக பகுப்பாய்வு செய்து, நடைமுறைசார் வழிமுறைகளைப் பின்பற்றி நகர அபிவிருத்தி மூலோபாயங்களுக்கு அமைவாக நோக்கினை அடைந்துகொள்ளல். |

| | | |
|---|---|---|
| **1.4.7** | **திட்டவமைப்பின் ஒழுங்குவிதிகளை தயாரித்தல்** | அபிவிருத்தித் திட்டத்தை பயனுறுத்தத் தேவையான கட்டடங்களை நிர்மாணித்தல் தொடர்பான சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் காணிப் பயன்பாடுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள், அபிவிருத்தி திட்டத்தின் நோக்கினை அடைந்து கொள்வதற்காக ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ள பிரச்சனைகளையும், பகுப்பாய்வின் மூலம் எதிர்காலத்தில் உருவாகலாமென எதிர்பார்க்கப்படும் பிரச்சனைகளையும் குறைத்துக் கொள்வதற்கான சட்ட வரம்பினை வகுத்தல். |
| **1.4.8** | **உள்ளூராட்சி நிறுவனங்களின் இணக்கப்பாடு** | தயாரிக்கப்பட்ட மேலோட்டமான அபிவிருத்தி திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தி அதன் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு 60 நாள் அவகாசத்தை வழங்கி, பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்தின் யோசனைகளின்படி அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. |
| **1.4.9** | **அபிவிருத்தித் திட்டத்தை பிரதான திட்டவமைப்புக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தல்** | இறுதியாக தயாரிக்கப்பட்ட மேலோட்டமான அபிவிருத்தி திட்டவமைப்பினை பிரதான திட்டமிடல் குழுவுக்கு ஆற்றுப்படுத்தி அதன் பின்னர் அபிவிருத்தி திட்டமிடல் பிரிவுக்கு அற்றுப்படுத்தல். |
| **1.4.10** | **அங்கீகாரமும் வெளியிடலும்** | அபிவிருத்தி திட்டமிடல் பிரிவினால் சட்டரீதியான வழிமுறைகளுக்கு அமைவாக அபிவிருத்தி திட்டவமைப்பினை வெளியிடுதல். . |

வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கான அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் பணிகள் 2017.02.07ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017.04.30ஆம் திகதி வரை முதனிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டன. அந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டு 2017.12.19ஆம் திகதி குறித்த வரைவு பிரதேசத்திலுள்ள பங்கீடுபாட்டாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, பங்கீடுபாட்டாளர்கள் மீன்பிடி மற்றும் வர்த்தகம், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்வாகம், சுற்றாடல் மற்றும் சுற்றுலா என மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு அவற்றின் ஊடாக

பெறப்படுகின்ற தகவல்களும், அதிகார சபையின் மூலம் பெறப்படுகின்ற தகவல்களும் ஆதாரமாககொல்லப்பட்டு வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மூலவளங்களும் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டன. அதன் பின்னர் இனங்காணப்பட்ட மூலவளங்கள், பிரச்சினைகள் மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்தி போக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நகர அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக நகரத்தின் எதிர்கால நோக்கு மற்றும் அதற்கு இணையான குறிக்கோள்கள், நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்கள் தயாரிக்கப்பட்டு அதனுடன் தொடர்புடைய பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதற்காக நகரத்தில் காணப்படும் பலம், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் (SWOT Analysis) பற்றிய விசேட பகுத்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் கூருணர்வு பகுப்பாய்வு (Sensitivity Analysis), தொடர்புப் பகுப்பாய்வு (Connectivity Analysis), மற்றும் அபிவிருத்தி உந்தல் பகுப்பாய்வு (Development Pressure Analysis)ம் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் திட்டத்தின் எதிர்கால நோக்கு வகுத்ததமைக்கப்பட்டது.

அதன்படி, குறித்த நோக்கினை அடைந்து கொள்வதற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுகளில் காணப்படும் பௌதீக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகளை மூலோபாயங்களாக மாற்றியமைத்து நகர அபிவிருத்திச் செயற்பாட்டை நடைமுறையில் சாத்தியமாக்கிக்கொள்வதற்காக அவற்றுக்குரிய பல்வேறு திட்டங்களும், அந்தத் திட்டங்களுக்கு இணையான திட்டவமைப்புகளும் கட்டட ஒழுங்குவிதிகளும் தயாரிக்கப்பட்டன. அதன் பின்னர் இந்த அபிவிருத்தி திட்டத்திற்கு சம்பந்தப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அதுகுறித்த பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும்பொருட்டு பங்கீடுபட்டவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் இறுதி அபிவிருத்தித் திட்ட வரைவு பிரதான திட்டவமைப்பு குழுவுக்கும் அபிவிருத்தி திட்டமிடல் பிரிவுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் வெளியிடப்பட்டது

# 2.0 ஆரம்ப ஆய்வு

## 2.1 ஆய்வுப் பிரதேசம்

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை - கொழும்பு கரையோர பெருந்தெருவில் வெலிகம குடாவை அண்டியதாக வெலிகம நகரம் அமைந்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் பிரகடனம் செய்யப் பட்டுள்ள 17 நகரப்பிரதேசங்களில் ஒரேயொரு நகர சபை ஆளுகைப் பிரதேசமாக வெலிகம நகரம் காணப்படுகின்றது. வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசம் 17 கிராம அலுவலர் பிரிவுகளையும் 543.8 ஹெக்ரயர் நிலப்பரப்பையும் கொண்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் பிரதான வர்த்தகமையமாக காணப்படும் மாத்தறை நகரத்திற்கும், காலி மாவட்டத்தில் பிரதான நிர்வாக மையமாக காணப்படும் காலி நகரத்திற்கும் இடைநடுவில் அமைந்துள்ள வெலிகம நகரம் சுற்றுலா ஈர்ப்பு கொண்ட ஒரு பிரதேசமாகும். நாளாந்த தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காகவும் சுற்றுலா நிமித்தமும் வருகை தரும் மக்கள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்படி நாளொன்றுக்கு இந்த நகரத்தை நோக்கி 55,000 பேர் வருகை தருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் அனேகமானோர் வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்திலும், வெலிகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தைச் சார்ந்தும் வசிப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுப் பணிகளின் வசதிகருதி வெலிகம குடாவுக்குச் சமாந்தரமாக வெலிகம நகரசபை எல்லையிலிருந்து வடக்கு நோக்கியதாக ஆரை வடிவ பிரதேசம் ஒன்றை உள்ளடக்கும் வகையில் வெலிகம மற்றும் வெலிப்பிட்டிய பிரதேச சேயலாளர் பிரிவுக்குரிய 41 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பிரதேசம் ஆய்வுக்குரிய பிரதேசமாக இனங்காணப்பட்டது. இந்த ஆய்வுப் பிரதேசம் 34.9 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது, 2011ஆம் ஆணடில் மேற்கொள்ளப்பட்ட குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பு அறிக்கையின்படி மொத்த சனத்தொகை 65,120ஆகவும் குடும்பங்களின் எண்ணிக்கை 14,942 ஆகவும் காணப்படுகிறது.

## 2.2 திட்டவமைப்புச் சூழ்நிலைமையும் தற்போதைய நிலையும்

மாத்தறை மாவட்டச் செயலகத்தினால் 2007ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட "மாத்தறை" எனப்படும் நூலில் வெலிகம நகரம் 2003 வருடங்கள் தொன்மையானதென பதிவிட்ட சான்றுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கி.மு 03ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசனின் காலத்தில் 32 வகை பலன்களைத் தரும் போதிமரம் வெலிகம பிரதேசத்தில் நடப்பட்டதாக போதி வம்சம் கூறுகின்றது. விஜயனின் வருகைக்கு முன்னர் அல்லது விஜயனின் வருகையை ஒத்த காலப்பகுதியில் வெலிகம இறங்குதுறையை

அண்டியதாக ஆரியரின் கிராமம் ஒன்று இருந்துள்ளதாக வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிப்பதாகவும், போதிமரத்தை நடமுன்னர் அதாவது 04ஆம் நூற்றாண்டில் கடலோரத்தை அண்டிய குடியிருப்பு ஒன்றில் தென்னோலைகள் வரிசையாக நடப்பட்டிருந்ததாகவும், மெகஸ்தீஸ் என்று அறியப்படுகின்ற நகரப் பயணி குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவுக்கு முந்திய காலப்பகுதியில் வெலிகம பிரதேசத்தில் தெங்குச்செய்கை காணப்பட்டதாக பேராசிரியர் கம்புறுபிட்டிய வணரத்தன தேரர் பதிவு செய்துள்ளதாக ”மாத்தறை” நூல் குறிப்பிடுகின்றது.

இலங்கையில் காணப்படுகின்ற இயற்கை வளங்களின் அதியுச்சப் பயனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும், அவற்றின் சாதகமான அமைவின் மூலம் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும் நிலப்பயன்பாட்டு திட்டத்தை தயாரித்தலும், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டவமைப்பின் நோக்கமாகும்.


தேசப்பட இலக்கம் 02 மற்றும் 03இல் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய பௌதீக திட்டவமைப்பின் தென்மாகாண பௌதீக திட்டத்திற்குரியதாக மாத்தறை மாவட்டத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள கட்டமைப்புசார் திட்டத்தின்படி வெலிகம நகரம் அடர்த்தி கூடிய நகர வலயமொன்றில் அமைந்துள்ளதோடு, அதனுடைய தொழிற்பாட்டு நகர அடக்கமைவின்படி அது சுற்றுலா வலயத்தினுள் அமைந்துள்ளது. 2011 – 2030 வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டுள்ள கட்டமைப்புசார் திட்டத்தில் வெலிகம மீன்பிடி துறைமுகத்தையும், சமுத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடல் கைத்தொழில் அபிவிருத்தியையும் மேற்கொள்ளுதல் பொருத்தமானதென இனங்காணப்பட்டுள்ளது. அந்த திட்டத்தின்படி இலங்கை சுற்றுலாச் சபை மற்றும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் தீவிரமான கூருணர்வு கரையோரப் சுற்றாடல் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய இனங்காணப்பட்டுள்ளதோடு வெலிகம நகரமும் இந்த பிரதேசத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது.

தேசப்பட இல 02: தென் பிராந்திய பௌதீகத் திட்டம்: உத்தேச குடியிருப்பு கட்டமைப்புத் திட்டம் மாத்தறை மாவட்டம்




மூலம் : தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், 2050

தேசப்பட இல 03: தென் பிராந்திய பௌதீகத் திட்டம்:  தற்போதுள்ள நகரங்களின் அடுக்கமைவு – தென் பிராந்தியம்




மூலம் : தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம், 2050

இந்த அபிவிருத்தி பிரதேசம் கரையோர பெருந்தெரு, புகையிரத வீதி, அதிவேக நெடுஞ்சாலை வழியாக கொழும்பு நகரத்துடனும், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டத்துடனும் மேலும், வெலிகம அக்குரெஸ்ஸ வீதி ஊடாக அக்குரெஸ்ஸ தெனியாய மற்றும் இரத்தினபுரி வரை நாட்டின் மத்திய பிரதேசங்களுடனும் சிறந்த முறையில் தொடர்பினை ஏற்படுத்துகின்றது.

வெலிகம பிரதேசத்தில் வரலாற்று ரீதியான சிறப்பினையும் கட்டடக்கலை ரீதியான பெறுமதியையும் கொண்ட இடங்களாக அக்ரபோதி விகாரை, (குட்டராசக் கல்) குஷ்டராஜகலை, மெதடிஸ் தேவாலயம், திருவெல கோவில் மற்றும் மென்ரேகு வளவு சூழ்ந்த மாளிகையை குறிப்பிடலாம். அகரபோதி விகாரை இரண்டாவது பேதிஸ்ஸ மன்னனின் காலத்தில் கட்டுவிக்கப்பட்டதாகவும், குஷ்டராஜகலயில் அவலோகதீசுவர போதிசத்துவரின் சிலை செதுக்கப்பட்டுள்ளதாலும் அவ்விடங்களின் வரலாற்றுச் சிறப்பு தொடர்பில் சுற்றுலாப் பயணிகளை விழிப்புணர்வு செய்து சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும். அக்ரபோதி விகாரை, குஷ்டராஜகல, மெதடிஸ் தேவாலயம், திருவெல கோவில் நிறழ்பட இலக்கம் 01, 02, 03 மற்றும் 04இல் காட்டப்பட்டுள்ளது.

**நிழற்படம் 01: அக்ரபோதி விகாரை**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை, 2018

**நிழற்படம் 02 : குஷ்டராஜகலை**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை, 2018

**நிழற்படம் 03: மெதடிஸ் தேவாலணம்**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை, 2018

**நிழற்படம் 04: திருவலம் கோவில்**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை, 2018

வெலிகம நகரத்தில் ஆதிகாலந்தொட்டு மீன்பிடி கைத்தொழில் காணப்பட்டதாக சான்றுகள் தெரிவிக்கின்றன. மீன்பிடி கைத்தொழிலுக்கு தேவையான வள்ளங்கள் (மீன்பிடி படகுகள்) மற்றும் துறைமுகமொன்றும் இருந்ததாக அறிஞர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'மாத்தறை' எனப்படும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வல்லின குலப்பெண் ஒருவருக்கு *துன்கம* மற்றும் *வலிக்க* என அறியப்பட்ட வியாபார சமூகத்தினருக்குச் சொந்தமாகவிருந்த துறைமுகம் காரணமாக வெலிகம என்ற பெயர் வழக்கில் வந்துள்ளதாக 'மாத்தறை' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெலிகம நகரசபை ஆளுகை பிரதேசத்தின் தரைத் தோற்றத்தை ஆராயும்போது பொதுவாக தட்டையான தன்மை கொண்டதாக காணப்படுவதுடன், தென்மேற்குப் பகுதியில் சில மேட்டு நிலங்கள் அமைந்துள்ளன. இந்தப் பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 25 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. மிகவும் உயரமான பிரதேசங்களாக வலான கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வைத்தியசாலை வளாகத்தையும், கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள மூன்று மலைமுகடுகளையும் குறிப்பிடலாம். சராசரி நடுவாண்டு மழைவீழ்ச்சி 1800 – 2500 மில்லிமீற்றர் வரை காணப்படுகின்றது. தென்மேல் பருவப் பெயர்ச்சி மற்றும் இடைப் பருவப்பெயர்ச்சி மழை மூலம் பிரதேசத்திற்கு மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. நடுவாண்டு வெப்பநிலை சென்ரிகிரேட் 23 – 25 பாகைக்கு இடைப்பட்டதாக காணப்படுகின்றது.

வெலிகம நகரசபை ஆளுகை பிரதேசத்தில் கரடுமுரடாக காணப்படும் இரண்டரை கிலோ மீற்றர் ரம்மியமான கடற்கரை பரப்பு அதன் பிரதான பூகோளப் பண்பாகும். இந்த கடற்கரை பரப்பானது குடாக்கள், முனைகள், கற்பாறைகள், தீவுகள் மற்றும் கடனீரேரிகள் போன்ற இயற்கையான பண்புகளை கொண்டுள்ளதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்த்தெடுப்பதற்கும், வனப்பை அதிகரிப்பதற்கும் வாய்ப்பாக

அமைந்துள்ளது. மேலும், இது மீன்பிடி கைத்தொழிலுக்கும் முக்கியமானதொரு காரணியாக விளங்குகிறது.

நகர எல்லையில் அமைந்துள்ள கந்தூவ, காக்கதூவ, வெலிகம குடாவின் இருமருங்கிலும் அமைந்துள்ள கிராகல மற்றும் ராஸ்ஸமுண குன்றுகள், கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள செங்குத்துப்பாறை மற்றும் வெலிகம பிரதேசத்தில் காணக்கூடியதான பிரதான நீர்த் தோற்றுவாய்களான பொல்வத்து கங்கை நகரத்தில் காணப்படும் அழகியல் பெறுமதி கொண்ட பௌதிகப் பண்புகளாகும். இப்பண்புகளாவன நகரத்தின் வனப்பை அதிகரிப்பதற்காகவும் அத்துடன் சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் தாக்கம் செலுத்துகின்ற முக்கியமான காரணிகளாக காணப்படுகின்றன.

இந்த நகரம், தேசிய மற்றும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ள காலி துறைமுகம், காலி கோட்டை, காலி சர்வதேச கிரிக்கெட் மைதானம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொக்கல விமான நிலையம், கொக்கல சுதந்திர வர்த்தக வலயம், அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம், மத்தள சர்வதேச விமான நிலையம், சூரியவெவ கிரிக்கெட் மைதானம், உருகுணைப் பல்கலைக்கழகம், கதிர்காமம் புனித பூமி, சிங்கராஜ வனம், யால வனப்பூங்கா மற்றும் ரம்மிஹிதென்ன ரெலி சினிமா பூங்கா போன்ற பிரதேசங்களுடன் சிறந்த தொடர்பினைக் கொண்ள்ளது.

2011ஆம் ஆண்டு தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி மாத்தறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 965,291ஆகக் காணப்படுவதோடு வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் சனத்தொகை 22,149ஆகக் காணப்படுகின்றது. எனவே, வெலிகம நகரத்தின் சனத்தொகை மாத்தறை மாவட்ட சனத்தொகையில் 2.3 சதவீதத்தைப் பதிவு செய்கின்றது. 2011ஆம் ஆண்டில் இலங்கையின் நகர சனத்தொகை வளர்ச்சி வேகமான 0.7 வீதத்துடன் ஒப்பிடும்போது வெலிகம, மாத்தறை மற்றும் அக்ரெஸ்ஸ பிரதேசங்களின் நகர சனத்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியைக் காட்டுவதோடு தெவிநுவர மட்டும் கூடுதலான வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவு 2001 - 2011 இடைப்பட்ட காலப்பகுதியில் சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் மகிழ்ச்சி ஏற்பட தாக்கம் செலுத்தியுள்ளது. சுனாமி பேரழிவு காரணமாக நகரத்தில் வாழ்ந்தவர்களில் சுமார் 1500 பேர் உயிரிழந்தனர். மேலும், கரையோரப் பிரதேசங்களை அண்டி வாழ்ந்த மக்களில் ஒரு பகுதியினர் நகர எல்லைக்கு வெளியே அதாவது, மிதிகம, பொல்அத்துமோதர, பெலேன போன்ற பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட சுனாமி கருத்திட்ட குடியிருப்புக்களில் குடியமர்த்தப்பட்டடும், மேலும் ஒரு பகுதியினர் நகரத்திற்கு வெளியே புலம்பெயர்ந்தும் உள்ளனர்.


வெலிகம நகர சபையின் ஆளுகை பிரதேசத்தில் 17 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. அதன் மொத்த நிலப்பரப்பு 543.8 ஹெக்ரயர். ஆகவே, 2011ஆம்

ஆண்டு தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு அறிக்கையின்படி வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் அண்ணளவான அடர்த்தி ஹெக்ரயர் ஒன்றுக்கு 43 பேர். 2011 ஆம் ஆண்டில் வெள்ளிக்கிழமை நகரத்தின் மொத்த நிலப் பயன்பாட்டு கோலத்திற்கமைய 293.07 ஹெக்ரயர் காணி வதிவிட தேவைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதால் ஹெக்ரயர் ஒன்றுக்கான தேறிய சனத்தொகை அடர்த்தி 76 பேர்.

2011ஆம் ஆண்டு தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி அளுத் வீதிய கிராம அலுவலர் பிரிவில் அதிகூடிய சனத்தொகை அடர்த்தி பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அது ஹெக்ரயர் ஒன்றுக்கு 133 பேர். கப்பரதொட்ட வடக்கு, கல்பொக்க கிழக்கு மற்றும் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் சனத்தொகை அடர்த்தி கூடுதலான பெறுமதியை காட்டுகின்றது. மிகவும் குறைந்த சனத்தொகை அடர்த்தி அதாவது, ஒரு ஹெக்ரயருக்கு 17 பேர் கொஹுனுகமுவ கிராம அலுவலர் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏணைய கிராம அலுவலர் பிரிவுகளின் சனத்தொகை அடர்த்தியுடன் ஒப்பிடுகையில் ஹெட்டிவீதி மற்றும் வல்லிவல தெற்கு கிராம அலுவலர் பிரிவின் சனத்தொகை அடர்த்தி குறைந்த பெறுமானத்தை பதிவு செய்கின்றது.

வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களில் பெரும்பான்மையானவர்கள் 66.04 சதவீதம் சிங்களவர்களாவர். சிறுபான்மை மக்கள் மத்தியில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். அது மொத்த சனத்தொகையில் 30.82 சதவீதமாகும். இப்பிரதேசத்தில் 3.09 சதவீத தமிழ் மக்கள் வாழ்ந்த வருவதுடன் எஞ்சிய மக்கள் ஏனைய இனங்களை சார்ந்துள்ளனர். வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வாழும் இனங்களின்படி சனத்தொகை கட்டமைப்பு வரைவு இலக்கம் 01இல் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு இல 01 : வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - இனங்கள் வாரியான புள்ளிவிபரக் கட்டமைப்பு (2011)**




மூலம : தொகை க
மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் -2011 குடிசன வீட்டுவசதிகள் தொகைமதிப்பு

வேலிகம நகரம் மாத்தறை - கொழும்பு பிரதான கரையோர வீதியில் அமைந்துள்ளமை, கரையோர புகையிரத வீதி இந்த நகரத்தை ஊடறுத்துச் செல்கின்றனமை, சிறப்புக்குரிய தரைத்தோற்ற பண்புகளைக்கொண்ட ரம்மியமான கடற்கரை, வர்த்தக மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள், பிரதேச செயலகம், தேசிய பாடசாலைகள், மாவட்ட வைத்தியசாலை மற்றும் நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகம் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசத்தில் நாளாந்தம் சஞ்சாரம் செய்வோரின் எண்ணிக்கை 55,000ஆக இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது.

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் மொத்த நிலப்பரப்பில் 543.7 ஹெக்ரயர் ஆகும். 2004ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நிலப்பயன்பாட்டு திட்டத்திற்கமைய 2017ஆம் ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 464.9 ஹெக்ரயர் காணி பயன்பட்டுள்ளது. அதன்படி, மொத்த நிலப்பரப்பில் 85.5 சதவீதமான காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரதேசத்தில் காணப்படும் சுற்றாடல் ரீதியாக கூருணர்வு கொண்ட வயற் காணிகள், சதுப்பு நிலங்கள் மற்றும் நீர்நிலைகளும். இன்றளவில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத விவசாய தென்னைக் காணிகள், கறுவாய் காணிகள் மற்றும் வெற்றுக் காரணிகளும் காணப்படுகின்றன. வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டு கோலம் அட்டவணை இலக்கம் 01இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இல 01: வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - நிலப் பயன்பாட்டுக் கோலம் (2004 – 2017)**

| பயன்பாடு | நிலப்பரப்பு (ஹெக்) 2004 | சதவீதம் (%) 2004 | நிலப்பரப்பு (ஹெக்) 2017 | சதவீதம் (%) 2017 | நிலப்பரப்பு (ஹெக்) |
|---|---|---|---|---|---|
| வதிவிட | 339.9 | 62.50% | 353.7 | 65.05% | 13.8 |
| வர்த்தக | 14.1 | 2.59% | 20.2 | 3.71% | 6.1 |
| கைத்தொழில் | 5.8 | 1.07% | 6.4 | 1.18% | 0.6 |
| அரச நிறுவனம் | 16.4 | 3.02% | 18.8 | 3.45% | 2.4 |
| வீதி, போக்குவரத்து | 28 | 5.13% | 29.7 | 5.46% | 1.7 |
| பூங்கா, விளையாட்டு மைதானம் | 3.8 | 0.70% | 3.8 | 0.07% | 0 |
| மதத் தலங்கள் | 10.6 | 1.95% | 10.6 | 1.99% | 0 |
| சுடலை | 2.2 | 0.40% | 2.2 | 0.40% | 0 |
| சுற்றுலா | 7.1 | 1.30% | 17.7 | 3.26% | 10.6 |
| திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | | 1.8 | 0.33% | 1.8 |
| வயல் | 33.1 | 6.09% | 20.9 | 3.99% | -12.2 |
| தென்னை | 25.7 | 4.73% | 12.3 | 2.26% | -13.4 |
| பயிர்ச்செய்கை | 21.6 | 3.97% | 10.5 | 1.93% | -11.1 |
| வெற்றுக்காணி | 10 | 1.84% | 10 | 1.84% | 0 |
| சதுப்பு நிலம் | 9.5 | 1.75% | 9 | 1.66% | -0.5 |
| நீர் | 15.9 | 2.92% | 15.9 | 2.92% | 0 |
| இறங்குதுறை | | | 0.2 | 0.03% | 0.2 |
| | **543.7** | **100%** | **543.7** | **100%** | **-** |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை

வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள வீதிகளை A,B,C மற்றும் D தர என வகைப்படுத்தலாம். A,B தர வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினாலும், C,D தர வீதிகள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினாலும், E தர வீதிகள் வெலிகம நகர சபையினாலும் பராமரிக்கப்படுகின்றன. குறித்த வீதிக் கட்டமைப்பு தொடர்பான விபரங்கள் அட்டவணை இலக்கம் 02இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை இல 02: வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - வீதிக் கட்டமைப்பு -2017**

| தரம் | பராமரிக்கும் நிறுவனம் | வீதிகளின் எண் | நீளம் (கி.மீற்றர்) |
|---|---|---|---|
| A | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 01 | 7.5 |
| B | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 02 | 1.8 |
| C | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 05 | 6.38 |
| D | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 08 | 3.40 |
| E | நகர சபை | 314 | 50.57 |
| மொத்தம் | | **330** | **69.65** |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை, மா.வீ.அ.அ¤ வெலிகம நகர சபை – 2017

மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு A தரத்திற்குரிய வீதிகளாக கொழும்பு - வெல்லவாய பெருந்தெரு மற்றும் பழைய காலி வீதி, வெலிகம - அக்குரெஸ்ஸ வீதி மற்றும் புகையிரத நிலைய வீதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அவ்வீதிகளின் நீளம் 9.3 கிலோமீற்றராகும். மேலும், கொழும்பு மாத்தறை புகையிரத வீதி நகரத்தை ஊடறுத்துச் செல்வதோடு அதன் நீளம் 3.2 கிலோ மீற்றர். மேற்படி வீதிக் கட்டமைப்புடன் இணையும் பொது வீதிகளும் தனியார் வீதிகளும் காணப்படுகின்றன. அத்தோடு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொக்மாதுவ இடைமாற்று நிலையம் வெலிகம நகரிலிருந்து 06 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

வெலிகம நகர பிரதேசத்திற்குரிய மொத்த நிலப்பரப்பு 543.8 ஹெக்ரயராகும். இதில் 29.7 ஹெக்ரயர் பரப்பு வீதிகளுக்குரியதாக காணப்படுகின்றது. அதன்படி, மொத்த நிலப்பரப்பில் 5.5 சதவீதம் வீதிகளுக்குரியதாக காணப்படுவதோடு அதன் உண்மையான குறைந்தபட்ச நியமமாக காணப்படுகின்ற 10 சதவீதத்தையேனும் அது பூர்த்தி செய்யவில்லை.

2011ஆம் ஆண்டின் குடிசன, வீட்டு வசதி தொகை மதிப்பின்படி வெலிகம நகரத்தின் எழுத்தறிவு 95 சதவீதமாக காணப்படுவதோடு அது மாவட்ட எழுத்தறிவு மட்டத்திற்குச் சமமானது. பிரதேசத்தில் கல்வி வழங்கும் நிறுவனங்கள் என்ற வகையில் அரசாங்கத்தின் 09 பாடசாலைகளும் 03 தனியார் பாடசாலைகளும் அரசாங்கத்தின் தொழில் பயிற்சி நிலையமொன்றும் காணப்படுகின்றது.

**அட்டவணை இல 03: வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் விபரங்கள் - 2017**

| தொ இல | பாடசாலையின் பெயர் | ஆசிரியர் எண் | மாணவர் எண் | ஆசிரிய மாணவ விகிதாசாரம் | கட்டடங்களுக்குரிய நிலப் பரப்பு (ச.மீ) | வகுப்பறை இட வசதி (ச.மீ) | வி. மைதானம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கப்கரதொட்ட சங்காநந்த ம. கல்லூரி | 16 | 167 | 10.45 | 429 | 2.6 | இல்லை |
| 02 | வெலிகம ஜினராஜ கனிட்ட வித்தியாலயம் | 16 | 241 | 15.05 | 477 | 2.0 | ஆம் |
| 03 | வெலிகம தர்மராஜ கனிட்ட வித்தியாலயம் | 22 | 325 | 14.8 | 559 | 1.7 | இல்லை |
| 04 | ஶ்ரீ சுமங்கள மகளிர் கல்லூரி | 112 | 2,727 | 24.3 | 2,814 | 1.0 | இல்லை |
| 05 | பெலேன வஜிரஞான மகா வித்தியாலயம் | 23 | 286 | 12.4 | 1,076 | 3.7 | இல்லை |
| 06 | தர்மபால மாதிரி கனிட்ட வித்தியாலயம் | 28 | 325 | 33.0 | 559 | 0.6 | இல்லை |
| 07 | வெலிகம சித்தார்த கனிட்ட வித்தியாலயம் | 94 | 2,048 | 21.8 | 1,099 | 0.4 | இல்லை |
| 08 | அர்பா இடைநிலை கல்லூரி | 52 | 1,252 | 24.0 | 1,236 | 1.7 | ஆம் |
| 09 | முஸ்லிம் ஆரம்ப பாடசாலை | 23 | 782 | 34.0 | 513 | 0.7 | இல்லை |
| **மொத்தம்** | | **386** | **8,153** | **21.12** | **8,762** | **1.1** | - |

மூலம் : பாடசாலைகள் பற்றிய ஆண்டறிக்கை – 2017, வலயக் கல்விக் காரியாலயம், வெலிகம

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது மாணவர் ஒருவருக்கு இருக்கவேண்டிய வகுப்பறை இடவசதி 1.1 சதுர மீற்றராக காணப்படுவதோடு அது ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமமான 0.9 சதுர மீற்றரைவிட அதிகமாகும். எவ்வாறாயினும், தர்மபால முன்னோடி வித்தியாலயம், வெலிகம சித்தார்த்த தேசிய பாடசாலை மற்றும் முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் ஒரு மாணவருக்குரிய வகுப்பறை இடவசதி 0.7 சதுர மீற்றரை விட குறைவாக உள்ளதோடு அது ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்தை விடவும் குறைவான பெறுமானத்தை கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க பாடசாலைகளைவிட நகரத்தில் 06 சர்வதேச பாடசாலைகள் காணப்படுகின்றன. 2016ஆம் ஆண்டில் அவற்றினுடைய மொத்த மாணவர் எண்ணிக்கை 824ஆகவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 84ஆகவும் காணப்பட்டது. நகரத்தில் காணப்படும் இரண்டு பிரிவெனாக்களில் 2016ஆம் ஆண்டு மொத்த மாணவர்

எண்ணிக்கை 88. தரம் 1 தொடக்கம் 11 வரை 11 மேலதிக வகுப்புகளும் தொழில் பயிற்சி நிலையமொன்றும் காணப்படுகின்றது. இந்த நிறுவனங்களால் நகரத்தில் உள்ளவர்களுக்கும் நகரத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கும் கல்விச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

நகரத்தினுள் இயற்கையான சில வடிகாலமைப்புகள் காணப்படுகின்றன. அவையாவன, பொல்அத்துமோதர கங்கை, கப்பரதொட்ட கடனீரேரி, பொல்கந்தான கால்வாய், அக்ரபோதி கால்வாய், யான்ஓயா கால்வாய் மற்றும் குட்செட் கால்வாய். பிரதேசத்தின் வடிகாலமைப்பு கட்டமைப்பை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக 1994ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியில் ஆக்ராபோதி கால்வாய், யான்ஓயா கால்வாய் மற்றும் குட்செட் கால்வாய் என்பன கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நகரத்தில் சேரும் நீர் உரிய முறையில் வழிந்து ஓடாது தேங்குவதால் நகரத்தின் மத்தியில் ஈக்களின் தொல்லையும் நோய்கள் பரவும் ஆபத்தும் காணப்படுகின்றது.
நகரத்தில் 99.0 சதவீதம் துப்புரவேற்பாட்டுடனான நீர் அடைப்பு கழிப்பறைகள் காணப்படுவதோடு 0.6 சதவீத துப்புரவேற்பாடற்ற கழிப்பறைகள் காணப்படுகின்றன. இவை தவிர நகர சபையினால் பராமரிக்கப்படும் 08 பொது கழிப்பறைகளும் காணப்படுகின்றன.

வெலிகம நகரத்தில் காணப்படும் பின்வரும் அரசு நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றன.

1. வெலிகம மாவட்ட வைத்தியசாலை
2. பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம்

வெலிகம நகரத்திலுள்ளவர்களுக்கு இரண்டு பிரிவுகளின் கீழ் சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. அவையாவன தடுப்பு சேவைப் பிரிவு மற்றும் சிகிச்சை சேவைப் பிரிவு. நோய் தடுப்பு தொடர்பான பணிகள் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

இரண்டு வைத்தியர்கள், ஐந்து பொது சுகாதார பரிசோதகர்கள், 18 குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள் (பெண்கள்) மற்றும் பற் சிகிச்சையாளர் ஒருவரினூடாக பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 76,285 பேருக்குத் தேவையான சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, வெலிகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 38,142 பேருக்கு ஒரு சுகாதார சேவை அலுவலரும், 15,257 பேருக்கு ஒரு பொது சுகாதார பரிசோதகரும், 4238 பேருக்கு ஒரு குடும்ப சுகாதார சேவை அலுவலரும் (பெண்) தேவையற்றுகின்றனர். சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தின்படி 8000 பேருக்கு ஒரு சுகாதார சேவை அலுவலரும், 6,000 பேருக்கு ஒரு பொது சுகாதார பரிசோதகரும், 3000 பேருக்கு ஒரு குடும்ப சுகாதார சேவை அலுவரும் சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், இப்பிரதேசத்திலுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தை விடவும் குறைவானது.

வெலிகம நகர சபையின் அபிவிருத்தி பிரிவிலிருந்து பெறப்பட்ட தரவுகளுக்கமைய நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் திண்மக் கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் பணி வெலிகம நகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. நாளொன்றில் இப்பிரதேசத்தில் சுமார் 15 தொன் குப்பைக் கூளங்கள் சேர்கின்றன. இவற்றில் பொதுச்சந்தை, வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், மாவட்ட வைத்தியசாலை மற்றும் குடியிருப்புகளிலிருந்து அகற்றப்படும் திண்மக்கழிவுகளும் அடங்கும். இவ்வாறு சேர்கின்ற திண்மக் கழிவுப் பொருட்களில் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுப் பொருட்களின் கட்டமைப்பு அட்டவணை இலக்கம் 04இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இல 04: வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம், திண்மக் கழிவுப்பொருள் கட்டமைப்பு - 2016**

| கட்டமைப்பு | சதவீதம் % |
|---|---|
| உக்கும் தாவர மற்றும் விலங்குகளின் பகுதிகள் | 80.0 |
| உக்காத பொருட்கள் | 10.0 |
| எக்கருமத்திற்கும் பயன்படுத்த முடியாத பொருட்கள் | 10.0 |
| மொத்தம் | 100.0 |

மூலம்: வெலிகம நகரசபை, அபிவிருத்திப் பிரிவு – 2016

மேலுள்ள அட்டவணையின் படி நகரத்தினுள் பிறப்பிக்கப்படும் குப்பை கூளங்களில் 80% உக்கக்கூடிய தாவர மற்றும் விலங்குகளின் பாகங்களைக் கொண்டுள்ளன. நகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்களில் உக்கக்கூடிய பொருட்களைத் தெரிவு செய்து, கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந்தமான 17 ஏக்கர் பரப்பில் காணப்படும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் நகர சபை மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதோடு இது நகரத்தை அழகு படுத்துவதற்கும் துப்புரவேற்பாட்டுக்கும் துணைபுரிகின்றது.

திண்மக் கழிவுப் பொருட்களில் 10% கழிவுப் பொருட்கள் உக்காதவையாக காணப்படுகின்றன. அவற்றில் காணப்படும் பிளாஸ்டிக், கண்ணாடி போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு எஞ்சிய பகுதிகள் மீள்சுழற்சி செய்யப்படும். மீள்சுழற்சி செய்ய முடியாத சுமார் 05 சதவீத பொருட்களை இறுதியாக அகற்றும் இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய போதும், அதற்கான ஓரிடம் இல்லை என்பது வெலிகம நகர சபையில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் மூலம் வெளிப்படுகின்றது.

வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் சுற்றாடல் வனப்பை அதிகரிக்கும் பூகோளச் சிறப்பம்சங்களாக குடாவினைக் கொண்ட கரையோரப் பரப்பு மற்றும் கிழக்கு எல்லை ஊடாக பாயும் பொல்அத்துமோதர கங்கை காணப்படுகின்றது.

பிரதேசத்தின் சராசரி உயரம் 0-5 மீற்றருக்கும் இடைப்பட்டதாக இருப்பதுடன், இப்பிரதேசத்தில் ஒட்டு மொத்த நிலப்பரப்பின் 95 சதவீதமான பகுதி அமைந்துள்ளது. பரண கடே, கல்பொக்க மற்றும் பெலேன கிராம அலுவலர் பிரிவு 0-15 இடைப்பட்ட மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. தேசப்பட இலக்கம் 04இல் காட்டப்பட்டுள்ளவாறு வெலிகம நகர சபையின் ஆளுகை பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றாடல் ரீதியாக கூருணர்வு கொண்ட பிரதேசங்கள் பின்வருமாறு

- ❖ குடாவினை கொண்ட மூன்று கிலோமீற்றர் நீளமான கரையோரப் பரப்பு
- ❖ தீவுகள்
- ❖ முனைகளும் பாறைகளும்
- ❖ கப்பரதொட்ட கடனீரேரி மற்றும் அதை அண்டிய கண்டல் நிலத் தொகுதி
- ❖ பொல்அத்துமோதர கங்கையும் சுற்றாடல் தொகுதியும்
- ❖ இயற்கையாக அமைந்த கால்வாய்கள்
- ❖ தாழ் நிலங்களும் வயற் காணிகளும்

# தேசப்பட இல 04: வெலிகம நகரசபை ஆளுகையின் சுற்றாடல் கூருணர்வுகொண்ட பிரதேசங்கள் - 2018




**தொடர்பு**

- சதுப்பு நிலம்
- வயற் காணிகள்
- நீர் நிலைகள்
- கடற்கரை
- தாழ் நிலம்
- ஏ தர வீதிகள்
- பி தர வீதிகள்
- வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்
- புகையிரத வீதி

N W E S

1:16,000

## வெலிகம நகர சபை ஆளுகையின் சுற்றாடல் கூருணர்வு கொண்ட பிரதேசங்கள் 2018

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 04**

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர
அபிவிருத்தி
அதிகார
சபை

## 2.3 திட்டவமைப்பு பிரதேசத்தை நிர்ணயித்தல்

ஆய்வுப் பிரதேசத்தைக் கவனத்தில் கொண்டு திட்டவமைப்பு பிரதேசத்தின் திட்டவமைப்பு எல்லைகளை நிர்ணயிக்கும் போது கீழே 03ஆம் இலக்கத்தில் தரப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வெலிகம அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**1. தொழிற்பாட்டுப் பிரதேசம்**

வெலிகம நகர பிரதேசம் பல்வேறு மூலவளங்களினால் நிரம்பப்பெற்ற வித்தியாசமான பயன்பாடுகளைக் கொண்ட ஒரு நகரமாகும். நகரத்தின் மையப் பிரதேசம் வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ளதோடு நகரத்தின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள கரையோர வலயத்தில் சுற்றுலாத் கைத்தொழிலும் மீன்பிடித்தொழிலும் நிலைகொண்டுள்ளது. அதேபோல் நகரத்தின் கிழக்கு எல்லையில் பாயும் பொல்அத்துமோதர கங்கை சுற்றுலாக் கைத்தொழிலுக்கான சிறந்த அணுக்கத்தை தருகிறது. நகரம் பூராகவும் வியாபித்துள்ள வீதிக் கட்டமைப்பு நகரவாசிகளுக்கும் நாளாந்தம் நகரத்தில் சஞ்சாரம் செய்பவர்களுக்கும் சிறந்த வாய்ப்பாக அமைகின்றது. நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக வருகின்ற மக்களில் 90 சதவீதமானோர் வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திலும், பிரதேச சபையின் அழகைப் பிரதேசத்திலும் வசிப்பவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது. இன்றளவில் வெலிகம நகரசபை அழுகைப் பிரதேசத்தின் சனத்தொகை அடர்த்தியும் குடியிருப்புகளின் அடர்த்தியும் உயர்ந்த பெறுமானத்தை கொண்டுள்ளதோடு பல்வேறு வகையான உட்கட்டமைப்பு வசதிகளும் ஒருங்கே காணப்படுகின்றன. இதனால் காணிகளின் பெறுமதி அதிகரித்துள்ளது. நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கு அப்பால் சனத்தொகை அடர்த்தியும் உட்கட்டமைப்பு வசதி விரிவாக்கமும் படிமுறையான வீழ்ச்சியை காட்டுவதால் காணிகளின் பெறுமதியும் குறைவாக காணப்படுகின்றது.


**2. பூகோளப் பண்புகள்**

வெலிகம நகரமானது வெலிகம கூட, பொல்அத்துமோதர கங்கை, கப்பரதொட்ட கடனீரேரி மற்றும் மழைநீர் இயல்பாகவே வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ள கால்வாய் கட்டமைப்பொன்றை கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இந்த இயற்கையான அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு நகரவாசிகளின் குடியிருப்புகள் நகரத்தின் மத்திய பகுதியை மையமாகக் கொண்டு விரிவடைந்துள்ளன.

### 3. நிர்வாக எல்லைகள்

வெலிகம பிரதேச செயலகப் பிரிவு, வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசம் மற்றும் வெலிகம பிரதேச சபை ஆளுகையின் ஒரு பகுதியையும் ஒருங்கிணைத்ததாக வெலிகம நிர்வாக எல்லை காணப்படுகின்றது. தற்போது நகரப் பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்தியை கவனத்தில் கொண்டு பாரிய மாத்தறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பிரதேசசபை ஆளுகைப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே காணப்படுகின்ற நகரசபை ஆளுகைப் பிரதேசம் அவ்வாறே தேசப்பட இலக்கம் 05இல் காட்டப்பட்டுள்ளவாறு இந்த அபிவிருத்தி திட்டவமைப்பில் ஓர் அபிவிருத்தி பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது.

தேசப்பட இல 05: நிர்வாக எல்லை




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

## 3.0 அபிவிருத்தி திட்டவமைப்பொன்றின் தேவைப்பாடு

நகரத்தில் காணப்படும் மூலவளங்களை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்துவதற்கும், தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை நிவர்த்தி செய்துகொண்டு திட்டமிடப்பட்ட அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கும் வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கான அபிவிருத்தித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வெலிகம நகரமானது கரையோர பிராந்தியத்தில் சுற்றாடல் கூருணர்வுகொண்ட வலயமொன்றில் அமைந்துள்ள விசேட பொருளாதார பெறுமானங்களையுடைய ஒரு பிரதேசமாகும். சுற்றுலா ஈர்ப்பு கொண்ட 2.5 கிலோமீற்றர் வரையான நீளங்கொண்ட கரையோர பரப்பினை தன்னகத்தே கொண்டுள்ள இந்த நகரம் ஆதிகாலம் தொட்டு மிதித்தேறி நின்று மீன்பிடித்தல் கைத்தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்று உள்ளது. இன்றளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அலைச்சறுக்கு விளையாட்ன்பால் ஈர்த்துக் கொள்ளும் கடற்பரப்பை கொண்டிருப்பதும், மாத்தறை - கொழும்பு பிரதான வீதி, கொழும்பு - மாத்தறை புகையிரத வீதி மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக மிக வசதியான அணுக்கத்தை கொண்டிருப்பதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடக்கலை வடிவங்களினாலான கட்டடங்கள் காணப்படுவதும் நகரத்தின் மூலவளங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

அதிகளவான மூல வளங்களைக் கொண்ட வெலிகம நகரத்திற்கு ஆண்டுதோறும் வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது. எவ்வாறாயினும், இந்த நகரை நோக்கி வரும் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. பிரதேசத்தில் நீர் இயல்பாகவே வழிந்தோடாது வடிகால்களில் தேங்குவதால் டெங்கு, வாந்திபேதி போன்ற நோய்கள் பரவுவதற்கு காரணமாக அமைவதோடு நகரத்தின் மத்திய பகுதியில் துர்நாற்றம் வீசுவதற்கும் ஏதுவாகின்றது. அதேபோல், வெலிகம நகரப் பிரதேசத்திற்காக கழிவுநீர் மற்றும் சாக்கடை பரிகரிப்புத் தொகுதியொன்று இன்மையால் மழைக்காலங்களில் இந்த பிரதேசத்தில் காணப்படும் சில கழிப்பறைகள் நிரம்பி வழிந்து சுகாதாரம் சார்ந்த பிரச்சனைகளுக்கு வழிவகுத்துள்ளது. எனவே, கழிவுநீர் பொல்அத்துமோதர கங்கை மற்றும் சுற்றாடல் ஈர்ப்பு கொண்ட வெலிகம கரையோரப் பரப்பில் சேர்வதால் கடல் நீர் மாசடையும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பொருத்தப்பாட்டு தேசப்படத்திற்கமைய வெலிகம நகரின் மத்திய பிரதேசம் அபிவிருத்தி பணிகளுக்கு உகந்தவொன்றாக உள்ள போதிலும், அதன் நிலத்தின் தன்மைக்கேற்ப, அதாவது நீர் தேங்கி நிற்பதால் டெங்கு, யானைக்கால் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. நகர அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது கீழ்க்காணும் பிரச்சனைகள் இனங்காணப்பட்டன.

1. நீர் இலகுவாக வழிந்தோடக் கூடிய வகையில் மேற்பரப்பு வடிகால் தொகுதியும் கால்வாய்களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளபோதும் அவை உரிய முறையில் பராமரிக்கப்படாததன் காரணமாக கீழே தரப்பட்டுள்ள 05 மற்றும்

06ஆம் நிழற்படங்களில் காட்டப்பட்டுள்ளவாறு நீர் இயல்பாக வழிந்தோடுவதற்கு தடை ஏற்பட்டுள்ளது.
உதாரணம் - யான் ஓயா கால்வாய், அக்ரபோதி கால்வாய் குட் செட் கால்வாய்

**நிழற்படம் 05: குட்செட் கால்வாய்**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

**நிழற்படம் 06: அக்ரபோதி கால்வாய்**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

2. கீழே 07, 08, 09 மற்றும் 10ஆம் நிறழ்படங்களில் காட்டப்பட்டுள்ளவாறு நகரத்தின் மத்தியில் காணப்படுகின்ற வர்த்தக அபிவிருத்திக்காக பயன்படுத்தக் கூடிய அதிகமான வர்த்தகப் பெறுமதிகொண்ட காணிகள் குறைபயன்பாடுடையனவாக காணப்படுகின்றன.

**நிழற்படம் 07: கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

**நிழற்படம் 08: புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணி**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

**நிழற்படம் 09: மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரச்சபைக்குச் சொந்தமான காணி**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

**நிழற்படம் 10: வீதி அபிவிருத்தி அதிகாரச்சபைக்குச் சொந்தமான காணி**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

3. வெலிகம நகரசபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டத்திற்காக மேற்படி உயிர் பல்வகைமை கொண்ட கப்பரதொட்ட கடனீரேரி மற்றும் அதை அண்டிய சதுப்பு நிலப் பிரதேசத்தை பயன்படுத்தியுள்ளது. கப்பரதொட்ட கடனீரேரி சுற்றாடல் ஈர்ப்பு கொண்ட, வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் நகரத்தின் நீர் வழிந்து ஓடுவதற்காக காணப்படுகின்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் கூருணர்வுகொண்ட ஒரு பிரதேசமாகும். எனினும், நிழற்பட இலக்கம் 11 மற்றும் 12இல் காட்டப்பட்டுள்ளவாறு வெலிகம நகரசபை குறித்த கடனீரேரி அமைந்துள்ள பிரதேசத்தில் பாரியளவில் திண்மக் கழிவுப் பொருட்களைக் குவித்துள்ளது. இதனால் சுற்றயல் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய சுற்றாடல் தொகுதிக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

**நிழற்படம் 11: கப்பரதொட்ட கடனீரேரி**



மூலம் : Google Earth, 2018

**நிழற்பட இல 12: திண்மக் கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டுள்ள பிரதேசம்**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

4. வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வாகன போக்குவரத்திற்காக வீதிக் கட்டமைப்பொன்று உள்ளபோதிலும் கீழே தரப்பட்டுள்ள நிழற்பட இலக்கம் 13இல் காட்டப்பட்டுள்ளவாறு வேலைப்பளு கூடிய நேரங்களில் நகரத்தின் மத்திய பிரதேசத்தில் அதிகமான வாகன நெரிசல் காணப்படுகின்றமை. இதற்கு உதாரணமாக ஹெட்டி வீதி, வெலிகம - அக்குரெஸ்ஸ வீதி, வஜிரஞான மாவத்தை மற்றும் பழைய காலி வீதியை குறிப்பிடலாம்.

**நிழற்படம் 13: ஹெட்டிவீதி**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

5. வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்திற்கு நீரை வழங்கும் பிரதான மூலமாக பொல்அத்துமோதர கங்கை காணப்படுகின்றது. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கமைய இப்பிரதேசத்தில் இன்றளவில் கேள்விக்கு நிகரான நீர்வளங்கள் இடம்பெறுவதில்லை என்பதுடன், நகர எல்லையினுள் நீரின் அமுக்கம் குறைவாக காணப்படுகின்றது. அதன்படி, தற்போதுள்ள நீர் கொள்ளளவு போதாமை நகர மக்கள் எதிர்நோக்கியுள்ள மற்றுமொரு பாரிய பிரச்சினையாகும்.

6. வெலிகம நகர சபையின் ஆளுகை பிரதேசத்தினுள் 09 அரசாங்கப் பாடசாலைகள் காணப்படுவதோடு அவற்றில் 05 பாடசாலைகள் இடைநிலைப் பாடசாலைகளாகும். நகரத்திலுள்ள 09 பாடசாலைகளில் 07 பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லை. இரண்டு பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்கள் காணப்பட்ட போதிலும் அவை போதுமானவையாக இல்லை. இதற்கு மேலதிகமாக 2017.12.19ஆம் திகதி நடைபெற்ற பங்கீடுபாட்டாகேற்பாளர்களின் கூட்டத்தில் கீழ்க்காணும் பிரச்சனைகள் இனங்காணப்பட்டன.

   - சுற்றுலா ஈர்ப்பு கொண்ட பிரதேசங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படாமை.
   - சுற்றுலா மதியுரைச் சேவைகள் இன்மை.
   - சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை.
   - தற்போதுள்ள சுற்றாடல்சார் சுற்றுலா பிரதேசங்களை உரிய வகையில் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமை.
   - துப்புரவேற்பாட்டு வசதிகள் உரிய முறையில் ஏற்பாடு செய்யப்படாமை.ாாாாாா

மேலே சொல்லப்பட்டுள்ள சகல விடயங்களையும் ஆராயும்போது வெலிகம நகரப் பிரதேசத்தில் தற்போது காணப்படும் மூலவளங்களை அதியுச்ச பயன்பாட்டில் ஈடுபடுவதற்காகவும், பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகளைக் குறைப்பதற்காகவும், நகரத்தின் அபிவிருத்திக்கு தடைக்கற்களாக உள்ளவற்றை நீக்கி தென்னிலங்கையை மிகச்சிறந்த உயிர்ப்பு பெறும் சுற்றுலாவுக்கான சொர்க்கப்புரியாக, திட்டமிடப்பட்ட அபிவிருத்தியை மேற்கொள்ளவதற்காகவும் அபிவிருத்தி திட்டவமைப்பொன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

வெலிகம நகர் பிரதேசத்தில் வாழும் மக்களில் சுமார் 28 சதவீதமானோர் மீன்பிடித் கைத்தொழிலிலும் 25 சதவீதமானோர் சுற்றுலா நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். எவ்வாறாயினும், இவர்களுக்கு மீன்பிடி மற்றும் சுற்றுலா கைத்தொழிலை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான நுட்பம்சார்ந்த அறிவு இதுவரை கிடைக்காத

காரணத்தினால் இவர்கள் பயிற்றப்படாத ஊழியர்களாக உள்ளனர். இவை இந்தப் பிரதேசத்தின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாக காணப்படுவதால், சுற்றுலாப் பயணிகளின் வருகை காலத்தில்மட்டும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் அநேகமானோர் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபடும் போக்கு காணப்படுகின்றது.

தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு அறிக்கையின்படி, வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் 46.4 சதவீதமானோர் அதாவது 10269 பேர் 15 - 44 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். இதில் 4929 பேர் (45.9%) ஆண்களாகவும், 5340 பேர் (46.8%) பெண்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியை பெறாதவர்களுக்கு அந்த வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் பிரதேசத்தில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள முடிவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு கூடிய பங்களிப்பை செலுத்தவும் முடியும்.

மேற்படி இனங்காணப்பட்ட பிரச்சனைகள் வெலிகம நகரத்தின் எதிர்கால அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அதனூடாக ஏற்படும் முறையற்ற அபிவிருத்தி நகரத்தின் பொருளாதார பின்னடைவுக்கு ஏதுவாக அமையும். ஆகவே, அவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும், வெலிகம நகர் பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதாரத்திற்கு வலுவூட்டி நகரத்திற்கு வருகைதரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சகலவிதமான வசதிகளை வழங்குவதற்காகவும் இந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுவதோடு, இதன்மூலம் வெலிகம நகரத்தை சுற்றுலாவின் சொர்க்கபுரியாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# பகுதி இரண்டு

# வெலிகமை நகர சபை, அபிவிருத்தி திட்டத்திற்கான அனுமதி

2019.07.09 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய, நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 41 இல், திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 4 இன், பிரிவு 8F இன் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வெலிகமை நகர சபை, அபிவிருத்தி திட்டத்திற்கு பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக ரணவக்க ஆகிய நான் இத்தால் அனுமதி வழங்குகின்றேன்

---------------------------------------------

பாட்டலி சம்பிக்க ரணவக்க
பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு
17 மற்றும்18 ஆம் மாடிகள்,
“சுஹுரீபாய”
ஶ்ரீ சுபத்திபுர வீதி, பத்தரமுல்லை

திகதி : 2019.8.01

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/24 - 2019 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2019.08.06

2135/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகஸ்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### வெலிகமை நகர சபை அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டத்தின் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இந்தச் சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட வெலிகமை நகர சபை அபிவிருத்தி திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு ஓகஸ்து மாதம் 01 ஆந் திகதி அனுமதி வழங்கினேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும்18 ஆம் மாடிகள்,
"சுஹுருபாய",
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, ஓகஸ்து 01.

1A – G 30680 – 27 (2019/08)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2A I කොටස : (I) ඡෙදය - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ අති විශෙෂ ගැසට් පත්‍රය - 2019.08.06
பகுதி I : தொகுதி (I) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேடமானது - 2019.08.06

**வெலிகம நகர சபை அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி**

வெலிகம நகர சபை, அபிவிருத்திப் பகுதிக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு "8A" இன் கீழ் தயாரிக்கப்பட்ட வெலிகம அபிவிருத்தித் திட்டமானது, பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரான பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப் பிரிவு 8F இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 2019, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

கலாநிதி ஜகத் முனசிங்க,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகார சபை.

2019, ஓகத்து 01.

08-751

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# 4.0 அபிவிருத்தி திட்டவமைப்புச் சட்டகம்

## 4.1 நோக்கு

***"தென்னிலங்கையில் மலரும் சுற்றுலாவின் சொர்க்கப்புரி" (The Blooming Tourism Bay City in Down South)***




## 4.2 நோக்கின் வெளிப்பாடு

வெலிகம குடாவை அண்டியதாக காணப்படும் வளைவான அமைவு வெலிகம நகரத்தின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. வெலிகம நகரத்தின் எப்பாகத்திலிருந்தும் கடலைக் கண்டு ரசிக்க முடியும். இரண்டரை கிலோ மீற்றர் நீளமான அகன்ற கடற்கரை பரப்பு மற்றும் ஆழமற்ற கடல் சுற்றுலாக் கைத்தொழிலுக்கான சிறந்த களமாகவும், ஆழமான கடல் பகுதி மீன்பிடிக் கைத்தொழிலுக்கு உகந்த இடமாகவும் காணப்படுகின்றது. மேலும், ஆழமற்ற கடல் பகுதி மீன்பிடி படகுகளுக்கு பாதுகாப்பைபளிப்பதால் கரையோர வலயத்தை சுற்றுலா நடவடிக்கைகளுக்கும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியுமென மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, வெலிகம கடற்கரைப் பரப்பானது அகன்றதாக காணப்படுவதும், ஆழமற்ற கடல் பிரதேசத்தைக்கொண்ட வளைவானது சுற்றுலா மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு மிகச்சிறந்த அணுக்கமாகவும் காணப்படுகின்றது. நகரத்தில், நீர் இயல்பாகவே வழிந்தோடக் கூடிய வகையில் அமைந்துள்ள கால்வாய் தொகுதி மற்றும் வடிகால்கள் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துகின்றன. வெலிகம குடாவுக்குச் சமாந்தரமாக அமைந்துள்ள இயற்கையான நீர்நிலை கட்டமைப்பு உருவக் குறிப்பு 01இல் காட்டப்பட்டுள்ளது.

**உருவக் குறிப்பு 01: வெலிக குடாவும் நீர்நிலைக் கட்டமைப்பும்**



மூலம் : செய்மதில புகைப்படம் – 2018

**சுற்றுலாவின் சொர்க்கப்புரி**

இயற்கை வளங்களும் நீரியல் வளங்களும் நிரம்பப் பெற்றுள்ள வெலிகம நகரம் சுற்றுலா மற்றும் மீன்பிடி கைத்தொழிலுக்குச் சிறந்த மூலவளமாக காணப்படுகின்றது. வெலிகம குடாவை அண்டியதாக காணப்படும் வளைவான அமைவு மற்றும் ஆழமற்ற கடல் அலைச்சறுக்கு விளையாட்டில் பயிற்சி பெறுவதற்கான சிறந்த இடமாகும். அதேபோல், இரண்டரை கிலோ மீற்றர் நீளமான கடற்கரை பரப்பு மற்றும் இயற்கையான உயிர் பல்வகைமையுடன் கூடிய சுற்றாடல் தொகுதி வெலிகம நகரத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான சிறந்த அணுக்கத்தை தருகிறது.

தற்போது காணப்படுகின்ற மீன்பிடி மற்றும் சுற்றுலா கைத்தொழிலை செங்குத்து அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவதன் மூலம் 2030ஆம் ஆண்டளவில் வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசத்தை சுற்றுலாப் பயணிகளுக்கான சகல வசதிகளையும் கொண்ட ஓர் இடமாக அபிவிருத்தி செய்வதற்கும், உள்நாட்டில் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் வெலிகம நகரத்தை **“பாதுகாப்பான சூழலுடன் கூடிய மலரும் ரம்மியமான சுற்றுலாவின் சொர்க்கபுரி”**யாக அபிவிருத்தி செய்வதற்கும் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- **பாதுகாப்பான சூழல்** - சமூக மற்றும் சுற்றாடல் ரீதியில் நிலைபேறான தன்மையை ஏற்படுத்தல்
- **மலர்தல்** - பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் துறையின்

இடைவிடாத அபிவிருத்தி

- **ரம்மியம்** - பௌதீக, சமூக மற்றும் கலாசார பண்புகள் வெளிப்படும் வகையிலான நிலக்காட்சி
- **அபிவிருத்தியின் சொர்க்கபுரி** - சுற்றுலா பயணிகளுக்கு சகல வசதிகளும் கொண்ட நகரம்

## 4.3 நோக்கங்கள்

1. வெலிகம குடாவை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா நகரம்
2. நகரத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் மீன்பிடிக் கைத்தொழில்
3. ரம்மியமான சூழலுடன் கூடிய எளிமையான நகரம்

## 4.4 குறிக்கோள்கள்

### 01. வெலிகம குடாவை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா நகரம்

1.1 2030ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் 05 சதவீதமானோரை அலைச் சறுக்கு விளையாட்டில் ஈர்த்தெடுக்கத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

1.2 2030ஆம் ஆண்டளவில் இனங்காணப்பட்ட சுற்றாடல் கூருணர்வு கொண்ட பிரதேசங்களின் கூருணர்வையும், இயற்கையின் வனப்பையும் பாதுகாத்தவாறு சுற்றாடல் ஈர்ப்பு கொண்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்.

1.3 2030ஆம் ஆண்டளவில் சுற்றுலாக் கைத்தொழில் சார்ந்ததாக 5000 நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தத் தேவையான சகல வசதிகளையும் ஏற்பாடு செய்வதற்கு பொருத்தமான இடங்களை இனங்காணல்.

### 02. நகரத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் மீன்பிடிக் கைத்தொழில்

2.1 2030ஆம் ஆண்டளவில் மீன்பிடித்துறையில் 3000 வரை வேலைவாய்ப்புகளை அதிகரித்துக் கொள்வதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

2.2 2030ஆம் ஆண்டளவில் மீன்பிடிக் கைத்தொழில் பயிற்றப்பட்ட 50 சதவீதமான ஊழியர்களை அதிகரிக்கத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

### 03. ரம்மியமான சூழலுடன் கூடிய எளிமையான நகரம்

3.1 2025ஆம் ஆண்டளவில் நகரத்தின் மத்தியில் அடையாளம் காணப்பட்ட வடிகாலமைப்பு முறைமை மற்றும் வீதி கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.

3.2 2025ஆம் ஆண்டளவில் 2.8 கிலோமீற்றர் நீளமான கடற்கரை பரப்பை ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக தயார் செயதல்.

## 5.0 பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பான பகுப்பாய்வு (ப.ப.வா.அ பகுப்பாய்வு மற்றும் தரவுப் பகுப்பாய்வுச் சுருக்கம்

**நோக்கம் 01: வெலிகம குடாவை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா நகரம்**

| | | | |
|---|---|---|---|
| **பலம்**<br>1. நகரத்தின் இயற்கையான அமைப்பு<br>2. சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் இனங்காணப்பட்டுள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலா பயண வழியில் அமைந்துள்ளமை.<br>3. மெரியட், கேப் ரிசோட், பே ரிசோட் போன்ற பிரசித்தி பெற்ற ஹோட்டல்கள் அமைந்துள்ளமை.<br>4. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக்கூடிய அரசு மற்றும் தனியாருக்கு சொந்தமான 12.8% வெற்றுக் காணிகள் உள்ளமை.<br>5. உயிர்காப்பு படையணியின் செயற்பாடுகள் கரையோர வளையத்தில் அமுலில் உள்ளமை.<br>6. வெலிகம நகர அபிவிருத்தி பிரதேசத்தை அண்டியதாக இயற்கை ஈர்ப்பு கொண்டதும் உயிர் பல்வகைமை கொண்டதுமான பிரதேசங்கள் காணப்படல். | ப | ப | **பலவீனம்**<br>1. கடற்கரை பரப்பு அசுத்தமடைந்து காணப்படல்.<br>2. அலைச்சறுக்கு விளையாட்டுகான வசதிகள் மற்றும் தகுதி வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள் இன்மை. |
| **வாய்ப்புகள்**<br>1. சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருகை தருவதில் படிமுறையான வளர்ச்சி<br>2. சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட 2017-2030 மூலோபாய சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தினால் எதிர்கால சுற்றுலா இயல்தகவு கொண்ட பிரதேசமாக இனங்காணல்.<br>3. மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தினால் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நீலத் திமிங்கிலத்தை பார்வையிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்தல். | வா | அ | **அச்சுறுத்தல்**<br>1. வெலிகம நகரத்திற்கு அருகாமையில் மிரிஸ்ஸ, உனவட்டுன, பொல்ஹேன போன்ற சுற்றுலா பிரதேசங்கள் காணப்படல். |

**நோக்கம் 01: வெலிகம குடாவை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா நகரம்**

**பலம்**

**1. வேலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் இயற்கையான அமைவு**

**தேசப்பட இல 06: வெலிகம நகரத்தின் இயற்கையான அமைவு**




மூலம் : **Google Earth ,2018**

தேசப்பட இலக்கம் 06இல் காட்டப்பட்டுள்ளவாறு வெலிகம குடாவை அண்டியதாக அமைந்துள்ள வெலிகம நகரம் சுற்றாடல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற 2.5 கிலோமீற்றர் நீளமான கடற்கரை பரப்பை கொண்டுள்ளதோடு, கடற்கரை சார்ந்த சுற்றாடல் தொகுதியைக் கொண்ட ராஸ்ஸமூன மற்றும் கந்தூவ போன்ற தீவுகளை கொண்டமைந்துள்ளது. இலங்கையிலுள்ள கடற்கரை பரப்புகளில் அலைச்சறுக்கு விளையாட்டுக்கு மிகவும் ஏற்ற வகையில் அலைகள் எழுகின்ற கரையோர பரப்பாக வெலிகம கரையோர பரப்பு பிரசித்தி பெற்றுள்ளது. இன்றளவில் பெலேன கரையோர பரப்பு மற்றும் மிதிகம கரையோர பரப்பு அலைச்சறுக்கு விளையாட்டுக்காக பயன்படுவதோடு, நிழற்பட இலக்கம் 14இல் காட்டப்பட்டுள்ள பெலேன பிரதேசத்திற்கு கூடுதலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக கள ஆய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**நிழற்படம் 14: பெலேன கடற்பரப்பு**




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

### 2. மிகவும் பிரசித்தமான சுற்றுலாப் பயணவழியில் அமைந்துள்ளமை.

தேசப்பட இலக்கம் 07இல் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலா பயணிகள் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அறிமுகம் செய்துள்ள 07 நாட்கள் 11 நாட்கள் மற்றும் 14 நாட்கள் கொண்ட பயண வழிகளை உள்ளடக்கும் வகையில் வெலிகம நகரம் அமைந்துள்ளமை அதனை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு பலமாக உள்ளதென இனங்காணப்பட்டுள்ளது.

**தேசப்பட இல 07: சுற்றுலா பயண வழிகள்**




மூலம் : சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

### 3. சுற்றுலா ஹோட்டல்கள் காணப்படுகின்றமை

வெலிகம நகரத்தில் கரையோரத்தை அண்டியதாக சுற்றுலா நடவடிக்கைகள் விரிவாக்கம் பெற்றுள்ளன. ஆளுகைப் பிரதேசத்திற்கு வருகை தரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக பல்வேறு நட்சத்திர தரத்திலான ஹோட்டல்கள், தங்குமிடங்கள், வீடுகள் மற்றும் உணவகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பிரதேசத்தில் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன ஒட்டுமொத்த அறைகளின் எண்ணிக்கையில் 68% ஆனவை சுற்றுலா ஓட்டல்களுக்கு சொந்தமானவையாக காணப்படுவதோடு அவ்வாறான ஹோட்டல்களில் சுமார் 623 பேர் பணியாற்றுகின்றனர். 200 அறைகளை கொண்டுள்ள மெரியட் ஹோட்டல் வெலிகம பெலேன பிரதேசத்தில் அமைந்துள்ளது. அதேபோல், 90 அறைகளையும் 45 விலாக்களையும் கொண்ட வெலிகம கேப் றிசாட் ஹோட்டல் கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. இந்த ஹோட்டல்களின் அமைவு வெலிக நகரத்தின் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு கூடுதலான பங்களிப்பைச் செய்கின்றன. 2012ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரை வெலிகம பிரதேசத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி கீழே தரப்பட்டுள்ள 02ஆம் இலக்க வரைபில் காட்டப்பட்டுள்ளது. கேப் றிசோட் மற்றும் மெரியட் ஆகிய ஹோட்டல்களின் தற்போதைய நிலை 12ஆம் இலக்க நிழற்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு இல 02: சுற்றுலாத் துறையின் முன்னேற்றம் 2012 – 2017**




மூலம் : கள ஆய்வு - 2017

**நிழற்படம் 15 : பிரதான சுற்றுலா ஹோட்டல்கள்**




**மூலம் : https://nashaplaneta.net/en/asia/srilanka/weligama**

4. கரையோரப் பிரதேசத்தில் அபிவிருத்திக்காக பயன்படுத்தக் கூடிய அரசுக் காணிகள்

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக்கூடிய காணிகள் அல்லது பொல்அத்துமோதர கங்கை மற்றும் கரையோர வலயத்தை அண்டியதாக காணப்படுதல் மிகச்சிறந்த மூலவளமாக இனங்காணப்பட்டுள்ளது. அபிவிதிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக்கூடிய 11 சதவீதமான அதாவது 57.81 ஹெக்ரயர் அரச காணிகள் காணப்படுதல் சாததகமான நிலையாகும். இக்காணிகளில் அமைப்பு தேசப்பட இலக்கம் 08இல் காட்டப்பட்டுள்ளது.

தேசப்பட இல 08: அபிவிருத்திக்காக பயன்படுத்தக் கூடிய அரசுக் காணிகளின் அமைவு



மூலம்: கள ஆய்வறிக்ஜ - 2018

## 5. கரையோரப் பிரதேசத்தில் உயிர்காப்பு படையணியின் செயற்பாடுகள்

இலங்கையின் பிரதானமான சுற்றுலா கடற்கரைப் பரப்பில் இலங்கை உயிர்காப்பு படையணியின் உப நிலையம் அமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இனங்கண்ட பின்னர் வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் மற்றும் பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்தை உள்ளடக்கியதாக பணியாற்ற தொழில்சார் உயிர் காப்பாளர்களை வெலிகம மிரிஸ்ஸ பிரதேசத்தில் நிலை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு தகைமை வாய்ந்த உயிர் காப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த கடற்கரை பரப்பில் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபடும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தால் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உயிர் காப்பாளர்களின் உன்னதமான சேவையையும் அர்ப்பணிப்பையும் பாராட்டியுள்ளனர். இந்த உயிர்காப்பு படையணி பல உயிர்களைப் பாதுகாத்துள்ளது.

**பலவீனங்கள்**

1. கடற்கரைப் பரப்பு மாசடைந்திருத்தல்

வெலிகம கடற் பரப்பில் காணப்படும் ஆழமற்ற கடல் பிரதேசம் சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் மீன்பிடி கைத்தொழிலுக்கும் சம நிகரான முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் 2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொகைமதிப்பு அறிக்கையின்படி நகரசபையின் ஆளுகை பிரதேசத்தில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் ¼ பகுதியினர் மீன்பிடி மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்கள் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கரையோரப் பிரதேசத்தில் காணப்படும் நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தாத காரணத்தினால் கடற்கரையில் ஆங்காங்கே கழிவுகளை வெளியேற்றுவதற்கும், ஒழுங்கற்ற விதத்தில் மீன்பிடி படகுகளையும் வள்ளங்களையும் நிறுத்தி வைப்பதற்கும் தூண்டப்பட்டுள்ளன. வெலிகம கடற்கரையில் ஆங்காங்கே மீன்பிடி படகுகளும் வள்ளங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை நீழற் பட இலக்கம் 16இல் காட்டப்பட்டுள்ளது

**நிறழ்படம் 16: வெலிகம கடற்கரைப் பரப்பு**






மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

**2. அலைச்சறுக்கு விளையாட்டுக்குத் தேவையான வசதிகளும் தகைமை பெற்ற பயிற்றுனர்களும் இன்மை**

வெலிகம பெலேள கடற்பரப்பு வளைவினை கொண்டதாக காணப்படுதல் அலைச்சறுக்கு விளையாட்டில் பயிற்சி பெறுவதற்கு சிறந்த அணுக்கத்தை தருகிறது. கள ஆய்வின் சுற்றுலா பருவகாலத்தில் சுமார் 150 உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அலைச் சறுக்கு விளையாட்டில் பயிற்சி பெறுவதற்காகவும், பொழுதுபோக்காக அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடுவதற்காகவும் இங்கு வருகின்றனர். நிழற்பட இலக்கம் 17இல் காட்டப்பட்டுள்ளவாறு மேற்படி சுற்றுலாப் பயணிகளுக்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட 33 கடைகள் உள்ளன. இந்த விளையாட்டை பயிற்றுவிப்பதற்காக முறையாக பயிற்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்கள் இல்லையென்பதுடன், முறையாக பயிற்சி பெறாத சுமார் 10 பேர் நாளாந்தம் அலைச்சறுக்கு விளையாட்டை பயிற்றுவிக்கின்றனர். இவ்வாறு பயிற்சியளிப்பவர்களிடம் அதுபற்றி வினவியபோது

முறையாக பயிற்சிபெற வேண்டுமாயின் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டுமெனவும், அதற்கான செலவினை தங்களால் ஏற்கமுடியாததாகும் தெரிவித்தனர்.

**நிழற்படம் 17: பெலேன கடற்கரைப் பரப்பு**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018


## 1. வாய்ப்புகள்

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் சுற்றுலா ஹோட்டல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஒக்டோபர் மாதம் தொடக்கம் மார்ச்சு மாதம் வரையான காலப்பகுதியில் சுற்றுலா ஹோட்டல்களில் காணப்படுகின்ற அறைகளில் 95 சதவீதமானவை பயன்பட்டுள்ளன. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா,

ரசியா போன்ற நாடுகளில் குளிர்காலம் ஆரம்பமானதைத் தொடர்ந்து அந்த நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இவ்வாறு வருகை தருவோரில் ஒரு பகுதியினர் வெலிகம நகரில் தங்குவதால் அறைகளின் பாவனை அதிகரித்துள்ளது. ஏப்பிறல் தொடக்கம் செப்டம்பர் வரையான காலப்பகுதியில் சுற்றுலா இரவுகள் 44 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன. இக்காலப் பகுதியில் சுற்றுலா பயணிகளின் வருகை குறைவாக இருப்பதே இதற்கு காரணம். வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் சுற்றுலா இரவுகளில் எண்ணிக்கையை கீழுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. 2010 தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சுற்றுலா பயணிகளின் வருகை வரைபு இலக்கம் 03இல் காட்டப்பட்டுள்ளது

**வரைபு இல 03: இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (2010-2017)**





மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை

## 2. எதிர்கால அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட அபிவிருத்தி திட்டம்


தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 09ஆம் இலக்க தேசிய பௌதீக திட்டவமைப்பின்படி வெலிகம நகரம் ஒரு நகர நிலையமாகவும், தேசப்பட இலக்கம் 10இல் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள 2017 - 2030 மூலோபாய சுற்றாடல் அபிவிருத்தி திட்டத்தினால் எதிர்கால சுற்றுலா இயல்தகவு கொண்ட பிரதேசமாகவும் இனங்காணப்பட்டுள்ளது.

**தேசப்பட இல 09: தேசிய பௌதீக கட்டமைப்புத் திட்டம் -2050**




மூலம்: தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் -2050

**தேசப்பட இல 10: தங்குமிட வசதிகளின் அமைவு -2017**




மூலம்: சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை -2017

### 3. இயற்கை ஈர்ப்பும் உயிர் பல்வகைமையும் கொண்ட இடங்கள்

வெலிகம நகர அபிவிருத்தி பிரதேசத்தை சார்ந்ததாகவும் சுற்றுலாக் கைத்தொழிலின் பயன்பாட்டுக்காகவும் பயன்படுத்தக்கூடிய இயற்கை ஈர்ப்பும், உயிர்ப் பல்வகைமையும் கொண்ட ரூமஸ்ஸல, மடோல் தூவ, பொராள வாவி மற்றும் கரண்டுவ கடனீரேரியை வெலிகம நகர அபிவிருத்திக்கான சாளரங்களாக இனங்காண முடியும். இவ்வாறான இடங்களை பார்வையிட வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளை வெலிகம நகரத்திற்கு ஈர்த்தெடுத்தல் அபிவிருத்தி திட்டத்தின் நோக்கமாகும். மேற்கண்ட இடங்கள் நிழற்பட இலக்கம் 18இல் காட்டப்பட்டுள்ளது.

**நிழற்பட இல 18: இயற்கை ஈர்ப்பும் உயிர் பல்வகைமையும் கொண்ட இடங்கள்**




**மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018**

### 4. மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்தினூடாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நீலத் திமிங்கலங்களைக் பார்த்து ரசிக்கும் வசதிகளை ஏற்படுத்தல்

வெலிகம நகரிலிருந்து 05 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மிரிஸ்ஸ பிரதேசத்தில் நீலத் திமிங்கிலங்களை அதிகமாக காண முடியும். இந்தப் பிரதேசம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடையே பிரசித்தி பெற்றுள்ளது. நவம்பர் மாதம் தொடக்கம் ஏப்பிறல் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கையின் தெற்கு கரையோரப் பரப்பில் திமிங்கிலங்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதுடன் இக்காலப்பகுதியில் நீலத் திமிங்கிலங்கள் சூடான தண்ணீரைத் தேடி நீரின் மேற்பரப்பை நோக்கி வருவதுண்டு. நாளொன்றில் 500இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நீலத் திமிங்கிலங்களைக் கண்டு ரசிப்பதற்காக மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்திற்கு வருகை தருகின்றனர். இது வெலிகம நகர அபிவிருத்தியின் ஓர் அம்சமாக காணப்படுகின்றது. மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்திலிருந்து நீல

திமிங்கலங்களை கண்டு ரசிப்பதற்காக சென்ற சுற்றுலா பயணிகளின் நிழற்படங்கள் 19ஆம் இலக்க நிழற் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

**நிழற்பட இல 19: நீலத் திமிங்கிலத்தை கண்டு ரசித்தல்**



மூலம்: : https://nashaplaneta.net/en/asia/srilanka/weligama

**அச்சுறுத்தல்கள்**

1. **சுற்றுலா ஈர்ப்புகொண்ட ஏனை கடற்கரைப் பரப்புகள் வெலிகம நகருக்கு அருகாமையில் அமைந்துள்ளமை.**

வெலிகம நகரத்திலிருந்து 05 கிலோமீற்றர் தொலைவில் மிரிஸ்ஸ கடற்கரை அமைந்துள்ளதோடு, 23 கிலோமீற்றர் தொலைவில் உனவட்டுன கடற்கரை அமைந்துள்ளது. இது காலி நகரத்திற்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ள காரணத்தினால் காலி கோட்டை மற்றும் அதை அண்டியதாக காணப்படும் தொல்பொருளியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற இடங்களை பார்வையிட வாய்ப்பு கிடைக்கின்றது. உனவட்டுன கடற்கரை பரப்பில் மெல்லலைகள் காணப்படுகின்றமை நீராடுவதற்கும், நீர் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்குமான உகந்த இடமாக உள்ளது. எனவே, இந்த கரையோர வளையத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் 38 சதவீதமானோர் உனவட்டுன கடற்கரைக்குச் செய்வதாக

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அகன்ற கடற்கரை மற்றும் மெல்லலைகள் காணப்படும் மிரிஸ்ஸ கடற்கரையில் நீராடுவதற்கும் ஓய்வாக பொழுதைக் கழிப்பதற்கும் உகந்த சூழல் காணப்படுகின்றது. இங்கு காணப்படுகின்ற ஆரோக்கியமான சூழல் வெலிகம வலயத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 60 சதவீதமானோர் மிரிஸ்ஸ பிரதேசத்தை நோக்கிச் செல்லும் போக்கு காணப்படுவதாக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது.

உனவட்டுன கடற்கரைப் பரப்பினை மிரிஸ்ஸ கடற்கரை பரப்போடு ஒப்பிடும்போது வெலிகம குடாவை அண்டிய பிரதேசம் அலைச்சறுக்கு விளையாட்டுக்கு உகந்த களமாக உள்ள போதும், இப்பிரதேசம் மீன்பிடிக் கைத்தொழிலுக்குப் பயன்படுவதால் சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பௌதீக மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகள் ஏற்பட காரணமாகின்றது. வெலிகம நகரத்துக்கு அருகாமையில் உள்ள கடற்கரை பரப்பு நிழற்பட இலக்கம் 10இல் காட்டப்பட்டுள்ளது.

**நிழற்பட இல 20: வெலிகம நகரத்தை அண்டிய கடற்கரை பரப்பு**




மூலம் : **https://nashaplaneta.net/en/asia/srilanka/weligama**

**நோக்கம் 02: நகரத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் மீன்பிடிக் கைத்தொழில**

| | | | |
|---|---|---|---|
| **பலம்**<br>1. பிரதேசத்தில் வாழும் மக்களில் 28 (1650) சதவீதமானோர் மீன்பிடித் துறையை சார்ந்தவர்களாக இருத்தல் மற்றும் வெலிகம நகரம் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றிருத்தல்.<br>2. கப்பரதொட்டவில் மீன்பிடி இறங்கதுரை காணப்படுதல் மற்றும் கடற்கரை பிரதேசத்தில் 16 மீன் விற்பனை நிலையங்கள் காணப்படல்.<br>3. மிதித்தேறி நின்று மீன்பிடித்தல் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றிருத்தல் மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட மீன் உற்பத்திகளை சந்தைப்படுத்தல் | ப | ப | **பலவீனம்**<br>1. மீன்பிடி இறங்குதுறை காணப்பட்டபோதிலும் சகல படகுகளையும் அங்கு நிறுத்தி வைக்க முடியாமை.<br>2. ஆழ்கடலில் மீன் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நவீன தொழில்நுட்ப முறைகளை பின்பற்றுவதற்கான அறிவின்மை |
| **வாய்ப்புகள்**<br>1. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மிதித்தேறி நின்று மீன்பிடித்தல மற்றும் உடன் மீன் உற்பத்தியில் கூடுதலான விருப்பம் கொண்டிருத்தல்.<br>2. மிரிஸ்ஸ பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகம் காணப்படுதல். | வா | அ | **அச்சுறுத்தல்**<br>- . |

**பலம்**

1. **பிரதேச மக்களில் 28 சதவீதமானோர் (1650) மீன்பிடி கைத்தொழில் ஈடுபட்டுள்ளமை மற்றும் வெலிகம் நகரம் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றிருத்தல்.**


   வெலிகம நகர சபையின் ஆளுகை பிரதேசம் 2.5 கிலோமீற்றர் நீளமான கடற்கரையை கொண்டுள்ளதோடு அப்பகுதிவாழ் மக்களின் பிரதான வாழ்வாதாரமாக மீன்பிடிக் கைத்தொழில் காணப்படுகின்றது. மஹ வீதியை, குடாபொல பிரதேசத்தில் இரண்டு மீன்பிடித் துறைகள் காணப்படுவதோடு கப்பரதொட்ட பிரதேசத்தில் மீன்பிடி இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

   கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின்படி 2017ஆம் ஆண்டில் வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் 1440 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். இதில் 844 குடும்பங்கள் நேரடியாக மீன்பிடிக் கைத்தொழில் ஈடுபடுகின்றன. வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் உள்ள மொத்த குடும்பங்களில் சுமார் 29 சதவீதமான குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றன. அதன்படி பிரதேசத்தில்

வசிக்கும் மொத்த மீனவர்களின் எண்ணிக்கை 6423 ஆகும். நகரத்து மக்களில் 28 சதவீதமானோர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அதன் மூலம் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு கிடைக்கின்றது.

கடற்றொழில மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் மாத்தறை மாவட்ட காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த படகுகளின் எண்ணிக்கை 340 ஆகும். இதில் 69 பன்னாட் கலங்களும், 28 ஒருநாள் கலங்களும், 70 பைபர் கிளாஸ் படகுகளும், 35 துடுப்புப் படகுகளும் அடங்குகின்றன. இந்த படகுகளைப் பயன்படுத்தி 2017ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மொத்த மீன்கள் தொடர்பான விபரம் 04ஆம் இலக்க வரைபிலும், 21ஆம் இலக்க நிழற்படத்திலும் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு இல 04 : மீன் உற்பத்தி -2017**




**நிழற்பட இல 21 : மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம்**



மூலம்: மீன்பிடி, நீரியல்வளத் திணைக்களம், மாத்தறை மாவடடக் காரியாலயம் -2017

**2. கப்பரதொட்டவில் மீன்பிடி இறங்கதுரை காணப்படுதல் மற்றும் கடற்கரை பிரதேசத்தில் 16 மீன் விற்பனை நிலையங்கள் காணப்படல்**

கப்பரதொட்ட மீன்பிடி இறங்குதுறை தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதும் அது மீன்பிடி நடவடிக்கைகளில் பயன்படும் படகுகளில் ஒரு தொகுதியை மட்டும் நிறுத்தி வைப்பதற்காக பயன்படுகிறது. எவ்வாறாயினும், கரையோர பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் உடன்பாட்டுடன் நீர் தடுப்பு ஒன்றை நிர்மாணிப்பதன் மூலம் இப்பிரதேசத்திலுள்ள அனைத்து மீன்பிடி படகுகளையும் இங்கு நிறுத்தி வைக்க முடியும். நீல திமிங்கிலங்களை கண்டு ரசிப்பதற்காக பயன்படுத்தப்படும் படகுகளை நிறுத்தி வைத்தல் மற்றும் அதற்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கும் இந்த இறங்குதுறையை பயன்படுத்தலாம். கப்பரதொட்ட இறங்கு துறையின் தற்போதைய நிலை நிழற்பட இலக்கம் 22இல் காட்டப்பட்டுள்ளது

**நிழற்பட இல 22: கப்பரதொட்ட மீன்பிடி இறங்குதுறை**



மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை - 2018

வெலிகம கடற்கரையை அண்டியதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்ட 16 மீன் விற்பனை நிலையங்கள் காணப்படுவதோடு அவற்றை சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியும். இவை மீன் சந்தைப்படுத்தலுக்கு மேலதிகமாக முடிவு பொருள் விற்பனை, பின்னல் கட்டை விற்பனை, சமைத்த உணவு விற்பனைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இந்த விற்பனை நிலையங்களை சுற்றுலா மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியும். மீன் விற்பனை நிலையங்கள் நிழற்பட இலக்கம் 23 காட்டப்பட்டுள்ளன.

**நிழற்பட இல 23: வெலிகம கடற்கரை பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மீன்சந்தை**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2018

### 3. ‘‘மிதித்தேறி நின்று மீன்பிடித்தல்’’ கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றிருத்தல் மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட மீன் உற்பத்திகளை சந்தைப்படுத்தல்

வெலிகம பிரதேசம் ஆதிகாலத்திலிருந்து மிதித்தேறி நின்று மீன்பிடித்தல் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றுள்ளதால் அதனை சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தலாம். சுற்றுலாப் பயணிகளுக்கு மிதித்தேறி நின்று மீன் பிடித்தல் முறையின் மூலம் மீன் படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்துவதால் மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடிவதோடு சுற்றுலாப் பயணிகளுக்கு புது அனுபவமும் கிடைக்கின்றது.

தற்போது வெலிகம நகரத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மணித்தியாலமொன்றுக்கு ரூபா 200 ஐச் செலுத்தி மிதித்தேறி நின்று மீன்பிடித்தலில் ஈடுபடுவதை வெலிகம மற்றும் மிதிகம கடற்கரைப் பரப்பில் காணமுடியும். உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மிதித்தேறி நின்று மீன்பிடித்தலில் ஈடுபடும் காட்சி நிழற்பட இலக்கம் 24 இல் காட்டப்பட்டுள்ளது.

**நிழற்பட இல 24: மிதித்தேறி நின்று மீன் பிடித்தல்**





மூலம் : **https://lanka.com/about/interests/stilt-fishing/**

**பலவீனங்கள்**

1. **மீன்பிடி இறங்குதுறை காணப்பட்டபோதிலும் சகல படகுகளையும் அங்கு நிறுத்தி வைக்க முடியாமை**

   தற்போது கப்பரதொட்ட மீன்பிடி துறைமுகத்திற்குச் சொந்தமான பதிவுசெய்யப்பட்ட படகுகளின் எண்ணிக்கை 402. இதில் 05 பன்னாட் கலங்களும் 07 ஒரு நாள் கலங்களும் 60 பிளாஸ்டிக் படகு (வெளி இணை எஞ்சின்)களும் அடங்குகின்றன. வெலிகம கப்பரதொட்ட பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மீன்பிடி

இறங்குதுறை சார்ந்த பிரதேசத்தில் கடல் ஆழமென்பதால் மீன்பிடி படைகளுக்கு பாதுகாப்பு அளித்தல் பிரச்சனையாக உள்ளது. எனவே, மீன்பிடி படகுகளை அங்கு நிறுத்தி வைக்க முடியாது. மேலும், மீன்பிடி இறங்குதுறைக்கு அவசியமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள், குளிர் அறைகள், துப்புரவேற்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

**2. ஆழ்கடலில் மீன் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நவீன தொழில்நுட்ப முறைகளை பின்பற்றுவதற்கான அறிவின்மை**

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் மொத்த சனத்தொகையில் சுமார் 28 சதவீதமானோர் மீன்பிடித் துறையைச் சார்ந்துள்ளனர். இவர்களில் சிலர் முறையான கல்வி அறிவின்மை காரணமாக புதிய தொழில்நுட்ப வழி முறைகளைப் பின்பற்ற தயங்குகின்றனர்

**வாய்ப்புகள்**


**1. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மிதித்தேறி நின்று மீன்பிடித்தல மற்றும் உடன் மீன் உற்பத்தியில் கூடுதலான விருப்பம் கொண்டிருத்தல்**

வெலிகம பிரதேசத்தில் சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மிதித்தேறி நின்று மீன் பிடிப்பதில் மிகுந்த ஆர்வத்தை கொண்டுள்ளதால் அவர்களும் இந்த முறையில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களை அவர்கள் விதவிதமாக சமைத்து உண்பதற்கு விருப்பம் காட்டுகின்றனர்.

**2. மிரிஸ்ஸ பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைந்துள்ளமை**

வெலிகம நகரிலிருந்து 05 கிலோமீற்றர் தொலைவில் கிழக்குத் திசையில் அமைந்துள்ள மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம் வெலிகம நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்கள் பன்னாட் கலங்களை தொழிற்படுத்த பயன்படுகிறது. நிழற்பட இலக்கம் 25இல் காட்டப்பட்டுள்ள மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் 518 படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, இதில் 184 பன்னாட் கலங்களும், 15 ஒரு நாள் கலங்களும் 165 பைபர் படகு (வெளி இணை எஞ்சின்)களும் அடங்குகின்றன. 05ஆம் இலக்க வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு மீன் அறுவடையை ஆராயும்போது மாத்தறை மாவட்டத்தில் ஏனைய மீன்பிடித் துறைமுகங்களுடன் ஒப்பீட்டு ரீதியாக மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தின் மீன் அறுவடை காட்டப்பட்டுள்ளது

**வரைபு இல 05: வெலிகம நகரத்தை அண்டிய பிரதேசங்களில் மீன் விற்பனை**




மூலம் : மீன்பிடிக் கூட்டுத்தாபனம் - 2017

**நிழற்பட இல 25: மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகம்**



மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை - 2018

**நோக்கம் 03 : ரம்மியமான சூழலுடன் கூடிய எளிமையான நகரம**

| | | | |
|---|---|---|---|
| **பலம்**<br>1. நகரத்தின் இயற்கையான அமைவு<br>2. இலகுவில் செல்ல முடிதல்<br>3. பொல்அத்துமோதர கங்கை, இயற்கையான கால்வாய்கள் மற்றும் கப்பரதொட்ட கடனீரேரி அமைந்துள்ள காரணத்தினால் வெள்ளப்பெருக்கு கட்டுப்படுத்தப்படுகின்றது. | ப | ப | **பலவீனம்**<br>1. உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக அபிவிருத்தி செய்யப்படாமை.<br>2. பொருத்தமற்ற இடத்தில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் காணப்படல்.<br>3. கழிவு நீரும் சாக்கடைக் கழிவுகளும் மழை நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகால்களுக்கு வெளியேற்றப்படல் |
| **வாய்ப்புகள்**<br>1. வெலிகம நகரத்தை அண்டியதாக 03 கைத்தொழில் வலயங்கள் காணப்படுகின்றமை.<br>2. காலி நிர்வாக நகரமும் மாத்தறை வர்த்தக நகரமும் அருகாமையில் அமைந்துள்ளமை.. | வா | அ | **அச்சுறுத்தல்**<br>-. |

**பலம்**

1. **நகரத்தின் இயற்கையான அமைவு**

வெலிகம நகரம் தென்னிலங்கையின் பிரதான வர்த்தக நிலையமான மாத்தறை நகரிலிருந்து 18 கிலோமீற்றர் தொலைவிலும், பிரதான நிர்வாக நிலையமான காலி நகரிலிருந்து 28 கிலோ மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளதால் வர்த்தக நடவடிக்கைகள், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இலகுவாக உள்ளது. மேலும், மழைநீர் வழிந்தோடுவதற்காக இயற்கையாகவே அமையப் பெற்றுள்ள வடிகால் முறைமை வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து கிராமத்தவர்களை பாதுகாக்கின்றது. செங்குத்துப் பாறைகள், முனைகள் மற்றும் அகன்ற கடற்கரை பரப்பினைக் கொண்டுள்ள வெலிகம குடா மீன்பிடி மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்கு உதவுகின்றது.

**2. இலகுவில் செய்ய முடிதல்**

தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் கடற்கரையை எல்லையாகக் கொண்டு அமைந்துள்ள வெலிகம நகரம் கரையோர பெருந்தெரு, புகையிரத வீதி மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கொழும்பு தலைநகருடன் தொடர்பை ஏற்படுத்துவதோடு, கொக்மாதுவ இடைமாற்று நிலையத்திலிருந்து சுமார் 06 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. கரையோர பெருந்தெருவின் ஊடாக கொழும்பு - அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டத்துடனும், வெலிகம அக்குரெஸ்ஸ வீதி ஊடாக தெனியாய மற்றும் இரத்தினபுரி வரை நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள நகரங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துகின்றது. அதன்படி அக்குரெஸ்ஸ - வெலிகம, இமதூவ - வெலிகம, கொழும்பு - மாத்தறை பிரதான வீதி மற்றும் புகையிரத வீதி ஊடாக வெலிகம நகரத்தைச் சென்றடையக் கூடிய விதம் தேசப்பட இலக்கம் 11இல் காட்டப்பட்டுள்ளது.

**3. பொல்அத்துமோதர கங்கை, இயற்கையான கால்வாய்கள் மற்றும் கப்பரதொட்ட கடனீரேரி அமைந்துள்ள காரணத்தினால் வெள்ளப்பெருக்கு கட்டுப்படுத்தப்படுகின்றது.**

வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் பொல்அத்துமோதர கங்கை அமைந்துள்ளதோடு முழு நகரப் பிரதேசமும் உள்ளடக்கப்படும் வகையில் யான் ஓயா கால்வாய், அக்ரபோதி கால்வாய், பொல்கந்தான் கால்வாய் மற்றும் ருக்குலே கால்வாய் என்பன அமைந்துள்ளன. கப்பரதொட்ட கடனீரேரி காலி வீதிக்கு எல்லையாக அமைந்துள்ளது. வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசம் ஒரு கடல்மட்ட பிரதேசமாக இருந்தபோதிலும் காணப்படுகின்ற வடிகால் முறையையும் கடனீரேரியும் நகரத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துகின்றது. கப்பரதொட்ட கடனீரேரி, பொல்அத்துமோதர கங்கை மற்றும் வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தை சந்திக்கும் பிரதேசங்கள் தேசப்பட இலக்கம் 12இல் காட்டப்பட்டுள்ளன.

## தேசப்பட இல 11 : தற்போது காணப்படுகின்ற வீதிக் கட்டமைப்பு




**தொடர்பு**

- ஏ தர வீதிகள்
- சீ மற்றும் டி தர வீதிகள்
- வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்
- பி தர வீதிகள்
- புகையிரத வீதி

N W E S

1:16,000

**தற்போது காணப்படுகின்ற வீதிக் கட்டமைப்பு - வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் -2018**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 11**

| | |
|---|---|
| தயாரித்தல் | - 2018 டிசம்பர் 10 |
| இற்றைப்படுத்தல் | - 2019 |
| மூலம் | - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம் |
| தயாரித்தது | - ஜே. ஓ. பி. ஜீவந்தர |

நகர
அபிவிருத்தி
அதிகார
சபை

## தேசப்பட இல 12: வெள்ள அனர்த்தத்தைச் சந்திக்கும் பிரதேசங்கள




**தொடர்பு**

- வெள்ளப் பெருக்கு ஏற்படும் பிரதேசங்கள்
- ஏ தர வீதிகள்
- பி தர வீதிகள்
- புகையிரத வீதி
- வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம்

1:16,000

**வெள்ளப் பெருக்கு ஏற்படும் பிரதேசங்கள் - வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் -2018**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

தேசப்பட இல: 12

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர அபிவிருத்தி அதிகார சபை

**பலவீனம்**

**1. உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக அபிவிருத்தி செய்யப்படாமை**

- **வடிகால்களில் நீர் வழிந்தோடாமை**

வெலிகம நகரத்தின் மத்திய பகுதி கடல் மட்டத்தில் அமைந்துள்ள ஓரளவுக்கு சாய்வான பிரதேசமாகும். இங்கு மழைநீர் வழிந்தோடுவதற்கு வடிகால்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதும் நிர்மாணங்களில் காணப்படும் கோளாறுகள் காரணமாக உரிய முறையில் நீர் வழிந்தோடுவதில்லை. வடிகால்களில் நீண்ட நாட்களாக நீர் தேங்கிக் கிடைப்பதானது நோய்கள் பரவுவதற்கும் நகர மையப்பகுதியின் வளி மாசடைவதற்கு பிரதான காரணியாக மாறியுள்ளது. வெலிகம நகர சபையின் ஆளுகை பிரதேசத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் 40 சதவீதமும், சனத்தொகையில் 31 சதவீதமும், குடியிருப்புக்களின் எண்ணிக்கையில் 31 சதவீதமும் நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளன. வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் கடல் மட்டத்தில் அமைந்திருப்பதை 26ஆம் இலக்க நிழற்படம் காட்டுகிறது.

**நிழற்பட இலக்கம் 26: நீர் வழிந்தோடாமை**






மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

- வீதிகளின் ஒடுக்கம் மற்றும் பாதையின் இருமருங்கிலும் வாகனங்கள் நிறுத்தப்படல்

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள விதிகள் உரிய தரத்தில் தீர்மானிக்கப்படவில்லை. ஆகவே, வாகனங்கள் வேகமாக பயணிப்பதாலும் பிரதான வீதிகளில் பாதசாரி கடவைகள் இல்லாததாலும் பயணிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அடைகின்றது. பிரதான வீதியின் இரு மருங்கிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக கட்டடங்கள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடவசதி கொண்டதாக நிர்மாணிக்கப்பட வில்லை. வர்த்தக நிலையங்களுக்கு வருகின்ற பாவனையாளர்கள் பிரதான வீதியின் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்துவதால் வாகன போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வேலை பளுவான நேரங்களில் பிரதான வீதிகளான பொராள வீதி, அக்குரெஸ்ஸ வீதி, ஹெட்டி வீதி தெரு மற்றும் பழைய காலி வீதி போன்றவற்றில் ஏற்படுகின்ற வாகன நெரிசல் நிழற்பட இலக்கம் 27இல் காட்டப்பட்டுள்ளது. .

**நிழற்பட இலக்கம் 27: வாகன நெரிசல்**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

**2. பொருத்தமற்ற இடத்தில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் காணப்படல்**

வெலிகம கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய உயிர் பல்வகைமை கொண்ட பிரதேசம் நீரை இயல்பாகவே முகாமைத்துவம் செய்து உபரி நீரை கடலுக்கு விடுவிப்பதில் துணை புரிகின்ற இயற்கையான ஒரு சூழலை கொண்டுள்ளது. எவ்வாறாயினும், வெலிகம நகர சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டம் இந்த கடனீரேரியை அண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ளதால் கப்பரதொட்ட கடனீரேரியும் அதையகண்டிய நீர் நிலைகளும் மாசடைந்துள்ளதோடு சூழல் மாசடைவதற்கு முக்கிய காரணியாக உள்ளது. இதற்கு மேலதிகமாக, இப்பிரதேசம் முழுவதையும் துர்நாற்றம் ஆக்கிரமித்துள்ளதோடு, குப்பைக் கூளங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் கழிவுகள் அலைச்சறுக்கு விளையாட்டுக்காக பயன்படும் கடற்கரை பிரதேசத்தில் கொட்டப்படுகின்றன. இந்நிலை சுற்றுலாக் கைத்தொழிலை தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் சிக்கலாக அமைந்துள்ளது. கப்பரதொட்ட பிரதேசத்தில் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் அமைந்துள்ள வளாகம் தேசப்பட இலக்கம் 13இல் காட்டப்பட்டுள்ளது

தசப்பட இல 13: கப்பரதொட்ட திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம்




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

**3. கழிவு நீரும் சாக்கடைக் கழிவுகளும் மழை நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகால்களுக்கு வெளியேற்றப்படல்**

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் சேரும் மழைநீர் வழிந்தோடுவதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகால் முறைமையில் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் மற்றும் சாக்கடை கழிவுகள் விடுவிக்கப்படுவதாக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது நகரத்தில் இனங்காணப்பட்ட மிகவும் முக்கியமான ஒரு குறைபாடாகும். குட்செட் கால்வாயில் கழிவுநீர் தேங்கிக் கிடப்பதை கீழுள்ள 28ஆம் இலக்க நிழற்படத்தில் காணலாம்.

**நிழற்பட இல 28: யான்லூயா கால்வாய்**



**மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018**

**வாய்ப்புகள்**

**1. வெலிகம நகரத்தை அண்டியதாக 03 கைத்தொழில் வலயங்கள் காணப்படுகின்றமை**

வெலிகம நகரத்தை அண்டியதாக அமைந்துள்ள உடுக்காவ, சாலிமவுன்ட் மற்றும் மிதிகம பிரதேசத்தில் மூன்று கைத்தொழில் பேட்டைகள் அமைந்துள்ளதன் காரணமாக வெலிகம நகரத்தில் கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கான இட வசதிகளை ஒதுக்க வேண்டிய அவசியம் எழாது. கைத்தொழிற் சாலைகளின் அளவு மற்றும் வகைக்கு அமைய மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் அதற்கான இடவசதியை பெற்றுக்கொள்ளலாம். குறித்த கைத்தொழில் பேட்டைகளின் அமைவு 14ஆம் இலக்க தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

.

**தேசப்பட இல 14: கைத்தொழில் பேட்டைகளின் அமைவு**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

# 6.0 அபிவிருத்தி திட்டம்

## 6.1 எண்ணக்கருசார் திட்டவமைப்பு

வெலிகம நகரத்திற்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதன் அடிப்படை நோக்கமாகவிருக்கும் 'வெலிகம நகரத்தை தென் பிராந்தியத்தில் சுற்றுலாவின் சொர்க்கபுரியாக அபிவிருத்தி' செய்வதற்கு தற்போது நடைமுறையிலுள்ள அபிவிருத்தியை ஒழுங்குமுறைப்படுத்த நகரத்தின் மையப்பகுதி, கரையோர வலயம் மற்றும் கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய பிரதேசம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி எண்ணக்கருசார் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அபிவிருத்தி மூலோபாயங்களை பின்பற்றி அதனூடாக அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எண்ணக்கருசார் திட்டம் வெலிகம நகரத்தின் எதிர்கால அபிவிருத்தியை எடுத்துக்காட்டுகிறது. வெலிகம நகரத்தில் ஒழுங்கற்று காணப்படும் சுற்றுலா, மீன்பிடி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட அபிவிருத்தியை நோக்கி நகர்த்தும் நோக்கத்துடன் இந்த எண்ணக்கருசார் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வெலிகம குடாவை அண்டியதாக அமையப்பெற்றுள்ள வெலிகம நகரம் கொழும்பு - மாத்தறை பிரதான வீதி, பழைய காலி வீதி மற்றும் ஹெட்டி வீதியூடாக வியாபித்துள்ளதோடு, வெலிகம - இமதூவ மற்றும் வெலிகம - அக்குரெஸ்ஸ வீதியூடாக நாட்டின் மத்திய பிரதேசத்துடன் நேரடியான தொடர்பினை ஏற்படுத்துகின்றது. வெலிகம - அக்குரெஸ்ஸ வீதி ஹெட்டி வீதியைச் சந்திக்கும் புள்ளியையும், ஹெட்டி வீதி மற்றும் பழைய காலி வீதி சந்திக்கும் புள்ளியையும் அடிப்படையாகக் கொண்டு நகரத்தின் மையப்பகுதி அமைந்துள்ளது. அதன்படி இந்த வலயத்தினுள் வர்த்தக சேவை நிலையங்களை அமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது.

இந்த எண்ணக்கருசார் திட்டத்திற்கான உருவக (Metaphor)மாக வானவில்லை ஒத்த வடிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, வெலிகம குடா, கால்வாய்கள் மற்றும் வீதிக் கட்டமைப்பின் அமைவு திட்டவமைப்பின் பிரதான அம்சமாக இனங்காணப்பட்டுள்ளது. நீர் மற்றும் பகலவனின் ஒளிக்கீற்றுக்களின் கலவையால் வானவில் தோன்றுவதைப் போல வெலிகம குடாவை அண்டிய திட்டவமைப்பு பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. வானவில் பல நிறங்களில் தோன்றுவதைப் போல தற்போதுள்ள அபிவிருத்தி பாங்கு, வீதிக் கட்டமைப்பு மற்றும் கால்வாய்த் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு பல பரிமாணங்களில் எதிர்கால அபிவிருத்தியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இத்திட்டத்தின் உள்ளடக்கப்படும் வெலிகம குடா மற்றும் பொல்அத்துமோதர கங்கையை அண்டிய பிரதேசத்தை சுற்றுலா நடவடிக்கை மேம்பாட்டுக்காகவும், வெலிகம

குடாவை அண்டிய பிரதேசத்தையும் கப்பரதொட்ட பிரதேசத்தையும் மீன்பிடிக் கைத்தொழில் மேம்பாட்டுக்காகவும், கும்பல்கம மற்றும் பட்டவலச் சந்தியை வர்த்தக நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி செய்வதற்கும் வதிவிட, சுற்றுலா மற்றும் வர்த்தக வலயங்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதுள்ள வீதிக் கட்டமைப்பை மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சிரமமின்றி சம்பந்தப்பட்ட இடங்களை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வெலிகம நகரத்தின் பிரதான மூலவளமாக காணப்படும் வெலிகம குடாவுடன் கூடியதான 2.5 கிலோமீற்றர் நீளமான அகன்ற கடற்கரையையும் ஆழமற்ற கடல் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு வெலிகம நகரத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள கடற்கரை பரப்புகளில் அலைச்சறுக்கு விளையாட்டுக்கு உகந்த கடற்கரையை பரப்பாகக் காணப்படும் வெலிகம கடற்கரை பரப்பு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது. மேலும், சுற்றுலா கைத்தொழிலுக்கு இணையாக ஆளுகைப் பிரதேசத்திற்கு வருகைதரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியளிப்பதற்காக நட்சத்திர ஹோட்டல்கள், தங்குமிடங்கள், வாடிவீடுகள் மற்றும் உணவகங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. வெலிகம நகர் பிரதேசத்தில் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுகின்ற மொத்த அறைகளின் எண்ணிக்கையில் 68 சதவீதமானவற்றை ஹோட்டல்கள் கொண்டிருப்பதுடன், அதனால் 623 பேருக்கு நேரடியாக தொழில் கிடைத்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்படுகின்ற படிமுறையான வளர்ச்சியும், எதிர்கால அபிவிருத்தியை இலக்காக கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் களத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களின் அடிப்படையில் வெலிகம நகரத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.


அதன்படி, 2030ஆம் ஆண்டளவில் வெலிகம நகரத்தை **“தென்னிலங்கையில் மலரும் சுற்றுலாவின் சொர்க்கபுரி”** என்ற நோக்கின் கீழ் சுற்றுலா ஈர்ப்பு கொண்ட நகரமாக அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதையும், மீன்பிடிக் கைத்தொழிலை விருத்தி செய்வதையும், இனங்காணப்பட்ட சுற்றாடல் ரீதியான கூருணர்வு பிரதேசங்களின் இயற்கை வனப்பை பாதுகாத்தவாறு சுற்றுலா நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் சுற்றுலாத் துறை சார்ந்ததாக நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை உருவாக்க வாய்ப்பளிப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாக் கைத்தொழில் அத்துடன் வெலிகம நகரத்தின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் பிரதான துறையாக மீன்பிடிக் கைத்தொழில் இனங்காணப்பட்டுள்ளது. மீன் உற்பத்தி சார்ந்த சந்தைப்படுத்தலை நகரம் பூராகவும் விஸ்தரிப்பதற்கு வசதிகளை வழங்குவதன் மூலம் மீன்பிடிக் கைத்தொழிலின் பாரிய

இலக்குகளை அடைந்து கொள்ள முடியும். அதன்படி, மீன் உற்பத்தியின் அளவினையும் தரத்தினையும் அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும், நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதலும் இந்த எண்ணக்கருசார் திட்டத்தை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

வெலிகம நகரத்தின் மூலவளங்கள் மற்றும் அபிவிருத்தியை கவனத்தில் கொண்டு கடற்கரை பரப்பிலிருந்து பழைய காலி வீதி வரையான பகுதி மற்றும் பொல்அத்துமோதர கங்கையை அண்டிய பிரதேசத்தை சுற்றுலா நடவடிக்கைகளுக்காகவும், பழைய காலி வீதியிலிருந்து ஹெட்டி வீதி வரையான பிரதேசத்தை வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும், ஹெட்டி வீதியிலிருந்து பண்டாரநாயக்க மாவத்தை வரையான பகுதியை கலப்பு வதிவிட தேவைகளுக்காகவும், எஞ்சிய பிரதேசத்தை வதிவிட தேவைகளுக்காகவும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட எண்ணக்கருசார் திட்டவமைப்பு தேசப்பட இலக்கம் 15இல் காட்டப்பட்டுள்ளது.

தேசப்படம் இல 15: எண்ணக்கருசார் திட்டம்




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை

## 6.2 உத்தேச காணிப் பயன்பாட்டுத் திட்டம்

வெலிகம நகர அபிவிருத்தி திட்டத்தின் நோக்கான 'வெலிகம நகரத்தை சுற்றுலாவின் சொர்க்கபுரி'யாக அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச காணிப் பயன்பாட்டு திட்டம் 16ஆம் இலக்க தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. திட்டவமைப்பு குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் வெலிகம நகரத்தை மாத்தறை, காலி மற்றும் ஏனைய நகரங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது குறைந்த அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பினும் அபிவிருத்தி செய்வதற்காக அதிகமான மூலவளங்களைக் கொண்ட நகரமாக இனங்காணப்பட்டுள்ளது. அதன்படி பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு தற்போதுள்ள நிலப்பரப்பை உச்ச அளவில் பயன்படுத்தி நகரத்துவாழ் மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், நகரை நோக்கி வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் உத்தேச காணிப் பயன்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.


வெலிகம நகரம் வெலிகம குடாவை அண்டியதாக அமைந்துள்ளதால் அப்பிரதேசம் சுற்றுலா நடவடிக்கைகளுக்கான முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளதோடு, தங்குதடையின்றி காற்று வீசுவதற்காகவும், பார்வைப் புலத்திற்கு இடையூறு ஏற்படாத வகையிலும் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான திட்டவமைப்புகளும் கட்டட ஒழுங்குவிதிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தை பிரதானமாக சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அதற்கு இணையாக கரையோரப் பூங்கா அபிவிருத்திக் கருத்திட்டம், வீதிகளை அகலப்படுத்துதல் மற்றும் சுற்றாடல் ரீதியான சுற்றுலா கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் இனங்காணப்பட்டுள்ளது.

நகரத்தின் மையப்பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகள் ஒருங்குசேர்ந்திருப்பதால் அப்பகுதியில் மிகவும் உயரமான கட்டடங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தை கூடுதலாக வர்த்தக அபிவிருத்தி திட்டத்திற்காக பயன்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகரத்தின் மையப் பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள கொழும்பு – மாத்தறை புகையிரத வீதிக்கு வடக்காக உள்ள பிரதேசம் தற்போது நகரத்திற்கு உரிய இயல்புகளைக் கொண்டிருப்பதாலும், கிராமிய இயல்புகளுடன் ஒன்றித்து அபிவிருத்தி அடைந்து வருவதாலும் அப்பகுதியில் மிகவும் உயரமான கட்டடங்களை அமைப்பதற்கு அனுமதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பிரதேசத்தை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு துரித கதியில் உரிய இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதோடு, வீதிகள் மற்றும் போக்குவரத்து திட்டத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளவாறு இனங்காணப்பட்டுள்ள வீதிகளை நிழல் தரும் மரங்களுடன் கூடியதாக இரண்டு ஒழுங்கைகள் கொண்ட 20.0 மீற்றர் அகலத்துடன் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் வெலிகம நகரத்துக்கான பிராந்தியமயமாக்கல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கரையோர வலயத்தை குறைந்த அடர்த்தியுடனும், கரையோர வலயம் மற்றும் பழைய காலி வீதிக்கு இடைப்பட்ட பகுதியை நடுத்தர அடர்த்தியுடனும், நகரத்தின் மையப்பகுதியை அதிக அடர்த்தியுடனும், நகரத்தின் மையப்பகுதிக்கு வடக்காக உள்ள பிரதேசத்தை நிலைக்குத்து அபிவிருத்திக்குப் பதிலாக செங்குத்து அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லவதன் அடிப்படையிலும் உத்தேச காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்கால அபிவிருத்தியை வெளிப்படுத்தும் நெடுக்கு வெட்டு மற்றும் குறுக்கு வெட்டு இடங்கள் குறிப்பீடு செய்யப்பட்ட திட்டவமைப்பு 16ஆம் இலக்க தேசப்படத்தில் கட்டப்பட்டுள்ளது. அதன்படி, வெலிகம நகரத்தின் எதிர்கால அபிவிருத்தி கடற்கரை பரப்பிலிருந்து பொல்அத்துமோதர கங்கை வரையான பிரதேசம் உருவக் குறிப்பு இலக்கம் 02இல் அ – ஆ குறுக்குவெட்டு மூலமும், கரையோர வலயத்தில் அமைந்துள்ள கப்பரதொட்ட தொடக்கம் பெலேன வரை காலி - மாத்தறை பிரதான பீதியை நோக்கியதாக உருவகுறிப்பு இலக்கம் 03இல் இ - ஈ நெடுக்கு வெட்டு மூலமும் காட்டப்பட்டுள்ளது. நகரத்தின் எதிர்கால அபிவிருத்தியை வெளிப்படுத்தும் எண்ணக்கருசார் திட்டவமைப்பு உருவக்குறிப்பு இலக்கம் 04இல் காட்டப்பட்டுள்ளது.

## தேசப்பட இல 16: உத்தேச நிலப் பயன்பாட்டுத் கோலம்




**தொடர்பு**

- வர்த்தக
- கலப்பு வதிவிட
- வதிவிட
- அடர்த்தி கூடிய சுற்றுலா
- நடுத்தர சுற்றாடல் அடர்த்தி
- இயற்கையான ஈரநிலப் பாதுகாப்பு
- பொல்அத்துமோதர கங்கை
- வர்த்தக அபிவிருத்தி
- போக்குவரத்து
- கடற்கரைப் பூங்கா
- சூழல்நேய சுற்றுலா
- திறந்த வெளி
- மிதித்தேறி நின்று மீன்பிடித்தல்
- இயற்கை நீச்சல் தடாகம்
- சாக்கடை மீள்சுழற்சி

N
W E
S

1:16,000

### உத்தேச நிலப் பயன்பாட்டுக் கோலம் - வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம்- 2030

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)


நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 16**

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர
அபிவிருத்தி
அதிகார
சபை

**உருவக்குறிப்பு 02: கடற்கரைப் பரப்பிலிருந்து பொல்அத்துமோதர கங்கை வரையான பிரதேசம் - குறுக்குவெட்டு அ - ஆ**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

**உருவக்குறிப்பு 03: கப்பரதொட்ட தொடக்கம் பெலேன வரையான பிரதேசம் - நெடுக்கு வெட்டு இ - ஈ**



மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

உருவக் குறிப்ப 04: எண்ணக்கருசார் திட்டவமைப்பு



மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை -2018

## 6.3 பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டவமைப்பு

### 6.3.1 உத்தேச சேவைத் திட்டம்

2030ஆம் ஆண்டளவில் நகரத்தில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகைக்கு அவசியமான குடியிருப்புக்கள், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய சேவைகளுக்கான திட்டமிடல்கள் குறித்த சேவை திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படும்.

வெலிகம பிரதேச செயலாளர் பிரிவு 44 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு, வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தின் பரப்பளவு 5.33 சதுர கிலோமீற்றர். 2030ஆம் ஆண்டளவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சனத்தொகை அட்டவணை இலக்கம் 05இல் காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை இல 05: மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சனத்தொகை - 2030**

| ஆண்டு | சனத்தொகை | வளர்ச்சி வீதம் (%) |
|---|---|---|
| **2011** | 22149 | 0.2 |
| **2016** | 23228 | 0.98 |
| **2020** | 24156 | 0.98 |
| **2025** | 25364 | 0.98 |
| **2030** | 26643 | 0.98 |

**மூவம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை – 2017**

மேலுள்ள அட்டவணையின்படி வெலிகம நகர் பிரதேசத்தில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை வளர்ச்சி வேகத்தின் வித்தியாகம் 2011 – 2030 இடைப்பட்ட காலத்தில் 4494 பேர்.

**அட்டவணை இல 06 : மதிப்பீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்புக்களின் தேவை -2030**

| ஆண்டு | சனத்தொகை | குடும்ப எண்ணி | குடியிருப்பு எண்ணி | குடியிருப்பு தேவைப்பாடு | குடியிருப் பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|
| 2011 | 22,149 | 4713 | 4,696 | 4,713 | 17 |
| 2016 | 23,228 | 4,760 | | 4,760 | 99 |
| 2020 | 24,156 | 4,809 | | 4,809 | 113 |
| 2025 | 25,369 | 4,860 | | 4,860 | 164 |
| 2030 | 26,643 | 4,903 | | 4,903 | 207 |


குறிப்பு –

- குடும்பமொன்றில் சாதாரண சராசரி ஆண்டு ரீதியாக 4.7ஆக இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.
- 2011ஆம் ஆண்டில் காணப்பட்ட 35 தற்காலிக குடியிருப்புகளும் குடியிருப்பு பற்றாக்குறையில் சேர்க்கப்பட்டுள்ளன.
- 2011ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட பகுதியளவில் நிரந்தரமான 219 குடியிருப்புகளை அதே இடத்தில் தரம் உயர்த்துதல் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

***மூலம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை***

மேலுள்ள அட்டவணையின்படி வெலிகம நகர பிரதேசத்தில் குடியிருப்புகளுக்கான பற்றாக்குறை 2011 - 2030 இடைப்பட்ட காலத்தில் வித்தியாசம் 207 ஆகும். பொம்பேவத்த மற்றும் ஜோத்தி கொறட்டுவ போன்ற குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்த பற்றாக்குறையை நீக்க திட்டமிடப்பட்டுள்ளது. உத்தேச குடியிருப்பு அடர்த்தி தேசப்பட இலக்கம் 17 இல் காட்டப்பட்டுள்ளது.

## தேசப்பட இல 17: எதிர்பார்க்கப்படும் குடியிருப்பு அடர்த்தி




**தொடர்பு**

எதிர்பார்க்கப்படும் குடியிருப்பு அடர்த்தி ( சனத்தொகை 1 ஹெக்ரயர்)

மொத்த குடியிருப்புகள் / பரப்பளவு

3 < | 3 - 5 | 5 - 8 | 8 - 11 | 11 - 12 | 12 - 15 | 15 -18

N W E S

1:16,000

**எதிர்பார்க்கப்படும் குடியிருப்பு அடர்த்தி - வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - 2030**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

தேசப்பட இல: 17

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர அபிவிருத்தி அதிகார சபை

### 6.3.2 சுகாதார வசதிகள் திட்டம்

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வெலிகம மாவட்ட வைத்தியசாலை, பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் என்பன பொது மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றன. நகரத்தில் இரண்டு பிரிவுகளின் கீழ் சுகாதார சேவைகள் அளிக்கப்படுகின்றன. அவையாவன, தடுப்பு பிரிவு மற்றும் சிகிச்சை பிரிவு. நோய்த்தடுப்பு சேவைகள் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன.

வெலிகம நகரத்திற்கும் சுற்றயல் பிரதேசங்களுக்கும் சுகாதார சேவைகளை வழங்கிவரும் வெலிகம மாவட்ட வைத்தியசாலை நகரத்திலிருந்து சுமார் 02 கிலோமீற்றர் தொலைவில் வலான கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளது. இந்த வைத்தியசாலையில் 05 வாட்டுக்கள், 94 கட்டில்கள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவும் காணப்படுகின்றது. 2016ஆம் ஆண்டில் 10500 நோயாளர்கள் நோய் தடுப்புக்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, 103842 நோயாளர்கள் கிளினிக்குகளுக்காக வருகை தந்துள்ளனர். நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் கிளினிக்கு நடவடிக்கைகளுக்கும் 06 வைத்தியர்கள் மட்டுமே உள்ளனர். மேலும், வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை கூட வசதிகள் இல்லையென்பதுடன் ஈ.சீ.ஜி மற்றும் எக்ஸ் கதிர் பரிசோதனைகளுக்கு அவசியமான வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. வெலிகம நகரத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் போது பிரதேச மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் அவசியமான வசதிகளை ஏற்படுத்த இந்த வைத்தியசாலையை தரமுயர்த்த வேண்டிய போதிலும், அதற்குப் போதுமான இடவசதி இல்லை. இந்த வைத்தியசாலை ஒடுங்கிய பாதையை கொண்டுள்ள மலைப்பாங்கான பிரதேசத்தில் அமைந்துள்ளதால் போக்குவரத்து சிக்கல்களும் காணப்படுகின்றன. சிரமமின்றி பயணிக்கக்கூடிய வெலிகம நகரத்திலிருந்து 08 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கொரிய நட்புறவு வைத்தியசாலை ஊடாக தேவையான சுகாதார வசதிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

### 6.3.3 கல்விச் சேவைத் திட்டம்

2011ஆம் ஆண்டின் குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு அறிக்கையின்படி வெலிகம நகரத்தின் கல்வியறிவு 95 சதவீதமாக காணப்படுவதோடு அது மாவட்டத்தின் கல்வியறிவு மட்டத்திற்குச் சமமான பெறுமானமாகும். ஆகவே, வெலிகம நகரத்தின் கல்வியறிவு திருப்தியடையக் கூடிய நிலையில் உள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் கல்விச் சேவைகளை வழங்குவதற்காக ஒன்பது அரசாங்க பாடசாலைகளும், 03 தனியார் பாடசாலைகளும், தொழில் பயிற்சி நிலையமொன்றும் அமைந்துள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தின்படி மாணவர்

ஒவ்வொருவருக்கும் ஆரம்பக் கல்வியை பெறுவதற்கு ஒரு கிலோமீற்றர் ஆரை வடிவம் கொண்ட பிரதேசத்தினுள் ஆரம்ப பாடசாலைகள் இருத்தல் வேண்டும். கீழே காட்டப்பட்டுள்ள 18ஆம் இலக்க தேசப்படத்தில் வெலிகம நகரத்தில் பாடசாலைகளின் பரம்பல் தொடர்பில் இந்த தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

நகரத்திலுள்ள பாடசாலைகளில் அர்பா மத்திய கல்லூரி மற்றும் வெலிகம இடைநிலை கல்லூரிக்கு மட்டுமே விளையாட்டு மைதான வசதி உள்ளது. விளையாட்டு மைதான வசதி காணப்படாத ஏனைய பாடசாலைகள் அதற்கான தேவையை நகரத்தில் காணப்படும் பொது விளையாட்டு மைதானமான சேனாநாயக விளையாட்டு மைதானத்தைக்கொண்டு பூர்த்தி செய்கின்றன. எவ்வாறாயினும், குறித்த விளையாட்டு மைதானம் சகல விதமான விளையாட்டுகளுக்கும் ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஆகவே, அக்ரபோதி விகாரைக்கு எதிரே காணப்படுகின்ற வெற்றுக் காணியில் வாகன தரிப்பிடத்துடன் கூடிய விளையாட்டரங்கை அமைப்பதற்கும், தற்போதுள்ள சேனாநாயக்க விளையாட்டு மைதானத்தை முறையாக அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தேசப்பட இல 18: கல்விச் சேவை வசதிகள்




**தொடர்பு**

- பாடசாலைகள்
- 1 கி.மீ இடைத்தடுப்பு
- 2 கி.மீ இடைத்தடுப்பு
- ஏ தர வீதிகள்
- பி தர வீதிகள்
- புகையிரத வீதி
- வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்

N E S W

1:18,000

### கல்விச் சேவைகள் - வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம்- 2030

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 18**

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஒ. பி. ஜீவந்தர

நகர அபிவிருத்தி அதிகார சபை

### 6.3.4. உத்தேச போக்குவரத்து திட்டம்

வெலிகம நகரத்தில் வீதிகளின் ஒடுக்கம் மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதிய இடவசதி காணப்படாமை வினைத்திறனான போக்குவரத்திற்கு தடையாக உள்ளது. மொத்த நிலப்பரப்பில் வீதிகளுக்காக 5.5 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தெரிவு செய்யப்பட்ட வீதிகளுக்கான பாதசாரி ஒழுங்குகளை நிர்மாணித்தல் மற்றும் நிழல்தரும் மரங்களை நடுவதன் மூலம் பிரதேச மக்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் சிரமமின்றி போக்குவரத்தில் ஈடுபடுவதற்கும் பாதுகாப்புடன் நகரத்தில் உலாவுவதற்கும் வசதியளிக்கும் நோக்கத்துடன் போக்குவரத்து திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தாக்கம் மற்றும் கரையோர புகையிரத வீதியிலுள்ள வெலிகம புகையிரத நிலையத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காக புகையிரத நிலைய புகுமுக வீதி மற்றும் அதையண்டிய பிரதேசத்தை மீளமைத்தல், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை உச்ச அளவில் பயன்படுத்தல் அத்துடன் வாகன தரிப்பிடங்களை அமைப்பதன் மூலம் நகரின் மையப் பகுதியை திட்டமிடப்பட்ட அபிவிருத்தியை நோக்கி நகர்த்த முடியும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள வீதிகளை அகலமாக்க வேண்டும். அதன்படி, 2030ஆம் ஆண்டளவில் உருவாகும் போக்குவரத்து தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட அகலமாக உத்தேசிக்கப்பட்டுள்ள வீதி திட்டவமைப்பு தேசப்பட இலக்கம் 19இல் காட்டப்பட்டுள்ளது.

## தேசப்பட இல 19: உத்தேச வீதிகள் மற்றும் போக்குவரத்து திட்டம்




**தொடர்பு**

- 04 ஒழுங்கை அபிவிருத்தி
- 02 ஒழுங்கை அபிவிருத்தி
- வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்
- மேம்பாலம்
- ஏ தர வீதிகள்
- சீ மற்றும் டி தர வீதிகள்
- பி தர வீதிகள்
- புகையிரத வீதி
- உத்தியோகபூர்வ புகையிரத இல்லங்கள்
- பல்வி போக்குவரத்து நிலையம்

N W E S

1:16,000

**உத்தேச வீதி மற்றும் போக்குவரத்து திட்டம்**

**வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - 2030**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 19**

| | |
|---|---|
| தயாரித்தல் | - 2018 டிசம்பர் 10 |
| இற்றைப்படுத்தல் | - 2019 |
| மூலம் | - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம் |
| தயாரித்தது | - ஜே. ஓ. பி. ஜீவந்தர |

நகர அபிவிருத்தி அதிகார சபை

**அட்டவணை அல 07 : வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - உத்தேச வீதி மற்றும் போக்குவரத்து திட்டம் - 2030**

| வீதியின் பெயர் | உத்தேசிக்கப்பட்ட ஒழுங்கைகள் |
|---|---|
| 1. கொழும்பு – மாத்தறை பிரதான வீதி, வெலிகம – அக்குரெஸ்ஸ வீதி, வஜிரஞான மாவத்தை, பொராள வீதி, பழைய காலி வீதி, கப்பரதொட்ட சுற்றுவட்ட வீதி, மெத மாவத்தை | 02 |
| 2. பலல்ல வீதி, பண்டாரநாயக மாவத்தை, கூடலுமுல்ல வீதி | 04 |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை

மேற்படி 08ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கொழும்பு – மாத்தறை பிரதான வீதி, வெலிகம – அக்குரெஸ்ஸ வீதி, வஜிரஞான மாவத்தை, புஹாரி மஜீத் மாவத்தை, பொராள வீதி, பழைய காலி வீதி சேனாநாயக விளையாட்டு மைதானம் வரையும், கப்பரதொட்ட சுற்றுவட்ட வீதி, டிமோனி வீதி, மெத மாவத்தை ஆகிய வீதிகளை நிழல் தரும் மரங்கள், பாதசாரி நடைபாதை மற்றும் சைக்கிள் ஒழுங்கையுடன் இரண்டு ஒழுங்கைகள் வரை உருவக் குறிப்பு இலக்கம் 05இல் காட்டப்பட்டுள்ள குறுக்குவெட்டுக்கு அமைய அகலப்படுத்தி அபிவிருத்தி செய்ய இனங்காணப்பட்டுள்ளது.


**உருவக் குறிப்பு இல 05: வீதி குறுக்குவெட்டு இரண்டு ஒழுங்கைகள்**



மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை

வெலிகம நகரம் சுற்றுலாவின் சொர்க்கபுரியாக அபிவிருத்தி காணும்போது நகரத்தின் மையப்பகுதியில் ஏற்படக்கூடிய வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தற்போதுள்ள வீதிகளை அகலப்படுத்துதல் மற்றும் மாற்று வீதிகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. எனவே, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக வருகின்ற வாகனங்கள் நகரத்தை தவிர்த்துச் செல்வதற்கும் உப வீதிகள் ஊடாக இலகுவாக நகரத்தை நோக்கி வருவதற்கும் ஏற்றவகையில் பலல்ல வீதி, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் கூடலுமுல்ல விதியை இணைத்து உருவக் குறிப்பு இலக்கம் 06இல் காட்டப்பட்டுள்ளவாறு நான்கு ஒழுங்குகளைக் கொண்ட மாற்று வீதியாக அகலப்படுத்தி அபிவிருத்தி செய்ய இனங்காணப்பட்டுள்ளது.

**உருவக் குறிப்பு இல 06: வீதி குறுக்குவெட்டு நான்னு ஒழுங்கைகள்**




මංතීරු හතර- මාර්ග හරස්කඩ

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை


தற்போதைய அபிவிருத்திப் போக்கு மற்றும் நோக்கை அடிப்படையாகக்கொண்டு தொகுதி IIIஇல் 02ஆம் இலக்க இணைப்பின் கீழ் தரப்பட்டுள்ளவாறு இனங்காணப்பட்ட வீதிகளை குறைந்தபட்ச அகலம் 06 மற்றும் 07 ஆம் இலக்க உருவக் குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளவாறு 7.0 மீற்றர் மற்றும் 9.0 மீற்றர் கொண்டதாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது

**உருவக் குறிப்பு இல 07: ஏழு மீற்றர் அகலமான வீதி குறுக்குவெட்டு**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை

**உருவக் குறிப்பு இல 08: ஒன்பது மீற்றர் அகலமான வீதி குறுக்குவெட்டு**




மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை


## நகர மையத்தின் அபிவிருத்தி

வெலிகம நகரத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும்போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளினதும், குடியிருப்பாளர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நகரத்தின் மையப்பகுதி தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு தற்போதுள்ள புகையிரத நிலையத்தையும், பேருந்து தரிப்பிடத்தையும் இணைத்து பல்வித போக்குவரத்து நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கும் மெத மாவத்தை, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் பழைய காலி வீதி உள்ளடக்கப்படும் வகையில்

போக்குவரத்து திட்டமொன்றைத் தயாரித்த் செயற்படுத்துவதற்கும் இனங்காணப்பட்டுள்ளது. மேலும், பொராள வீதி மற்றும் ஹெட்டி வீதி இணையும் சந்தியில் ஏற்படுகின்ற அதிக வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்காக ஹெட்டி வீதியும் அக்குரெஸ்ஸ வீதியும் இணையும் வகையில் புதிய வீதி ஒன்றை அல்லது அக்குரெஸ்ஸ வீதியும் மெத மாவத்தையும் இணையும் வகையில் மேம்பாலம் ஒன்றை அல்லது மாற்று வீதியொன்றை நிர்மாணித்தல் பொருந்தும் என இனங்காணப்பட்டுள்ளது.

நகரத்தின் மையப்பகுதியிலுள்ள முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்கும், பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக நகரத்திற்கு வரும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கும் பல்வித போக்குவரத்து நிலையத்தை அமைக்க திட்டமிட்டுள்ள காணியின் ஒரு பகுதியில் தரிப்பிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், கரையோர பூங்கா அபிவிருத்தி திட்டத்திற்குரிய காணியின் இனங்காணப்பட்ட பிரதேசம் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நகரத்தின் மையப்பகுதியும் கரையோர வலயமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விதம் 09ஆம் இலக்க உருவக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது

உருவக் குறிப்பு இல 09: வேலிகம நகரத்தின் மையப் பிரதேசம் - உத்தேச திட்டவமைப்பு



### 6.3.5 உத்தேச நீர் வழங்கல் திட்டம்

பொல்அத்துமோதர கங்கை வெலிகம நகரத்திற்கு குழாய் நீரை வினியோகம் செய்வதற்காக நீரைப் பெற்றுக்கொள்ளும் பிரதான மூலமாகும். கனங்கே பிரதேசத்தில் பொல்அத்துமோதர கங்கையிலிருந்து பெறப்படும் நீர் பலல்லையில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்தினால் சுத்திகரிக்கப்பட்டு வெலிகமயில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கியூடாக வினியோகிக்கப்படுகிறது. இவ்வாறு நாளாந்தம் வினியோகிக்கப்படும் நீரின் அளவு 6,500 கன மீற்றராக இருப்பதோடு, இது போதுமானதாக இல்லாததால் ஏற்கனவே பாரிய மாத்தறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய நீர் வழங்கல் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டளவில் அதன் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற உள்ளன. குறித்த கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றதும் தங்குதடையின்றி 24 மணிநேரமும் நீரை வினியோகிக்க முடியுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. 2030ஆம் ஆண்டளவில் எதிர்வு கூறப்பட்டுள்ள நாளாந்த நீர்த் தேவை 09ஆம் இலக்க அட்டவணையிலும், உத்தேச நீர் வினியோகம் 09ஆம் இலக்க தேசப்படத்திலும் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இல 08 : வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - நாளாந்த நீர்த் தேவை**

| ஆண்டு | மதிப்பீட்டு சனத்தொகை | நாளாந்தம் சஞ்சாரம் செய்வோர் | நீர்த் தேவை ஹோட்டல்கள் | நீர்த் தேவை வைத்தியசாலைகள் | நாளாந்த நீரத் தேவை |
|---|---|---|---|---|---|
| **2011** | 22,149 | 50,000 | 69 $m^3$ | 19 $m^3$ | 4674 $m^3$ |
| **2016** | 23,228 | 55,000 | 171 $m^3$ | 19 $m^3$ | 5031 $m^3$ |
| **2020** | 24,156 | 58,500 | 238 $m^3$ | 19 $m^3$ | 5289 $m^3$ |
| **2025** | 25,369 | 70,000 | 383 $m^3$ | 19 $m^3$ | 5808 $m^3$ |
| **2030** | 26,643 | 80,000 | 628 $m^3$ | 19 $m^3$ | 6402 $m^3$ |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாத்தறை மாவட்டக் காரியாலயம்

குறிப்பு :- தனியாள் நீர் நுகர்வு (வதிவிடம்) – 180 லீற்றர்

தனியாள் நீர் நுகர்வு (சஞ்சாரம் செய்வோர்) – 12 லீற்றர்

ஹோட்டல் அறை ஒன்றுக்கான தேவை – 0.4 கன மீற்றர்

## தேசப்பட இல 20: உத்தேச நீர் வழங்கல்




**தொடர்பு**

நீர் கொள்ளளவு (மி.மீ)

| | | | |
|---|---|---|---|
| 0-63 | 90-110 | 160-250 | ஏ தர வீதிகள் |
| 63-90 | 110-160 | 250-280 | பி தர வீதிகள் |
| | | 280< | புகையிரத வீதி |

வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்

N W E S

1:16,000

**உத்தேச நீர் வழங்கல் - வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - 2030**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 20**

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர அபிவிருத்தி அதிகார சபை

### 6.3.6 உத்தேச மின்சார மற்றும் தரவு வடத் திட்டம்

தேசிய மின்சார கட்டமைப்பிலிருந்து தென் மாகாணத்திற்கான மின்சாரம் மத்துகம, காலி, தெனியாய, எம்பிலிப்பிட்டிய மற்றும் பலாங்கொடை ஆகிய உப நிலையங்களூடாக வழங்கப்படுகின்றது. அதன்படி, வெலிகம பிரதேசத்திற்கு மின்சாரத்தை வழங்குவதற்காக 10 மெகாவாற்று மின்சாரம் காலி மற்றும் தெனியாய உப நிலையங்கள் ஊடாக பெறப்படுகின்றது.

வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் அதிசக்தி வாய்ந்த (கிலோவாற்று 33) 6.46 கிலோமீற்றர் மின்சாரக் கம்பிகளும், சக்தி வாய்ந்த (கிலோவாற்று 11) 2.47 கிலோமீற்றர் மின்சாரக் கம்பிகளும் காணப்படுவதோடு நகரத்தினுள் மின்சாரத்தை வினியோகிப்பதற்காக 12 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள அனைத்து வர்த்தக, கைத்தொழில் மற்றும் மதத் தலங்களுக்கும், பிரதேசத்திலுள்ள 97.8 சதவீத குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, மின்சாரம் வழங்கப்படவில்லையென கணிக்கப்பட்டுள்ள 2.2 சதவீதமான குடியிருப்புகள் தற்காலிகமானவையென இனங்காணப்பட்டுள்ளன.

வெலிகம நகர பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உயர் கொள்ளளவு கொண்ட மின்சாரத்தை வழங்க நேரிடின் மேற்படி உப நிலையங்கள் ஊடாக அதனை பெற்றுக்கொள்ள முடியும். இன்றளவில் காணப்படுகின்ற உப நிலையங்கள் 21ஆம் இலக்க தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.

தேசப்பட இல 21: மின்சாரக் கட்டமைப்பு உப நிலையங்களின் அமைவு




மூலம்: மின்சார சபை, வெலிகம

### 6.3.7 சாக்கடை மற்றும் வடிகாலமைப்புத் திட்டம்

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகால் முறைமை மழைநீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளபோதும் அவற்றில் காணப்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக நீர் உரிய முறையில் வழிந்தோடாது தேங்கிக் கிடப்பதால் நுளம்புத் தொல்லை ஏற்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறப்பட்ட தகவல்களுக்கமைய சுற்றுலா பருவகாலம் ஆரம்பமாவதைத் தொடர்ந்து நுளம்பு தொல்லை தீவிரமடையும். இது சுற்றுலா நடவடிக்கைகளுக்கு இடையூறாக காணப்படுவதால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வடிகால்களை நீர் வழிந்தோட கூடியக் வகையில் மீள செப்பனிட வேண்டியுள்ளது. அதனைக் கவனத்தில் கொண்டு அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வடிகாலமைப்பு முறைமை தேசப்பட இலக்கம் 22இல் காட்டப்பட்டுள்ளது.

## தேசப்பட இல 22: உத்தேச வடிகாலமைப்பு முறைமை




### தொடர்பு

- அபிவிருத்தி செய்யப்படவுள்ள கால்வாய்கள்
- ஏ தர வீதிகள்
- பி தர வீதிகள்
- வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்
- புகையிரத வீதி

N W E S

1:16,000

நகர அபிவிருத்தி அதிகார சபை

**உத்தேச சாக்கடைத் தொகுதி - வலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - 2030**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 22**

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

**அபிவிருத்தி மூலோபாயங்கள்**

**சாக்கடை பரிகரிப்புத் அலகொன்றை நிர்மாணித்தல்**

நகர எல்லையினுள் ஒருங்கிணைக்கப்பட்ட பொது சாக்கடை தொகுதி இல்லாதபோதும் நீர் அடைப்பு துப்புரவேற்பாட்டு கழிப்பறைகளும் துப்புரவேற்பாட்டற்ற கழிப்பறைகளும் பயன்படுகின்றன.

நகரத்தினுள் 99 சதவீதமான நீர் அடைப்பு துப்புரவேற்பாட்டு கழிப்பறைகளும், துப்புரவேற்பாடற்ற 0.6 சதவீதமான கழிப்பறைகளும் காணப்படுகின்றன. மேலும், 0.4 சதவீதமான குடியிருப்புகளுக்கு கழிப்பறை வசதிகள் இல்லை. ஆகவே, துப்புரவேற்பாடற்ற 0.6 சதவீதமான கழிப்பறைகளும், கழிப்பறை வசதிகளற்ற 0.4 சதவீதமான குடியிருப்புகள் காணப்படுவதும் துப்புரவேற்பாட்டு தொடர்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இனங்காணப்பட்டுள்ளது.

நகரத்தின் மையப்பகுதியும் கரையோரத்தை அண்டிய பிரதேசமும் ஆழமற்ற நிலக்கீழ் நீர் மட்டத்தை கொண்டுள்ளதால் மழைக்காலங்களில் நீர் அடைப்பு கழிப்பறைகள் நிரம்பி வழிந்து சுற்றாடலை மாசுபடுத்துவதுடன் தொற்றுநோய் பரவும் போக்கும் அதிகரிக்கலாம். இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சகல வசதிகளையும் கொண்ட சாக்கடை பரிகரிப்புத் தொகுதி ஒன்றை அமைப்பதற்காக 29ஆம் இலக்க நிலப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வலான வைத்தியசாலைக்கு அருகாமையில் காணப்படும் வெற்றுக் காணி இனங்காணப்பட்டுள்ளது. எனவே, 2030 ஆம் ஆண்டளவில் இப்பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படும்.

**நிழற்பட இல 29: சாக்கடைத் தொகுதிக்கான உத்தேச காணி**




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாத்தறை மாவட்டக் காரியாலய

### 6.3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டம்

வெலிகம நகர சபையின் அபிவிருத்தி பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின்படி, நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் திண்மக் கழிவுப் பொருட்களை சேகரிக்கும் பணி வெலிகம நகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேசத்தில் நாளொன்றுக்கு சுமார் 15 தொன் குப்பை கூளங்கள் சேர்கின்றன. இதில் பொதுச்சந்தை, வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மாவட்ட வைத்தியசாலை மற்றும் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக் கழிவுப் பொருட்களும் அடங்கும். ஆகவே, மேற்படி சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்களில் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுப் பொருட்களின் கட்டமைப்பு கீழே 10ஆம் இலக்க அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல 09 : திண்மக் கழிவுப் பொருள் கட்டமைப்பு**

| கட்டமைப்பு | நூற்றுவீதம் % |
|---|---|
| **உக்கக்கூடிய தாவர, விலங்குகளின் பாகங்கள்** | 80.0 |
| **உக்காத பொருட்கள்** | 10.0 |
| **எத்தேவைக்கும் பயன்படுத்த முடியாத கொருட்கள்** | 10.0 |
| **மொத்தம்** | 100.0 |

**மூலம்: வெலிகம நகர சபை, அபிவிருத்திப் பிரிவு -2016**

நகரத்தினுள் பிறப்பிக்கப்படும் குப்பை கூளங்களில் 80 சதவீதமானவை உக்கக்கூடிய நிலையிலுள்ள தாவர மற்றும் விலங்குகளின் பாகங்களாகும். நகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்களில் உக்கக்கூடிய பொருட்களைத் தெரிவு செய்து, கப்பரதொட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள நகரசபைக்கு சொந்தமான 17 ஏக்கர் பரப்பில் காணப்படும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இக் கருத்திட்டம் கப்பரதொட்ட கடனீரேரியைச் சார்ந்தது நடைமுறைப்படுத்தப்படுவதால் கடனீரேரியின் நீரும் சுற்றுலா ஈர்ப்பு கொண்ட கடற்கரை நீரும் மாசடைகின்றது.

திண்மக் கழிவுப் பொருட்களில் 10% கழிவுப் பொருட்கள் உக்காதவையாக காணப்படுகின்றன. அவற்றில் காணப்படும் பிளாஸ்டிக், கண்ணாடி போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு எஞ்சிய பகுதிகள் மீள்சுழற்சி செய்யப்படும். மீள்சுழற்சி செய்ய முடியாத சுமார் 05 சதவீத திண்மக் கழிவுப் பொருட்கள் சுற்றாடல் கூருணர்வு கொண்ட பிரதேசத்தில் கொட்டப்படுவதானது சுற்றாடல் ரீதியான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.. எனவே, மீள்சுழற்சி செய்ய முடியாத திண்மக் கழிவுப் பொருட்களை ஆரோக்கியமான காணி நிரப்பல் முறையின் கீழ் இறுதியாக அகற்றுவதற்கு தற்போது இனங்காணப்பட்டுள்ள சாலிமவுன்ட் கைத்தொழில் பேட்டை வளாகத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணி நிரப்பல் கருத்திட்ட வளாகத்திற்கு கொண்டு வேண்டும். அந்த வளாகம் நிழற்பட இலக்கம் 30இல் காட்டப்பட்டுள்ளது.

**நிழற்பட இல 30: உத்தேந காணி நிரப்பல் கருத்திட்ட வளாகம்**




**மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாத்தறை மாவட்டக் காரியாலயம**

## 6.4 பொருளாதார அபிவிருத்தி மூலோபாயம்

வெலிகம நகரம் சுமார் 08 கிலோமீற்றர் ஆரை வடிவம் கொண்ட ஒரு பிரதேசத்திற்கு நாளாந்தம் சேவைகளை வழங்கி வருவதோடு கொழும்பு, தங்காலை, வெல்லவாய பிரதான வீதி, கரையோர புகையிரத வீதி மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொக்மாதுவ இடைமாற்று நிலையத்தினூடாக பிரவேசிக்க முடிதல் நகரத்தின் பொருளாதார வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. நகரத்தின் செயற்பாடுகளை ஆராயும்போது வர்த்தக, நிதி மற்றும் கல்வித் துறை சார்ந்த சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக 2030ஆம் ஆண்டளவில் நாளாந்தம் நகரத்திற்கு 100,000இற்கும் அதிகமானோர் வருவார்களென தரவு பகுப்பாய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் தொழில் புரிவோரின் எண்ணிக்கை 2011ஆம் ஆண்டில் 5721ஆகக் காணப்பட்டதோடு 2017ஆம் ஆண்டில் அது 14.4 சதவீதமாக அதாவது 6545ஆக அதிகரித்துள்ளது. 2011ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 7940ஆகக் காணப்பட்டதோடு 2017ஆம் ஆண்டளவில் அத்தொகை 49.5 சதவீதம் அதாவது 4008ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த முன்னேற்றத்தில் சுற்றுலாத்துறை கூடிய பங்கினை வகித்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள ஹோட்டல்கள் மற்றும் குடியிருப்புகளில் தொழில் புரியும் பணியாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் 11ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இல 10 : வெலிகம நகரசபை ஆளு கைப் பிரதேசத்திலுள்ள சுற்றுலா நிறுவனங்களின் வேலைவாய்ப்பு**

| நிறுவனம் | எண்ணிக்கை | | ஊழியர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2012 | 2017 | 2012 | 2017 |
| ஹோட்டல்கள் | 07 | 20 | 42 | 1906 |
| தங்குமிடங்கள் | 04 | 34 | 07 | 95 |
| விருந்தினர் இல்லங்கள் | 09 | 25 | 19 | 65 |
| வாடிவீடுகள் | 01 | 01 | 04 | 04 |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாத்தறை மாட்டக் காரியாலம்

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி 2012ஆம் ஆண்டில் 72ஆகக் காணப்பட்ட தொழில் புரிவோரின் எண்ணிக்கை 2017ஆம் ஆண்டளவில் 2070 ஆக அதிகரித்துள்ளது. அதன்படி, சுற்றுலாத்துறையில் தொழில் வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதைக் காணலாம். ஆகவே, வேலையின்மையைக் குறைப்பதற்கு சுற்றுலா, மீன்பிடி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும். அதற்காக கீழே தரப்பட்டுள்ள மூலோபாயங்களைப் பின்பற்றுதல் பொருத்தமானது.

**மூலோபாயம் 1**

நகரத்தின் மையப் பகுதியை சகல வசதிகளும் கொண்ட வர்த்தக பிரதேசமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் புகையிரத நிலையத்தையும் பேருந்து தரிப்பிடத்தையும் ஒருங்கிணைத்து பல்வித போக்குவரத்து நிலையமொன்றை உருவாக்குதல்.

**மூலோபாயம் 2**

கடற்கரைப் பரப்பில் காணப்படுகின்ற மூலவளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக நான்கு கட்டங்களின் கீழ் கடற்கரைப் பரப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் அலைச்சறுக்கு விளையாட்டுக்காக பயன்படுகின்ற பெலேன பிரதேசத்தை அந்த விளையாட்டுக்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்டதாக அபிவிருத்தி செய்தல்.

**மூலோபாயம் 3**

கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய பிரதேசத்தையும் நாரா நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தையும் சுற்றுலா மேம்பாட்டு வலயமாக இனங்கண்டு திட்டமிடப்பட்ட அபிவிருத்தியை நோக்கி நகர்த்துதல்.

**மூலோபாயம் 4**

சுற்றுலா கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக கப்பரதொட்ட மற்றும் பரணகடே பிரதேசத்தை மிதித்தேறி நின்று மீன்பிடித்தல் கைத்தொழிலுக்காக பயன்படுத்துதல்.

### 6.4.1 பொருளாதாரத் திட்டம்

வெலிகம கடற்கரைப் பரப்பில் காணப்படும் வளைவும், மெல்லலைகளைக் கொண்ட தன்மையும் அலைச்சறுக்கு விளையாட்டு மிகவும் பொருத்தமாக இருப்பதால் உள்நாட்டு. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் அனேகமானோர் அலைச்சறுக்கு விளையாட்டுக்காக வெலிகம பிரதேசத்தை நோக்கி குவிவதை அவதானிக்க முடிகிறது. இன்றளவில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படாததால் நகரத்தின் மையப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சகல வசதிகளையும் கொண்ட வர்த்தக நிலையமொன்றை அமைத்தல்.

மேலும், நகருக்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பேருந்து தரிப்பிடம் மற்றும் புகையிரத நிலையம் போன்ற பொருத்தமான இடங்களில் தகவல் மையங்களை அமைத்தல்.

மீன்பிடி மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக தற்போதுள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிப் பிரதேசங்களை முறையான திட்டவமைப்பின்படி அபிவிருத்தி செய்தல்.
கரையோர வலயம் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவசியமான சகலவிதமான ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிப்பதாக இனங்காணப்பட்டுள்ளது. அதன்படி, வெலிகம கடற்கரைப் பூங்கா அபிவிருத்தி கருத்திட்டத்தை 04 கட்டங்களின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, முதலாவது கட்டத்தின் கீழ், 16 மீன் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கும், வாகனத் தரிப்பிடத்தை அமைப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. தற்போது மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு நிலக்காட்சி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 31ஆம் இலக்க நிழற்படத்தில் அதனைக் காணலாம். இரண்டாவது கட்டத்தின் கீழ் சிறுவர் பூங்கா அபிவிருத்தி, வாகன தரிப்பிடத்தை அமைப்பதற்கான காணியை ஒதுக்குதல் மற்றும் மர நடுகை என்பன பிரதான பணிகளாக அமைவதோடு இன்றளவில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு நிலக்காட்சிப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அலைச்சறுக்கு விளையாட்டுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல், உணவகங்களை அமைத்தல் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்காக காவலரண் அமைத்தல் என்பவற்றை மூன்றாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உணவகங்கள் அமைய வேண்டியவிதம் உருவக்குறிப்பு இலக்கம் 10இல் காட்டப்பட்டுள்ளது. நான்காம் கட்டத்தின் கீழ் உணவகமொன்றையும், பார்வையாளர் அரங்கொன்றையும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தவும்


எதிர்பார்க்கப்படுகின்றது. வெலிகம நகர பூங்கா அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டவமைப்பு 11ஆம் இலக்க உருவக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

**நிழற்பட இல 31: கரையோர அபிவிருத்தி கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தை**




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை - 2018

**உருவக் குறிப்பு இல 10: வெலிகம கடற்கரைப் பூங்கா அபிவிருத்தி கருத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உணவகங்களின் முகப்புத் தோற்றம்**



மூலம்: நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாத்தறை மாட்டக் காரியாலம

உருவக் குறிப்பு இல 11: வெலிகம கடற்கரைப் பூங்கா





மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை - 2018

### 6.4.2 சுற்றுலாத் திட்டம்

இன்றளவில் செயற்பாடு குறைவாக உள்ள கப்பரதொட்ட நாரா நிறுவனத்திற்குச் சொந்தமான காணியை சுற்றுலா மேம்பாட்டு நிலையமாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய பிரதேசத்தை பொழுதுபோக்கு மேம்பாட்டு வலயமாகவும் கப்பரதொட்ட ராஸ்ஸமுன மலையை காட்சி நிலையமாகவும் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெலிகம நகர சபையினால் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய பிரதேசத்தின் சுற்றாடல் ரீதியான கூருணர்வு படிப்படியாக குறைந்து செல்வதானது கப்பரதொட்ட கடனீரேரியின் உயிர்ப்பல்வகைமைக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்தை பாரிய மாத்தறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டுள்ள திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு மாற்றி கப்பரதொட்ட கடற்கரையை அண்டிய பிரதேசத்தை சுற்றாடல் ரீதியான சுற்றுலா நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான சுற்றாடல் ரீதியான சுற்றுலா நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசம் அமைதியான ஒரு சூழலில் அமைந்துள்ளதால் சிறிய அளவிலான குடியிருப்புக்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, அதற்காக உள்நாட்டு மூலப் பொருட்களை அதிகமாக பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. உத்தேச கருத்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள எண்ணக்கருசார் திட்டவமைப்பு உருவக் குறிப்பு இலக்கம் 12இல் காட்டப்பட்டுள்ளது.

**உருவக் குறிப்பு இல 12: கப்பரதொட்ட கடனீரேரி அபிவிருத்தி கருத்திட்டம்**





**மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை - 2018**

கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய பிரதேசம் ரம்மியமான ஒரு சூழலில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் தற்போது காணி அமைந்துள்ள விதத்தில் கப்பரதொட்ட இறங்குதுறைக்கு முகப்பாக உள்ள நாரா நிறுவனத்திற்குச் சொந்தமான காணியை இயற்கையான நீச்சல்

தடாகமாகவும் அதற்குத் தேவையான சகல அம்சங்களையும் கொண்டதாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள எண்ணக்கருசார் திட்டவமைப்பு உருவக் குறிப்பு இலக்கம் 13இல் தரப்பட்டுள்ளது.

**உருவக் குறிப்பு இல 13: கப்பரதொட்ட நாரா நிறுவனத்திற்குச் சொந்தமான காணி (எண்ணக்கருசார் திட்டவமைப்பு)**






மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை - 2018

வெலிகம பிரதேசம் ஆதிகாலந்தொட்டு மிதித்தேறி நின்று மீன்பிடித்தல் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றுள்ளதால் அதனை சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தலாம். சுற்றுலாப் பயணிகளுக்கு மிதித்தேறி நின்று மீன் பிடிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிவதோடு, சுற்றுலாப் பயணிகளுக்கு புதியதோர் அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கவும் முடியும். மிதித்தேறி

நின்று மீன் பிடித்தல் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக கப்பரதொட்ட பிரதேசமும் பரணகடே பிரதேசமும் இனங்காணப்பட்டுள்ளது.

கப்பரதொட்ட இறங்குதுறைக்கு முகப்பாக உள்ள மலைப்பாங்கான பிரதேசத்தில் வெலிகம வாடிவீடு அமைந்துள்ளது. எவராயினும், இப்தேசத்திலுள்ள கட்டடங்கள் உரிய பராமரிப்பு இன்றி உடைந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. இப்பிரதேசத்திற்கு எதிரே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கப்பரதொட்ட இறங்குதுறை இப்பிரதேசத்தின் வனப்பை மேலும் அதிகரித்துள்ளது. ஆகவே, வெலிகம நகர அபிவிருத்தி திட்டத்தின் நோக்கான ‘வெலிகம நகரத்தை சுற்றுலாவின் சொர்க்கபுரி’யாக அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான சகல வசதிகளையும் கொண்ட ஓரிடத்தை அமைப்பதற்கான வாய்ப்புள்ளது.

## 6.5 நிலைபேறான சுற்றாடல் அபிவிருத்தி மூலோபாயங்கள்

வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் வெலிகம குடாவை அண்டியதாக கரையோர வலயத்தில் அமைந்துள்ள உயர் கூருணர்வு கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் உயர் உயிர் பல்வகைமை கொண்ட கப்பரதொட்ட கடனீரேரி, ஈர நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் காணப்படுவதால் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்த கீழுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுதல் பொருத்தமானது.

### 6.5.1 ஒதுக்குப் பிரதேசத் திட்டம் - ஈரநிலம்

6.5.1.1 வெலிகம ஆளுகைப் பிரதேசத்திலுள்ள ஈரநிலங்களை வகைப்படுத்தல்

01. நாட்டினுள் காணப்படும் இயற்கையான நன்னீர் ஈரநிலங்கள்
    உதாரணம்: ஆறுகள், சதுப்பு நிலங்கள்

02. நன்னீர் மற்றும் சவர் தன்மையுடனான ஈரநிலங்கள்
    உதாரணம் கடனீரேரிகள், கண்டல்
03. மனிதனால் உருவாக்கப்பட்ட ஈரநிலங்கள்
    உதாரணம்: வயல்கள், அண்மைக்காலத்தில் தரிசு நிலமான வயல் காணிகள்

6.5.1.2 ஈரநில வலயமாக்கல்

(அ) ஈரநில இயற்கை பாதுகாப்பு வலயம்
(ஆ) விசேட நெற்செய்கை வலையம்
(அ) ஈரநிலா இயற்கை பாதுகாப்பு வலயம்

அதிஉயர் உயிர்பல்வகைமை காணப்படுகின்ற ஈரநிலா பிரதேசங்கள் மற்றும் வெள்ள அனர்த்ததைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஏதுவாக அமையும் ஈர நிலங்கள் மற்றும் நீர் தேக்கி வைப்பு அத்துடன் நீர் வழிந்தோடும் பிரதேசங்களாக பேண வேண்டிய பிரதேசங்கள் இந்த வலயத்தில் அடங்கும்.

(ஆ) விசேட நெற்செய்கை வலயங்கள்
பயிர் செய்யப்படுகின்ற வயற் காணிகள், தரிசு நில வயற் காணிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தரிசு நிலங்கள், பசும்புல் பிடி போன்ற பிரதேசங்கள் இந்த வலயத்தில் அடங்கும்.

ஈரானில் வலையத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடுகள் பின்வருமாறு. (தேசப்பட இலக்கம் 23 - வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்கான ஈரநில வலயமாக்கல் திட்டம் 2019-2030, இணைப்பு இல 02 - வலயத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டிகள்)

**6.5.1.3 ஈரானில் வலயங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடுகள்.**

1. ஈரநில இயற்கை பாதுகாப்பு வலயம்

அ. இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட இயற்கை பூங்காக்கள்.

ஆ. சூழல் நேய உணவகங்கள்.

இ. சிறிய அளவிலான மாநாட்டு மண்டபங்கள்.

ஈ. திறந்தவெளி தேகப் பயிற்சி நிலையங்கள் / உடற்பயிற்சி நிலையங்கள்

உ. ஈரநில நூதனசாலை.

ஊ. சுற்றாடல் ரீதியான சுற்றுலா வசதிகள் (தூண்களின் மேல் அமைக்கப்பட்ட பண் குடில்கள் என்பன)

எ. தொனிப்பொருள் பூங்காக்கள் ( சூழல் பாதுகாப்புடன் பேணக்கூடிய)

ஏ. இயற்கையை அடிப்படையாகக் கொண்ட பொழுதுபோக்கு மற்றும் வினோத நடவடிக்கைகள்.

ஐ. திறந்தவெளி புல் தரைகளில் அவற்றின் இயல்புகள் பாதிக்கப்படாத வகையில் விளையாட்டில் ஈடுபடுதல்.

ஒ. பாரம்பரிய முறையில் மீன்பிடி கைத்தொழிலில் ஈடுபடுதல்.

ஓ. பூக்கள் சேகரிப்பு.

ஔ. நீர்நிலைகள் சார்ந்த போக்குவரத்து (பாதுகாப்புடன் கூடிய வகையில் நடைமுறைப்படுத்த முடியுமாயின்)

க. மாட்டுத் தொழுவங்களைப் பராமரித்தல் (வேறு கால்நடை வளர்ப்பு தவிர்ந்த)

ங. ரம்மியமான ஈர நிலங்களைப் பேணுதல்.

ச. தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள்.

ஞ. புதிய வாய்க்கால் நிர்மாணம் / வெள்ளப் பாதுகாப்பு அணைகள்

ட. சூழல் நேய விவசாய கைத்தொழில்

**II. விசேட வயல் வலயங்கள்**

கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் 19/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடுகளை மட்டும் மேற்கொள்ள முடியும்.

**தேசப்பட இல 23: ஈருநில வலயமாக்கல் திட்டம்**




**தொடர்பு**

- இயற்கை ஒதுகக்கப் பிரதேசம்
- சதுப்பு நிலம்
- நீர் நிலைகள்

N W E S

1:16,000

**ஈரநிலை வலயமாக்கல் திட்டம் - வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் 2030**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 23**

| | |
|---|---|
| தயாரித்தல் | - 2018 டிசம்பர் 10 |
| இற்றைப்படுத்தல் | - 2019 |
| மூலம் | - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம் |
| தயாரித்தது | - ஜே. ஓ. பி. ஜீவந்தர |

நகர
அபிவிருத்தி
அதிகார
சபை

### 6.5.2 நிலக் காட்சி முகாமைத்துவ திட்டம் 2019-2030

வெலிகம நகரசபை அளுகைப் பிரதேசத்தின் தரைத்தோற்ற திட்டத்தை தயாரிக்கும்போது கீழ்க்காணும் பிரதேசங்களை முறையான தரைத்தோற்ற திட்டத்தின்படி மீண்டும் மீளமைக்க வேண்டுமென இனங்காணப்பட்டுள்ளது.

1. வெலிகம கடற்கரை பூங்கா (காப்பரதொட்ட தொடக்கம் பெலேன வரை)
2. குட்டராசக் கல் சார்ந்த பிரதேசம் மற்றும் பசுமை ஒழுங்கை அபிவிருத்தி
3. சேனாநாயக்க விளையாட்டு மைதான அபிவிருத்தி

மேற்படி ஒவ்வோர் இடம் சம்பந்தப்பட்ட தற்போதைய நிலைமைகளைக் காட்டும் நிழற்படங்கள் மற்றும் அவ்விடங்களின் நிலக்காட்சித் திட்டம் பற்றிய பருமட்டான குறிப்பு, நிழற்பட இலக்கம் 01 தொடக்கம் 03 வரை இணைப்பு இலக்கம் 03இன் கீழ் தரப்பட்ள்ளது.

### 6.5.3 அனர்த்தக் குறைப்புத் திட்டம் 2019

5.43 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ள வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் 2016ஆம் ஆண்டளவில் சனத்தொகை 23,228ஆகக் காணப்பட்டதோடு 2030ஆம் ஆண்டளவில் எதிர்வு கூறப்பட்டுள்ளது சனத்தொகை 26,643 ஆகும்.

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் அறிவிக்கப்படும் இயற்கை அனர்த்தங்களாக வெள்ளப்பெருக்கும் சுனாமியும் காணப்படுகின்றது. இந்த அனர்த்தங்களால் பாதிப்பு ஏற்படும் பிரதேசங்கள் தேசப்பட இலக்கம் 24இல் கட்டப்பட்டுள்ளன.

வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தைச் சந்தித்த பிரதேசங்களாக பின்வரும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் குறிப்பிடலாம்.

i. வல்லிவெல கிழக்கு
ii. வல்லிவெல தெற்கு
iii. ஹெட்டிவீதி தெரு
iv. கொஹுனுகமுவ
v. கப்பரதொட்ட வடக்கு
vi. பெலேன மேற்கு

2004 ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவின்போது வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கம் ஏற்பட்ட விதம் பின்வருமாறு

சுனாமி பேரழி நிகழ்ந்த மொத்த நிலப் பரப்பு – 33%

பாதிக்கப்பட்ட மக்கள் - 34%

உயிரிழப்புகள்- 446%

**சுனாமி பேரழிவு நிகழ்ந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பின்வருமாறு**

i. பெலேன மேற்கு
ii. கல்பொக்க கிழக்கு
iii. அளுத் வீதிய
iv. பரண கடே
v. கப்பரதொட்ட தெற்கு
vi. கப்பரதொட்ட வடக்கு
vii. வல்லிவெல மேற்கு

**1. சுனாமியின் பாதிப்புக்கு இலக்கான பிரதேசங்களுக்காக முன்மொழியக் கூடிய உத்திகள்**

1.1 கண்டல் தாரவ வளர்ப்பை விஸ்தரித்தல்

1.2 ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைக்காக கடற்கரையை ஒதுக்குதல்

**2. அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடுகள்**

2.1 மீன்பிடி இறங்கு துறைகள்

2.2 திறந்தவெளிப் பிரதேசங்கள்


2.3 கடற்கரைப் பூங்கா

**சுனாமியின் பாதிப்புக்கு இலக்கான பிரதேசங்களுக்காக முன்மொழியக் கூடிய உத்திகள்**

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வெள்ள அச்சுறுத்தல் இல்லையெனினும் மழையால் அச்சுறுத்தல் ஏற்படுவதுண்டு. மழை நீர் வழிந்தோடுவதற்குப் பொருத்தமான வழிமுறை காணப்படாததால் இந்திலை தோன்றியுள்ளது.

ஆகவே, மழை நீர் வழிந்தோடுவதற்குப் பொருத்தமான வழிமுறையைத் தயாரிப்பதன் மூலம் இந்த அச்சுறுத்தலைக் குறைத்துக்கொள்ள முடியும்.

## தேசப்பட இல 24: அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் திட்டம் - 2030




**தொடர்பு**

- சுனாமி
- வெள்ள அனர்த்தப் பிரதேசம்
- ஏ தர வீதிகள்
- பி தர வீதிகள்
- புகையிரத வீதி
- வெலிகம நகர சபையின் ஆகைப் பிரதேசம்

1:16,000

அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் திட்டம் - வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - 2018

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

தேசப்பட இல: 24

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர
அபிவிருத்தி
அதிகார
சபை

### 6.5.4 பொது திறந்தவெளி பொழுதுபோக்குத் திட்டம்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல்களுக்கு அமைய அபிவிருத்தி திட்டவமைப்புக்களை தயாரிக்கும்போது 1000 பேருக்கு குறைந்தபட்சம் 1.4 ஹெக்ரயர் காணி நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும். வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் 2016ஆம் ஆண்டளவில் சனத்தொகை 23,228 என தொகைமதிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அபிவிருத்தி திட்டவமைப்பின் தரவு பகுப்பாய்வுக்கமைய 2030ஆம் ஆண்டளவில் சனத்தொகை 26,643ஆக இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதன்படி, 2030ஆம் ஆண்டளவில் நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்காக குறைந்தபட்சம் 37.30 ஹெக்ரயர் காணியை ஒதுக்க வேண்டும்.

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் சமகாலத்தில் காணப்படும் நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகள் பிரதானமான இரண்டு ஆக்கக்கூறுகளின் கீழ் ஆராயப்படுகின்றன. நேரடி பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் மக்கள் செயலூக்கத்துடன் பங்குபற்றக்கூடிய வகையில் இட வசதி இருத்தல் வேண்டும். அவையாவன,

i. விளையாடுதல்
ii. நீந்துதல்
iii. ஓடுதல்
iv. நடத்தல்
v. படகு ஓட்டுதல்
vi. பாரம்பரிய முறையில் மீன் பிடித்தல்
vii. அலைச்சறுக்கு விளையாட்டு போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்

வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் மேற்குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான இடங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுவதோடு, அவ்வாறான இடங்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை இணக்கம் 12இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இல 11: வெலிகம நகரசபை ஆளுகைப் பிரதேசம் - நேரடி பொழுதுபோக்கு வசதிகளுக்கான பூங்கா வகைகள்**

| தொ இல | பூங்கா வகை | பரப்பளவு (ஹெக்) |
|---|---|---|
| 1. | மிகச்சிறிய பூங்கா Pocket Parks (EPP) | 0.19 |
| 2. | கடற்கரை பூங்கா Beach Park (EBP) | 1.29 |
| 3. | நடுத்தரப் பூங்கா கீழ் மட்ட Local Parks (ELP) | 2.02 |
| | **மொத்தம்** | **3.50** |

மூலம்: நகர அபிவிருத்தி அதிகார சபை

11ஆம் இலக்க அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கமைய வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் தற்போது 3.50 ஹெக்ரயர் திறந்தவெளி பிரதேசங்கள் காணப்படுகின்றன. தற்போதுள்ள 23,228 சனத்தொகைக்கு நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்காக 32.51 ஹெக்ரயர் காணி இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மாநகரசபையின் ஆளுகைப் பிரதேசத்தில் சனத்தொகைக்கு ஏற்ற வகையில் திறந்தவெளி பிரதேசங்கள் இல்லை என்பதுடன் ஏற்கனவே காணப்படுகின்ற திறந்தவெளி பிரதேசங்களில் காணப்படும் வசதிகள் போதுமானவையாக இல்லை.

**மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்கான இடங்கள்**

i. பொது நூலகம் 01

ii. வாசிகசாலைகள் 03

iii. திரையரங்கு 01

2030ஆம் ஆண்டளவில் சனத்தொகை 26,643ஆக இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதன்படி, 2030ஆம் ஆண்டளவில் நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்காக குறைந்தபட்சம் 37.30 ஹெக்ரயர் காணியை ஒதுக்குதல் வேண்டும். 2019-2030 காலப்பகுதிக்கான நேரடி மற்றும் பொழுதுபோக்கு திட்டமிடல் 25ஆம் இலக்க தேசப்படத்திலும், 12ஆம் இலக்க அட்டவணையிலும், 05ஆம் இலக்க இணைப்பிலும் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல 12: வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம், உத்தேச நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்கான திட்டம் (2019 – 2030)**

| தொ இல | பூங்கா வகை | பரப்பளவு (ஹெ) |
|---|---|---|
| 1. | உத்தேச சனசமூக பூங்கா<br>Proposed Community Parks (PCP) | 3.09 |
| 2. | உத்தேச நீள்வரிப் பூங்கா<br>Proposed Linear Park (PLiP) | 31.56 |
| 3. | உத்தேச கடற்கரை பூங்கா<br>Proposed Beach Park (PBP) | 3.31 |
| | மொத்தம் | **37.96** |
| 4. | தற்போதுள்ள பொது திறந்தவெளிகள் | 3.5 |
| | முழு மொத்தம் | **41.46** |

**1. உத்தேச நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதி திட்டத்திற்கான மூலோபாயங்கள்**

1.1 தற்போது காணப்படுகின்ற சகல விளையாட்டு மைதானங்கள், விளையாடக்கூடிய மற்றும் பொது திறந்த வெளிகளாக காணப்படுகின்ற வெற்றுக் காணிகளை முடிந்தவரையில் நேரடி பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல், வகைப்படுத்தல் மற்றும் மீள் அபிவிருத்தி.

1.2 பிரதேசத்தில் காணப்படும் சகல விளையாட்டு மைதானங்களையும் வசதிகளுடன் கூடியதாக மீள் அபிவிருத்தி செய்தல்.

1.3 காணிகள் மற்றும் உப பிரிவிடுகையின்போது ஒதுக்கப்படும் 10 சதவீதத்திற்குரிய திறந்தவெளிப் பிரதேசங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வலுவுக்கு கொண்டு வருதல் மற்றும் அத்தகைய காணிகளை திறந்த மற்றும் நேரடி பொழுதுபோக்கு நடவடிக்கைக்கான மட்டும் பயன்படுத்துதல்.

**1.4 சமூக ரீதியான பொழுதுபோக்கு வசதிகள்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சுற்றுலா தேவைப்பாடுகளுக்கு பொருந்தக்கூடிய தரத்திலான விளையாட்டுக் கழகங்கள், ஓய்வு விடுதிகள், பங்களாக்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணித்தல்.

**2. நீள்வரிப் பூங்கா எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தல்**

பிரதேசத்தில் காணப்படும் கால்வாய்கள், சிற்றாறுகள் மற்றும் ஆறுகளின் ஒதுக்கப் பிரதேசங்களை நீள்வரிப் பூங்காக்களாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதுடன், பிரதேசத்தின் மக்களுக்கு அவசியமான பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தல் அத்துடன் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல் காணப்படும் பிரதேசங்களில் அதனைக் கட்டுப்படுத்த பயன்படுத்தல்.

**3. 2030ஆம் ஆண்டளவில் வெப்பத்தைக் குறைக்கும் மூலோபாயங்கள்**

3.1 சகல அரசு மற்றும் அரசு சார்ந்த கட்டடங்களை நீலப்பசுமை எண்ணக்கருவுக்கு அமைய நவீனமயப்படுத்தல்.

3.2 சகல குடியிருப்புக்களையும் அலுவலகங்களையும் அமைக்கும்போது கூரையின் மீது பச்சைநிற கூரைச்சாளரம் அமைத்தல் மற்றும் அதன்மீது நீர்த்தூவல் (Water Sprinkler)

3.3 கட்டடங்களுக்கு வர்ணம் பூசும்போது இளநிறப் பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வு செய்தல். (சூழலுக்கு நேரொத்ததாக)

3.4 உத்தேச சகல வாகனத் தரிப்பிடங்களுக்கும் பசுமை தரிப்பிட எண்ணக்கருவினை அறிமுகம் செய்தல் மற்றும் தற்போதுள்ள வாகனத் தரிப்பிடங்களை பசுமை தரிப்பிடங்களாக மீளமைத்தல்.

3.5 நிலச் செப்பனிடலை நீர் ஊடுகடத்தும் முறைக்கு முறைக்கு மட்டுப்படுத்தல் (interlocking) மற்றும் இளநிற பூச்சுக்களை மட்டும் பயன்படுத்தல்.

3.6 தற்போதுள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்ளுதல்.

**4. உத்தேச மரநடுகைப் பிரதேசங்கள்**

i. பழைய காலி வீதி
ii. ஹெட்டிவீதிய தெரு
iii. ஹெட்டி வீதி சந்தியிலிருந்து அக்குரெஸ்ஸ வீதி வரை
iv. புஹாரி மஸ்ஜித் வீதி

**உத்தேச மரங்கள்**

i. *Peltophorum inerme*
ii. *Delonix regia*
iii. *Murraya paniculata*
iv. *Barringtonia asiatica*
v. *Thespesia populnea*
vi. *Pisonia alba*

## தேசப்பட இல 25: நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு வசதிகளுக்கான திட்டம் -2030




**தொடர்பு**

| | |
|---|---|
| தற்போதுள்ள சிறிய பூங்காக்கள் | தற்போதைய பூங்கா சேவைப் பிரதேசங்கள் |
| மர நீள்வரித் துண்டு | உத்தேச நீள்வரிப் பூங்கா |
| புலக் காட்சி | உத்தேச மர நீள்வரித் துண்டு |
| உத்தேச சனசமூக பூங்கா | உத்தேச கடற்கரைப் பூங்கா |
| உத்தேச பூங்கா சேவைப் பிரதேசங்கள் | |

N W E S

1:16,000

**உத்தேச நேரடி மற்றும் மறைமுக பொழுதுபோக்கு திட்டம்**
**வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசம் - 2030**
வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**தேசப்பட இல: 25**

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர
அபிவிருத்தி
அதிகார
சபை

## 6.6 கலாசார மரபுரிமை முகாமைத்துவ மூலோபாயம்

வெலிகம நகரசபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வரலாற்று ரீதியாகவும், கட்டடக்கலை ரீதியாகவும் முக்கியத்துவம் பெறும் சில இடங்களும் கட்டடங்களும் காணப்படுகின்றன. இவற்றில் அக்ரபோதி விகாரை பௌத்தர்களுக்கு சிறப்புக்குரியதாக உள்ளது. இந்த விகாரையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட அர்ப்பணங்கை தொல்பொருள் அனுராதபுரம் யுகத்திற்கு உரியதாக இருப்பதோடு, படிகக்கல்லால் ஆக்கப்பட்டுள்ள இந்த அர்ப்பணங்கை இலங்கையில் தற்போது காணப்படும் மிகவும் அழகானது என "மாத்தறை" எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்ரபோதி விகாரை இரண்டாம் பேதிஸ்ஸ மன்னனி காலத்தில் கட்டுவிக்கப்பட்டதாகும். மேலும், வரலாற்றுச் சிறப்புள்ள அவலோகதீசுவர போதிசத்துவரின் சிலை வெலிகம குட்டராசக் கல் அமைந்துள்ள பிரதேசத்தில் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்பு பற்றி சுற்றலாப் பயணிகளை விழிப்புணர்வு செய்வதன் மூலம் சுற்றுலா நடவடிக்கைகளின் மேம்பாட்டுகளின் மேம்பாட்டுக்கும் அதனைப் பயன்படுத்தலாம். அதன்படி, கும்பல்பம சந்தியிலிருந்து பழைய காலி வீதி ஊடாக குட்டராசல் கல் பிரதேசத்திற்கும், அதிலிருந்த அக்ரபோதி விகாரையை அண்டிய பிரதேசத்தின் ஊடாக திருவாலம் கோவில் வரை நடந்துச் செல்லக்கூடிய நிழல் தரும் மரங்கள் கொண்ட ஒழங்கை போக்குவரத்து திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வெலிகம பிரதேசத்தில் வரலாற்று ரீதியாகவும், கட்டடக்கலை ரீதியாகவும் முக்கியத்துவம் பெறும் இடங்களா அக்ரபோதி விகாரை, குட்டராசக் கல், மெதடிஸ் தேவாலயம் மற்றும் திருவாலம் கோவில் என்பன தேசப்பட இலக்கம் 26இல் காட்டப்பட்டுள்ளன.


## 6.7 நடைமுறைப்படுத்தும் மூலோபாயம்

வெலிகம அபிவிருத்தி திட்டத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்வதற்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டம் தேசப்பட இலக்கம் 27 மற்றும் அட்டவணை இலக்கம் 13இல் தரப்பட்டுள்ளது.

## தேசப்பட இல 26: முகாமைத்துவம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் கட்டடங்கள்



## தேசப்பட இல 27: வெலிகம நகர சபையின் ஆளுகைப் பிரதேசம் - உத்தேச அபிவிருத்தி கருத்திட்டம்




**தொடர்பு**

- வர்த்தக அபிவிருத்தி கருத்திட்டங்கள்
- நகர மீள் அபிவிருத்தி கருத்திட்டம்
- உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள்
- சுற்றுலா மேம்பாட்டு கருத்திட்டங்கள்
- இயற்கை நீச்சல் தடாகம்
- திறந்த வெளி அபிபிருத்தி கருத்திட்டங்கள்
- வாடிவீடு மீள் அபிவிருத்தி கருத்திட்டம்
- பல்வித போக்குவரத்து நிலையம்
- மிதித்தேறி நின்று மீன்பிடித்தல்
- அலுவலக கட்டடத் தொகுதி
- சாக்கடை மீள்சுழற்சி கருத்திட்டம்
- கடற்கரைப்பூங்கா
- காட்சிப் புலம்
- சூழல்நேய கருத்திட்டம்
- விளையாட்டு மைதானம், பொழுதுபோக்கு

1:16,000

**உத்தேச அபிவிருத்தி கருத்திட்டம் - வெலிகம நகர சபையின் ஆளுகைப் பழரதேசம் - 2030**

வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)

நகர அபிவிருத்தி அதிகாரசபை

தேசப்பட இல: 27

தயாரித்தல் - 2018 டிசம்பர் 10
இற்றைப்படுத்தல் - 2019
மூலம் - ந.அ.அ.ச மாத்தறை காரியாலயம்
தயாரித்தது - ஜே. ஓ. பி. ஜீவந்தர

நகர அபிவிருத்தி அதிகார சபை

### 6.7.1 மூலோபாய கருத்திட்டம்

உத்தேச அபிவிருத்தி கருத்திட்டங்கள் தேசப்பட இலக்கம் 28இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இல 13: மூலோபாய மற்றும் ஏனைய கருத்திட்டங்கள்**

| தொ இல | கருத்திட்டத்தின் பெயரும் விபரமும் | அமைவு | உரிமம் | காணி அளவு | நிதி மூலம் | மேலோட்ட மதிப்பீடு ரூபா.மி | பொறுப்பு நிறுவனம் | கருத்திட்டக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குறுங் | நடுத்தர | நீண்ட |
| 01 | கால்வாய் அபிவிருத்தி (அக்ரபோதி கால்வாய், யான் ஓயா கால்வாய், பொல்கந்தான் கால்வாய், குட்செட் கால்வாய்) | நகரத்தின் மத்திய பகுதி | நகர சபை நீர்ப்பாசனத் திணைக்களம் | - | திறைசேரி நிதி | 200.0 | நகர சபை நீர்ப்பாசனத் திணைக்களம் | ✓ | | |
| 02 | நகரப் பூங்கா<br>• கப்பரதொட்ட தொடக்கம் பெலேன வரையான கடற்கரை பரப்பை அபிவிருத்தி செய்தல்.<br>(I மற்றும் II ஆம் கட்டகங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. III, IV ஆம் கட்டகங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். | காலி-மாத்தறை பிரதான வீதி மற்றும் கடற் கரையை அண்டிய நீள்வரி காணித் துண்டு | வீதி அபிவிருத்தி அதிகாரசபை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் பிரதேச செயலகம் | 15 ஏக்கர் | திறைசேரி நிதி | 50.0 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் பிரதேச செயலகம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை வெலிகம பிரதேச செயலகம் வெலிகம நகர சபை நகர அபிவிருத்தி அதிகாரசபை | | ✓ | |

| தொ இல | கருத்திட்டத்தின் பெயரும் விபரமும் | அமைவு | உரிமம் | காணி அளவு | நிதி மூலம் | மேலோட்ட மதிப்பீடு ரூபா.மி | பொறுப்பு நிறுவனம் | கருத்திட்டக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குறுங் | நடுத் தர | நீண்ட |
| 03 | சாக்கடைத் தொகுதி நிர்மாணம் | வலான வைத்தியசாலை அருகிலுள்ள வெற்றுக் காணி | அரசு | றூட் 2.0 | திறைசேரி நிதி | 300.0 | வெலிகம நகர சபை<br>மத்திய சுற்றாடல் அதிகார சபை<br>வெலிகம பிரதேச செயலகம் | | ✓ | |
| 04 | பல்வித போக்குவரத்து மற்றும் வர்த்தக அபிவிருத்தி கருத்திட்டம்<br>• பெருந்து தரிப்பிடம், வர்த்தக கட்டடத்தொகுதி நிர்மாணம்.<br>• புகையிரத நிலைய மீள் அபிவிருத்தி கருத்திட்டம்.<br>• வாகனத் தரிப்பிடங்களை நிர்மாணித்தல்.<br>• உத்தியோகபூர்வ இல்லங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான அறை வசதிகள் | நகரத்தின் மத்திய பகுதி | புகையிரத திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>நகர சபை<br>பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | சுமார் 03 ஏக்கர் | திறைசேரி நிதி | 1863.0 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>வெலிகம நகர சபை<br>வெலிகம பிரதேச செயலகம்<br>புகையிரத திணைக்களம் | | | ✓ |

| தொ இல | கருத்திட்டத்தின் பெயரும் விபரமும் | அமைவு | உரிமம் | காணி அளவு | நிதி மூலம் | மேலோட்ட மதிப்பீடு ரூபா.மி | பொறுப்பு நிறுவனம் | கருத்திட்டக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குறுங் | நடுத் தர | நீண்ட |
| 05 | வீதி அபிவிருத்தி கருத்திட்டம். இரண்டு ஒழுங்கைகள் கொண்டதாக அகலமாக்க வேண்டிய வீதிகள் (கொழும்பு – மாத்தறை பிரதான வீதி, வெலிகம – அக்குரெஸ்ஸ வீதி, வஜிரஞான மாவத்தை, பொராள வீதி, கப்பரதொட்ட சுற்றுவட்ட வீதி) 04 ஒழுங்கைகள் கொண்டதாக அகலமாக்க வேண்டிய வீதிகள் (பலல்ல வீதி, பண்டாரநாயக மாவத்தை, கூடலுமுல்ல வீதி) | நகர மத்திய பகுதி | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | - | திறைசேரி நிதி | 1500.0 | வெலிகம நகர சபை<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | | ✓ |
| 06 | கப்பரதொட்ட இறங்குதுறை சார்ந்த அபிவிருத்தி கருத்திட்டம்<br>உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கை மேம்பாட்டு நிலைய நிர்மாணம் | கப்பரதொட்ட இறங்குதுறையை சார்ந்த பிரதேசம் | நாரா நிறுவனம் | - | திறைசேரி நிதி | 1500.0 | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>வெலிகம நகர சபை<br>நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>நாரா நிறுவனம்<br>வெலிகம பிரதேச செயலகம் | | ✓ | |


| தொ இல | கருத்திட்டத்தின் பெயரும் விபரமும் | அமைவு | உரிமம் | காணி அளவு | நிதி மூலம் | மேலோட்ட மதிப்பீடு ரூபா.மி | பொறுப்பு நிறுவனம் | கருத்திட்டக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குறுங் | நடுத்தர | நீண்ட |
| 07 | அலுவலக கட்டத் தொகுதி கருத்திட்டம் நகரம் பூராகவும் வியாபித்துள்ள அரச நிறுவனங்களை ஓரிடத்தில் ஒருங்குசேர்த்தல் | நகர மத்திய பகுதி | கல்வி அமைச்சு | 01 ஏக்கர் | திறைசேரி நிதி | 80.0 | வெலிகம நகர சபை<br>வெலிகம் பிரதேச செயலகம்<br>நகர அபிவிருத்தி அதிகாரசபை | | ✓ | |
| 08 | கப்பரதொட்ட கடனீரேரியை ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக மேம்படுத்தல் | கப்பரதொட்ட கடனீரேரியை அண்டிய பிரதேசம் | அரசாங்கம் நகர சபை | 17 ஏக்கர் றூட் 0 பேச் 39.78 | திறைசேரி நிதி | 300.0 | வெலிகம நகர சபை<br>மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>வெலிகம் பிரதேச செயலகம் | | ✓ | |
| 09 | குட்டராசக் கல் சார்ந்த பிரதேசம், பசுமை ஒழுங்கை அபிவிருத்தி | கும்பல்கம் சந்தி தொடக்ம்க சுமங்கள வீதி வரை | வெலிகம நகர சபை | | திறைசேரி நிதி | 75.0 | வெலிகம நகர சபை<br>நகர அபிவிருத்தி அதிகாரசபை | | ✓ | |

| தொ இல | கருத்திட்டத்தின் பெயரும் விபரமும் | அமைவு | உரிமம் | காணி அளவு | நிதி மூலம் | மேலோட்ட மதிப்பீடு ரூபா.மி | பொறுப்பு நிறுவனம் | கருத்திட்டக் காலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | குறுங் | நடுத்தர | நீண்ட |
| 10 | சேனாநாயக விளையாட்டு மைதான அபிவிருத்தி | அக்ரபோதி விகாரை அருகில் | அரச | 01 ஏக்கர் | திறைசேரி நிதி | 200.0 | வெலிகம நகர சபை | | ✓ | |
| 11 | பார்வையாளர் அரங்கு நிர்மாணம் | கப்பரதொட்ட | தனியார் | றூட் 2.0 | திறைசேரி நிதி | 50.0 | வெலிகம நகர சபை | | | ✓ |

## கருத்திட்ட இல 01

| | |
|---|---|
| **கருத்திட்ட தலைப்பு** | கால்வாய் அபிவிருத்தி கருத்திட்டம் |
| **கருத்திட்டம்** | யான் ஓயா கால்வாய் மற்றும் அக்ரபோதி கால்வாய மற்றும் பொல்கந்தன் கால்வாய் அபிவிருத்தி |
| **கருத்திட்ட முன்மொழிவு** | தற்போதைய கால்வாய் புனரமைப்பும் அபிவிருத்தியும் |

### கருத்திட்ட அமைவு

| **இடம்** | **மாகாணம்** | **தென் மாகாணம்** | **மாவட்டம்** | **மாத்தறை** |
|---|---|---|---|---|
| | பிரதேச செயலகம் | வெலிகம் | உள்ளூராட்சி நிறுவனம் | வெலிகம ந.ச |
| **நுழைவிடம்** | யான் ஓயா கால்வாய் மற்றும் அக்ரபோதி கால்வாய் - காலி மாத்தறை பிரதான வீதி பொல்கந்தன் கால்வாய் - அக்குரெஸ்ஸ வெலிகம பிரதான வீதி | | | |
| **அமைவிட தேசப்படம்** |  | | | |
| **அயலிலுள்ள காணிப் பயன்பாடு (தேசப் படத்துடன் விளக்குக)** |  அக்ரபோதி கால்வாய் அதிரபோதி விகாரைக்கு அருகாமையில் ஆரம்பித்து வெலிகம கரையோரப் பூங்கா அபிவிருத்தியை திட்டத்தினால் மீன்சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்கு அருகாமையில் கடலுடன் கலக்கிறது. யான் ஓயா கால்வாய் அலைச்சறுக்கு விளையாட்டுக்காக இனங்காணப்பட்டுள்ள பெலேன பிரதேசத்தில் கடலுடன் கலக்கிறது. பொல்கந்தான் கால்வாய் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளதோடு அக்குரெஸ்ஸ வீதிக்கு அருகாமையில் உள்ள பொல்அத்துமோதர கங்கையில் கலக்கிறது. | | | |

## கருத்திட்ட நியாயப்படுத்தல்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கருத்திட்ட வகை** | புதிய | | மேம்படுத்தல் | ✓ | கருத்திட்டம் | | காணி அபிவிருத்தி மட்டும் | |
| **கருத்திட்ட வகை** | பாதுகாப்பு | வர்த்தக | நிலக்காட்சி, பொழுது போக்கு | | மரபு ரிமை | வீடு | மீட்டமைப்பு | உட்கட்டமைப்பு வசதி |
| | | | ✓ | | | | | |
| **கருத்திட்ட பிரிவு** | சுற்றாடல் | ✓ | பொருளாதாரம் | | | | சமூக | ✓ |
| **கருத்திட்டத்தின் நோக்கங்கள்** | தற்போது அசுத்தமடைந்துள்ள நீரை முற்றிலும் அகற்றுதல். அனுமதியின்றி இணைக்கப்பட்டுள்ள கழிவு நீரைத் தாங்கிவரும் குழாய்களை அகற்றுதல். மழை நீர் மாத்திரம் வழிந்தோடக் கூடிய வகையில் கால்வாயை அபிவிருத்தி செய்தல். வசிப்பதற்கு பொருத்தமான சுற்றாடலை கட்டியெழுப்புதல். | | | | | | | |
| **கருத்திட்டத்தின் தேவை** | வெலிகம நகரம் தென் மாகாணத்தில் காணப்படும் சுற்றுலா நகரங்களில் அலைச்சறுக்கு விளையாட்டுக்கு மிகவும் உசிதமான சுற்றாடலைக் கொண்ட ஒரு சுற்றுலா நகரமாகும். இங்கு நாளாந்தம் 50,000 மேற்பட்டோர் சஞ்சாரம் செய்கின்றன. இப்பிரதேசத்தில் மழைநீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகால் தொகுதி மூலம் மழைநீர் உரிய முறையில் வழிந்தோடாத காரணத்தினாலும், இப்பிரதேசத்திற்கு சாக்கடை தொகுதி இன்மையாலும் நகரவாசிகளின் குடியிருப்புகளிலிருந்து அகற்றப்படும் கழிவு நீரும் சாக்கடைக் கழிவுகளும் அனுமதியின்றி இந்தக் கால்வாய்களுக்கு வெளியேற்றப்படுகின்றன. இதனால் சுற்றயல் பிரதேசங்களில் துர்நாற்றம் வீசுகின்றது. மேலும், இக்கால்வாய்கள் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கரையோர பரப்பில் கடலுடன் கலப்பதனால் கடல் நீர் மாசடையும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆகவே, சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக இந்தக் கால்வாய்க் கட்டமைப்பை உடனடியாக அபிவிருத்தி செய்ய வேண்டும். | | | | | | | |

## கருத்திட்ட விபரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கருத்திட்டக் காலம்** | **குறுங் காலம் (1வருடம்)** | ✓ | **நடுத்தர காலம் (1-3 வருடம்)** | ✓ | **நீண்ட காலம் (3 வருடம்)** | | **மொத்த மதிப்பீட்டுக் கிரயம்** | 200 மி |
| **நிதி** | திறைசேரி நிதி | | | | | | | |
| **கருத்திட்ட விபரம் (தேசப் படங்களுடன்)** |  | | | | | | | |

<table>
<tr><td></td><td>i. தற்போது அசுத்தமடைந்துள்ள நீரை முற்றிலும் அகற்றுதல்.<br>ii. அனுமதியின்றி இணைக்கப்பட்டுள்ள கழிவு நீரைத் தாங்கிவரும் குழாய்களை அகற்றுதல்<br>iii. மழை நீர் மாத்திரம் வழிந்தோடக் கூடிய வகையில் கால்வாயை அபிவிருத்தி செய்தல்.<br>iv. நகரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இணைப்பாக்கத்துடன் பின்தொடர் ஆராய்வு அலகினைத் தாபித்தல்.</td></tr>
<tr><td colspan="2">தற்போதைய நிலை<br><br>நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான கருத்திட்டத்தினால் மழைநீர் வழிந்தோடுவதற்காக யான் ஓயா கால்வாய், அக்ரபோதி கால்வாய் மற்றும் பொல்கந்தான் கால்வாய் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதும் அவற்றினூடாக நீர் உரிய முறையில் வழிந்தோடாத காரணத்தினால் வருடம் பூராகவும் நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. மேலும், கால்வாய் அபிவிருத்தியின்போது பாதுகாப்பு மூலோபாயங்கள் பின்பற்றப்படாததால் மக்களின் பாதுகாப்பிலும் சிக்கல் தோன்றியுள்ளது.</td></tr>
</table>

**கருத்திட்டத்தி ன் வரவு செலவுத் திட்டம்**

| | |
|---|---|
| **அண்ணளவான மதிப்பீடு** | **ரூபா. 200.0 மி** |

## கருத்திட்ட இல 02

| கருத்திட்ட தலைப்பு | சுற்றுலா மேம்பாட்டு கருத்திட்டம் |
|---|---|
| கருத்திட்டம் | வெலிகம் கரையோரப் பூங்கா அபிவிருத்தி கருத்திட்டம் |
| கருத்திட்ட முன்மொழிவு | கப்பரதொட்ட தொடக்கம் பெலேன வரையான கடற்கரைப் பரப்பை அபிவிருத்தி செய்தல் |

**கருத்திட்ட அமைவு**

| இடம் | மாகாணம் | தென் மாகாணம் | மாவட்டம் | மாத்தறை |
|---|---|---|---|---|
| | பிரதேச செயலகம் | வெலிகம் | உள்ளூராட்சி நிறுவனம் | வெலிகம ந.ச |
| எல்லை | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| | புதிய காலி வீதி | பே விவ் ஹோட்டல் | கடல் | பள்ளி வாசல் |
| நுழைவிடம் | காலி மாத்தறை பிரதான வீதி | | | |
| அமைவிட தேசப்படம் |  | | | |
| அயலிலுள்ள காணிப் பயன்பாடு (தேசப் படத்துடன் விளக்குக) |  உத்தேச கருத்திட்ட வளாகம் காலி - மாத்தறை பெருந்தெருவுக்கும் கரையோர பரப்புக்கும் இடைப்பட்டதாக அமைந்துள்ளது. | | | |


**கருத்திட்ட நியாயப்படுத்தல்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கருத்திட்ட வகை** | புதிய | ✓ | மேம்படுத்தல் | | கருத்திட்டம் | | காணி அபிவிருத்தி மட்டும் | |
| **கருத்திட்ட வகை** | பாதுகாப்பு | வர்த்தக | நிலக்காட்சி, பொழுது போக்கு | மரபுரிமை | வீடு | மீட்டமைப்பு | உட்கட்டமைப்பு வசதி | |
| | ✓ | | ✓ | | | | ✓ | |
| **கருத்திட்ட பிரிவு** | சுற்றாடல் | ✓ | பொருளாதாரம் | | சமூக | ✓ | | |
| **கருத்திட்டத்தின் நோக்கங்கள்** | ரம்மியமான கரையோர பரப்பினை உருவாக்குதல், பொழுதுபோக்கு வகதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல். | | | | | | | |
| **கருத்திட்டத்தின் தேவை** | வெலிகம கடல் பிரதேசம் வெலிகம குடாவை அண்டியதாக உள்ளதால் மெல்லலைகள் காணப்படுகின்றன. இது அலைச்சறுக்கு விளையாட்டுக்கு உகந்ததாக காணப்படுவதோடு ஆழமற்ற கடல் பிரதேசம் மீன்பிடி கைத்தொழிலுக்காக பயன்படுகின்றது. இப்பகுதியில் வாழும் மக்களில் 25 சதவீதமானோரின் பிரதான வருமான மார்க்கம் மீன்பிடி கைத்தொழிலாகவும், 28 சதவீதமானோர் சுற்றுலா நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். எவ்வாறாயினும், தற்போது இந்த பிரதேசம் மீன்பிடி கைத்தொழிலுக்கும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் கூடுதலாக பயன்படுத்தப்படுவதால் கரையோர வலயம் முறையற்ற விதத்தில் அபிவிருத்தி செய்யப்படுதல் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு சமூக ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், முறையற்ற இந்த அபிவிருத்தி கரையோர பரப்பு மாசடைவதற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் மீன்பிடி மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக கரையோர வலயத்தை திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி செய்தல் வேண்டும். | | | | | | | |

**கருத்திட்ட விபரம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **தற்போதைய காணி உரித்து** | தனியார் | | அரச | ✓ | ஏனைய | |
| **உரித்து விபரம்** | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | | | | | |
| **நில அளவைப் படத்தின் விபரம்** | **வரைபட இலக்கம்** | **நில அளவையாளரின் பெயர்** | | **திகதி** | **விஸ்தீரணம்** | |
| | | | | | | |

**கருத்திட்ட விபரம்**

<table>
<tr><td>கருத்திட்டக் காலம்</td><td>குறுங் காலம் (1வருடம் )</td><td></td><td>நடுத்தர காலம் (1-3 வருடம்)</td><td>✓</td><td>நீண்ட காலம் (3 வருடம்)</td><td></td><td>மொத்த மதிப்பீட்டுக் கிரயம்</td><td>60.0 மி</td></tr>
<tr><td>நிதி</td><td colspan="8">கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், திறைசேரி நிதி</td></tr>
<tr><td>கருத்திட்ட விபரம் (தேசப் படங்களுடன்)</td><td colspan="8"></td></tr>
<tr><td>உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்</td><td colspan="5">நீர்<br><br>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை</td><td colspan="3">மின்சாரம்<br><br>இலங்கை மின்சார சபை</td></tr>
<tr><td></td><td>திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ முறைமை</td><td>ஆம்</td><td>✓</td><td>இல்லை</td><td></td><td></td><td>பொருத்தமற்றது SWM முன்மொழிவைச் சமர்ப்பிக்கவும்</td><td></td></tr>
<tr><td>வலயம்</td><td colspan="3">சுற்றுலா வலயம்</td><td>பிராந்திய இயைபு</td><td>ஆம்</td><td>✓</td><td>இல்லை</td><td></td></tr>
<tr><td colspan="9">தற்போதய நிலை<br><br>வெலிகம கரையோர பூங்கா அபிவிருத்திக் கருத்திட்டத்தை 04 கட்டங்களின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, கரையோர பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தினதும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் நிதி ஏற்பாடுகளின் கீழ் 02 கட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 02 கட்டங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.</td></tr>
<tr><td colspan="9">தற்போதய நிலை<br><br>நிழற்படம்</td></tr>
</table>






**கருத்திட்டத்தின் வரவு செலவுத் திட்டம்**

| செயற்பாடு | செலவு (ருபா மி) |
| --- | --- |
| மொத்த செலவினம் (கட்டம் III மற்றும் IV) | 60.0 |

**ஏற்புடைய நிறுவனங்கள்**

| செயற்பாடு | சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் | பொறுப்புடைய நிறுவனங்கள் |
| --- | --- | --- |
| திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும். | • நகர அபிவிருத்தி அதிகார சபை<br>• கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>• வீதி அபிவிருத்தி அதிகாரசபை | • வெலிகம நகர சபை<br>• நகர அபிவிருத்தி அதிகார சபை<br>• கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் |


| | | |
|---|---|---|
| | • வெலிகம நகர சபை<br>• வெலிகம பிரதேச செயலகம் | • கரையோர சூழல் பாதுகாப்ப அதிகாரசபை |

| **ஒழுங்குவிதிகளும் வழிகாட்டியும்** | **சட்ட விதிகள்** | **வழிகாட்டல்** |
|---|---|---|
| கரையோரப பாதுகாப்பு மற்றும் கரையோர வலய முகாமைததுவ திட்டம்.<br>வெலிகம நகர அபிவிருத்தி திட்டம் | நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டவமைப்பு மற்றும் கட்டட ஒழுங்கு விதிகள் | அபிவிருத்தி திட்டத்தில் சுற்றுலா வலயத்திற்குரிய ஒழுங்குவிதிகள். கரையோரப் பாதுகப்புத் திணைக்களத்தின் விதப்புரைகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விதப்புரைகள். |

**கருத்திட்ட இலக்கம் 03**

| | |
|---|---|
| **கருத்திட்ட தலைப்பு** | **உத்தேச சாக்கடைத் தொகுதி** |
| **கருத்திட்டம்** | **உத்தேச சாக்கடைத் தொகுதி** |
| **கருத்திட்ட முன்மொழிவு** | ❖ **சாக்கடைத் தொகுதியை நிர்மாணித்தல்** |

**கருத்திட்ட அமைவு**

<table>
<tr><td rowspan="2">இடம்</td><td>மாகாணம்</td><td>தென் மாகாணம்</td><td>மாவட்டம்</td><td>மாத்தறை</td></tr>
<tr><td>பிரதேச செயலகம்</td><td>வெலிகம்</td><td>உள்ளூராட்சி நிறுவனம்</td><td>வெலிகம ந.ச</td></tr>
<tr><td>நுழைவிடம்</td><td colspan="4">வலான வைத்தியசாலை வீதி</td></tr>
<tr><td>அமைவிட தேசப்படம்</td><td colspan="4"><br></td></tr>
<tr><td>அயலிலுள்ள காணிப் பயன்பாடு (தேசப் படத்துடன் விளக்குக)</td><td colspan="4"><br>உத்தேச காணி வலான வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள வெற்றுக் காணியாக இருப்பதோடு, தற்போதுள்ள நிலப்பயன்பாட்டு கோலத்திற்கமைய வெற்றுக் காணியும் வயற் காணியும் உள்ளது. இதற்கு மேலதிகமாக பரவலான குடியிருப்புகளை காண முடியும்</td></tr>
</table>

### கருத்திட்ட நியாயப்படுத்தல்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கருத்திட்ட வகை** | புதிய | ✓ | மேம்படுத்தல் | | கருத்திட்டம் | | காணி அபிவிருத்தி மட்டும் | |
| **கருத்திட்ட வகை** | பாதுகாப்பு | வர்த்தக | நிலக்காட்சி, பொழுது போக்கு | மரபுரிமை | வீடு | மீட்டமைப்பு | உட்கட்டமைப்பு வசதி | |
| | | | ✓ | | | | ✓ | |
| **கருத்திட்ட பிரிவு** | சுற்றாடல் | ✓ | பொருளாதாரம் | ✓ | சமூக | ✓ | | |
| **கருத்திட்டத்தின் நோக்கங்கள்** | • முறையான சாக்கடைத் தொகதியை அறிமுகப்படுத்தல்<br>• தற்போதுள்ள வடிகால் முறைமையை சுற்றாடல் ஈர்ப்பு கொண்டதாக அபிவிருத்தி செய்தல் | | | | | | | |
| **கருத்திட்டத்தின் தேவை** | நகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு உரிய முறையில் சாக்கடை தொகுதிகள் அமைக்கப்படாமையால் சாக்கடைக் கழிவுகள் அங்குள்ள கால்வாய்களுக்கு அகற்றப்படுகின்றன. இதனால் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுகிறது. | | | | | | | |

### கருத்திட்ட விபரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **தற்போதைய காணி உரித்து** | தனியார் | | அரச | ✓ | ஏனைய | |

### கருத்திட்ட விபரம

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கருத்திட்டக் காலம்** | **குறுங் காலம் (1வருடம்)** | | **நடுத்தர காலம் (1-3 வருடம்)** | ✓ | **நீண்ட காலம் (3 வருடம்)** | | **மொத்த மதிப்பீட்டுக் கிரயம்** | 300 மி |
| **நிதி** | பொது திறைசேரி நிதி | | | | | | | |
| **உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்** | **நீர்**<br>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | | | | **மின்சாரம்**<br>இலங்கை மின்சார சபை | | | |
| **வலயம்** | வதிவிட வலயம் | | பிராந்திய இயைபு | | ஆம் | ✓ | இல்லை | |
| **தற்போதய நிலை**<br>**நிழற்படம்** | | | | | | | | |



### கருத்திட்டத்தின் வரவு செலவுத் திட்டம்

| செயற்பாடு | செலவு (ருபா மி) |
|---|---|
| சாக்கடைத் தொகுதியை நிர்மாணித்தல் | 300.0 |


### அங்கீகரிக்கும் நிறுவனங்கள்

| செயற்பாடு | சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் | பொறுப்புடைய நிறுவனங்கள் |
|---|---|---|
| சாக்கடைத் தொகுதியை நிர்மாணித்தல் | • வெலிகம நகர சபை<br>• மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>• தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை<br>• நீர்ப்பாசனத் திணைக்களம் | • வெலிகம நகர சபை<br>• மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>• தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை |

**கருத்திட்ட இலக்கம் 04**

| கருத்திட்ட தலைப்பு | வெலிகம நகர மத்திய பிரதேச அபிவிருத்தி |
|---|---|
| **கருத்திட்டம்** | **பல்வித போக்குவரத்து நிலையங்கள், வர்த்தக அபிவிருத்தி கருத்திட்டம்.** |
| **கருத்திட்ட முன்மொழிவு** | ❖ மெத மாவத்தையிலிருந்து அக்குரெஸ்ஸ வீதி வரை மேம்பாலம் அமைத்தல்.<br>❖ பேருந்து தரிப்பிடம் மற்றும் வர்த்தகக் கட்டடத் தொகுதி நிர்மாணம்.<br>❖ வாகனத் தரிப்பிடங்களை அமைத்தல்<br>❖ புகையிரத நிலைய மீள் அபிவிருத்தி கருத்திட்டம்<br>❖ உத்தியோகபூர்வ இல்லங்களை அமைத்தல்<br>❖ உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான அறை வசதிகள் |

**கருத்திட்ட அமைவு**

| இடம் | மாகாணம் | தென் மாகாணம் | மாவட்டம் | மாத்தறை |
|---|---|---|---|---|
| | பிரதேச செயலகம் | வெலிகம் | உள்ளூராட்சி நிறுவனம் | வெலிகம ந.ச |
| **எல்லை** | **வடக்கு** | **கிழக்கு** | **தெற்கு** | **மேற்கு** |
| | புகையிரத வீதி, வஜிரஞான மாவத்தை | புஹாரி மஸ்ஜித் வீதி | ஹேட்டி வீதி | அக்குரெஸ்ஸ வீதி, புகையிரத நிலைய வீதி |
| **நுழைவிடம்** | | | | |
| **அமைவிட தேசப்படம்** |  | | | |
